# புதிய ஜனநாயகம்

ஜூன் 2013
ரூ.10.00




சத்தீஸ்கர் தாக்குதல்:

## அரசு பயங்கரவாதத்துக்கு மாவோயிஸ்டுகளின் பதிலடி!

# போஸ்கோவின் அடியாளாக இந்திய அரசு!

**போஸ்கோ நிறுவனத்துக்காக சட்டவிரோத நில அபகரிப்பையும் போராடும் மக்கள் மீது போலீசு தாக்குதலையும் ஒடிசா அரசு கட்டவிழ்த்துவிட்டுள்ளது.**



கடந்த பிப்ரவரி மாதம் முதலாக ஒடிசா மாநிலம், ஜெகத்சிங்பூர் மாவட்டத்தின் தின்கியா பஞ்சாயத்தைச் சேர்ந்த கிராம மக்கள், தென் கொரியாவின் ஏகபோக எஃகு நிறுவனமான போஸ்கோவின் நில ஆக்கிரமிப்புக்கும் போலீசின் அடக்குமுறைக்கும் எதிராக ''எங்கள் நிலத்தை ஆக்கிரமிக்காதே!'' எனும் முழக்கத்தோடு தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

ஒடிசாவின் ஜெகத்சிங்பூர் மாவட்டத்தில் தென் கொரிய எஃகு நிறுவனமான போஸ்கோவின் ஒருங்கிணைந்த எஃகு ஆலையை நிறுவுவதற்காக கடந்த 2005-ஆம் ஆண்டில் ஒடிசா அரசுக்கும் போஸ்கோ நிறுவனத்திற்கும் இடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இதன்படி போஸ்கோ நிறுவனம், சுமார் 52,000 கோடி ரூபாய் மதிப்பில் ஆண்டுக்கு 12 மில்லியன் டன் எஃகு உற்பத்தி செய்யும் ஆலையையும், அதற்கென ஒரு தனிப்பட்ட மின் உற்பத்தி நிலையம் மற்றும் தனிப்பட்ட துறைமுகம் ஒன்றையும் அமைத்துக் கொள்ளும். இந்த திட்டத்திற்காக ஒடிசா அரசு, 2010-ஆம் ஆண்டுக்குள் தின்கியா, கடகுஜங்கா, நுவாகோன் ஆகிய கிராம பஞ்சாயத்துகளுக்கு உட்பட்ட 4000 ஏக்கர் விளைநிலத்தை போஸ்கோ நிறுவனத்திற்கு அபகரித்துக் கொடுக்கும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. போஸ்கோ திட்டத்தால் தங்களது எதிர்கால வாழ்வு நாசமாக்கப்படுவதை எதிர்த்து இப்பகுதிவாழ் விவசாயிகள் கடந்த எட்டாண்டுகளாகப் போராடி வருகின்றனர்.

கடந்த ஜனவரி 31, 2011 அன்று போஸ்கோ திட்டத்திற்கு சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் அளித்துள்ள ஒப்புதல் செல்லாது என்று 2012 மார்ச் 30 அன்று அதை ரத்து செய்துள்ளது தேசிய பசுமைத் தீர்ப்பாயம். மேலும், விதிப்படி உள்ளூர் பஞ்சாயத்தின் ஒப்புதலும் இத்திட்டத்துக்கு அளிக்கப்படவில்லை. கடந்த 2005-ஆம் ஆண்டு போடப்பட்ட இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் 2010-இல் காலாவதியாகி விட்டது. இது தவிர போஸ்கோவிற்கு எதிரான வழக்குகள் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன. இருப்பினும், மிகப்பெரிய அந்நிய நேரடி முதலீட்டுத் திட்டம் என்று கூறி பிரதமர் அலுவலகமே நேரடியாகத் தலையிட்டுச் செயல்படுத்துவதால், இரட்டிப்பு வெறியோடு நில அபகரிப்பையும் அடக்குமுறைகளையும் கேள்விமுறையின்றி ஏவிவருகிறது, ஒடிசா மாநில அரசு.



தொழில் வளர்ச்சி என்ற பெயரில் தமது நிலங்கள் அபகரிக்கப்படுவதை எதிர்த்துநாட்டின் பல்வேறு பகுதிகளில் விவசாயிகளும் பழங்குடியின மக்களும் போராடிய நிலையில், குறிப்பாக சிங்கூர் - நந்திகிராமத்தில் விவசாயிகளின் எழுச்சி பரவிய நிலையில், நிலம் கையகப்படுத்தும் சட்டத்தில் திருத்தங்கள் செய்து புதிய சட்டத் திருத்த மசோதாவையும், மறுகுடியமர்வு மற்றும் மறுவாழ்வுக்கான புதிய சட்ட மசோதாவையும் மைய அரசு கொண்டுவந்தது. இவை நாடாளுமன்றத்தில் நிறைவேறும் முன்னரே ஒடிசாவின் தின்கியா பஞ்சாயத்திலுள்ள கிராமங்களில் பழைய சட்டத்தின் வழியிலேயே - அதே சிங்கூர் பாணி ஆக்கிரமிப்பை கடந்த பிப்ரவரி 2-ஆம் தேதியிலிருந்து போலீசையும் புல்டோசர்களையும் கொண்டு நடத்தி வருகிறது ஒடிசா அரசு. போராடும் இம்மக்களின் வாழ்வாதாரமான வெற்றிலைக் கொடிக்கால்களை வேரோடு பிடுங்கி எறிந்து வெறியாட்டம் போட்டுள்ள போலீசு, இக்கிராமங்களின் மக்களை நடமாடக்கூட விடாமல் முடக்கி வைத்துள்ளதோடு, இம்மக்கள் மீது நூற்றுக்கணக்கான பொய்வழக்குகளைப் போட்டு வதைத்து வருகிறது.

இத்தனையும் போதாதென்று, அமைதி வழியில் போராடிவரும் இம்மக்களை வன்முறையாளர்களாகவும், தீவிரவாதிகளாகவும் காட்டி அடக்குமுறையை நியாயப்படுத்தும் நோக்கில் அரசும் போலீசும் ஒரு சதியை அரங்கேற்றின. கடந்த மார்ச் மாதம் 2-ஆம் தேதி அன்று மாலை

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்...

# புதிய ஜனநாயகம்

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 28 இதழ்: 8

ஜூன் 2013

உள்நாடு

தனி இதழ்: ரூ.10.00

ஆண்டு சந்தா: ரூ.120.00

வெளிநாடுகள்

(வான் அஞ்சலில்)

ஆண்டு சந்தா: US $ 20

அட்டை வடிவமைப்பு: *முகிலன்*

தொடர்பு முகவரி:

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

மின்னஞ்சல்:
puthiyajananayagam@gmail.com

தொலைபேசி: 94446 32561


## அரசுப் பள்ளிகளில் ஆங்கிலவழி வகுப்புகள்:

# தமிழ், தமிழர் மீதான பார்ப்பன ஜெயாவின் தாக்குதலை முறியடிப்போம்!

கழிப்பறைகளும் ''டாஸ்மாக்'' கடைகளும் திறந்துவைப்பது தவிர தமிழக முதல்வர் ''புரட்சித்தலைவி அம்மா'' உத்திரவில்லாத அரசு நடவடிக்கை என்பதாக ஊடகங்களில் அறிவிக்கை எதுவுமே வருவதில்லை. பேச்சிப்பாறை - மணிமுத்தாறு கால்வாயின் மதகு திறப்புக்கூட தமிழக முதல்வர் ''புரட்சித்தலைவி அம்மா'' உத்திரவின் பேரில் நடப்பதாகத்தான் அறிவிக்கைகள் வருதுண்டு. ஆனால், ''கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் அனைவரும் இனித் தமது உள்தேர்வுகளை ஆங்கிலத்தில் மட்டுமே எழுத வேண்டும் என்ற உத்திரவை எனது கவனத்திற்குக் கொண்டு வராமலேயே தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் வெளியிட்டுவிட்டது. இந்த உத்திரவைத் திரும்பப்பெற நான் ஆணையிட்டுள்ளேன். ஆங்கிலம் அல்லது தமிழ் என எந்த மொழிவழியில் பயின்றாலும், மாணவர்கள் தமிழில் உள்தேர்வுகளை எழுத அனுமதிக்கப்பட வேண்டும் என்பதுதான் எனது எண்ணம். அவ்வாறு உள் தேர்வுகளைத் தமிழில் எழுத அனுமதிக்குமாறு நான் அரசு உயர் அதிகாரிகளுக்கு உத்திரவிட்டுள்ளேன். எனவே, அனைத்து மாணவர்களும் உள்தேர்வுகளை அவரவர் விருப்பப்படி தமிழிலோ ஆங்கிலத்திலோ எழுதலாம்'' என்று அறிக்கை வெளியிட்டுள்ளார், ஜெயலலிதா.

அனைத்து மாணவர்களும் உள்தேர்வுகளை மட்டுமல்ல, பொதுத்தேர்வுகளையே அவரவர் விருப்பப்படி தமிழிலோ ஆங்கிலத்திலோ எழுதலாம் என்பதுதான் ஏற்கெனவே இருந்த நிலை. இதை ஜெயலலிதாவின் கவனத்துக்குக் கொண்டுவராமலேயே அதிகாரிகள் மாற்றிவிட்டார்களாம்; கேழ்வரகில் நெய் வடிகிறதென்றால் நம்புவதற்கு தமிழக மக்கள் ஒன்றும் அ.தி.மு.க.காரர்களைப் போன்றவர்கள் அல்ல! எலிப்பொந்தில் வாலை விட்டுப் பார்க்கும் நரியைப் போல சில வாரங்களுக்கு முன்புதான், அனைத்து அரசுப் பள்ளிகளிலும் எல்லா மட்டங்களிலும் ஆங்கிலப் பயிற்றுமொழி வகுப்புகள் தொடங்கப்படும் என்று அறிவித்திருந்தது, ஜெயலலிதா அரசு. தமிழினவாதக் குழுக்கள் ஜெயலலிதாவின் நம்பகமான விசுவாசிகளாகிவிட்ட நிலையில், கருணாநிதியின் ஈனக் குரலிலான எதிர்ப்பு மட்டுமே கிளம்பியது. இதனால், துணிச்சலுற்ற ஜெயலலிதா அரசு தமிழர்க்கும், தமிழுக்கும் எதிரான தாக்குதலுக்கு மீண்டும் துணிந்து, ஆங்கிலவழிக் கல்வித் திணிப்புக்கான வேலைகளில் குதித்தது. ஆனால், ஜெயலலிதாவின் எத்தணிப்புகளுக்கு எதிராக கருணாநிதியின் தொடர் கண்டன அறிக்கைகளும் உளவுத்துறைத் தகவல்களும் வந்ததால், இப்போதைக்குப் பின்வாங்கியுள்ளது.

சமச்சீர்க் கல்வி ஒழிப்பு, மதமாற்றத் தடைச் சட்டம், கிடா வெட்டத் தடைச் சட்டம், சேதுசமுத்திரக் கால்வாய்த் திட்ட முடக்கம், ஈழ எதிர்ப்பு, பாபர் மசூதி இடிப்பில் பங்கேற்பு, நரேந்திர மோடியுடன் கூட்டு என்று தனது கோரமுகத்தை அவ்வப்போது காட்டும் ஜெயலலிதா பார்ப்பன பாசிசக் கொள்கை, கோட்பாடுகளை ஒருபோதும் கைவிடமாட்டார்; ஒருபுறம், தமிழாய்வு நிறுவன முடக்கம், ஆங்கிலவழிக் கல்வித் திணிப்பு; மறுபுறம் நூறு கோடி ரூபாயில் தமிழ்த் தாய்க்குச் சிலை, தமிழ்ப் பூங்கா என்று தமிழ் மக்களை ஏய்க்கிறார். வெளிநாட்டு, வெளிமாநில வேலைவாய்ப்புகள் கொட்டிக் கிடப்பதாகவும் ஆங்கிலக் கல்வியால் அவற்றை அப்படியே கவ்விக் கொள்ளலாம் என்ற நடுத்தர வர்க்க மோகத்துக்குத் தொடர்ந்து பார்ப்பன ஊடகங்கள் தீனிபோடுகின்றன. ஓரளவு மக்கள் நலன் சார்ந்த சமச்சீர்க் கல்வி முறையை ஒழிப்பதில் தோற்றுப்போன ஜெயலலிதா அரசு, அனைத்து அரசுப் பள்ளிகளிலும் ஆங்கிலவழிக் கல்வியைத் திணித்துப் படிப்படியாக அதை விரிவுபடுத்தும் சதியில் இறங்கியுள்ளது. ஆரம்ப நிலையிலேயே, இச்சதியை உறுதியாக எதிர்த்துப் போராடி முறியடிக்க வேண்டும். ●

# அரசு பயங்கரவாதத்துக்கு மாவோயிஸ்டுகளின் பதிலடி!

**சத்தீஸ்கரில் கார்ப்பரேட் கொள்ளையும் அரசு பயங்கரவாதமும் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள நிலையில், அதற்குப் பதிலடியாக இத்தகைய சிவப்புப் பயங்கரவாதம் மேலும் மூர்க்கமாகத் தொடரவே செய்யும்.**

**ச**த்தீஸ்கர் மாநிலத்தின் பாசிச பயங்கரவாத குண்டர் படைத் தலைவனாகிய மகேந்திரசிங் கர்மா மாவோயிஸ்டுகளின் கோடையிடித் தாக்குதலில் அழித்தொழிக்கப்பட்டுள்ளான். அவன் மட்டுமின்றி, துணை ராணுவப் படைகளைக் குவித்து பழங்குடியின மக்கள் மீது அரசு பயங்கரவாதத் தாக்குதலைக் கட்டவிழ்த்துவிட்ட முன்னாள் உள்துறை அமைச்சரும் மாநில காங்கிரசுத் தலைவருமான நந்தகுமார் பட்டீல் உள்ளிட்டுப் பிரச்சார ஊர்தியில் சென்ற காங்கிரசுக் கட்சியினர் 27 பேர், கடந்த மே 25 அன்று தண்டேவாடா மாவட்டத்தின் வனப்பகுதியில் வழிமறிக்கப்பட்டுச் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

''மனிதத் தன்மையற்ற கொடூரங்கள், படுகொலைகள், முடிவில்லாத பயங்கரவாதத்தை பஸ்தார் பழங்குடியின மக்கள் மீது கட்டவிழ்த்து விட்ட சல்வாஜூடும் எனும் பாசிச குண்டர்படையின் தலைவன் எங்களால் அழித்தொழிக்கப்பட்டுள்ளான். ஆயிரக்கணக்கான பழங்குடி மக்கள் சல்வாஜூடும் குண்டர் படையாலும், அரசின் ஆயுதப் படைகளாலும் கொல்லப்பட்டதற்குப் பழிவாங்கவே நாங்கள் இத்தாக்குதலை நடத்தியுள்ளோம்'' என்று மாவோயிஸ்டு கட்சியின் சத்தீஸ்கர் மாநில தண்டகாரண்யா சிறப்புப் பிராந்தியக் கமிட்டி கடந்த மே26 அன்று வெளிப்படையாக அறிவித்துள்ளது.

2000-வது ஆண்டில் மத்தியப் பிரதேசத்திலிருந்து பிரிக்கப்பட்ட, கனிம வளங்கள் நிறைந்துள்ள சத்தீஸ்கர் மாநிலத்தைச் சூறையாடுவதற்காகவே, 'வளர்ச்சி' என்ற பெயரில் பழங்குடியின மக்கள் அவர்களின் மண்ணிலிருந்து விரட்டியடிக்கப்படுகின்றனர். கார்ப்பரேட் நிறுவனங்களின் சூறையாடலுக்காக, பழங்குடியினரின் நிலங்களைப் பறித்து அவர்களை நாடோடிகளாக வெளியேற்றினால்தான் இந்த 'வளர்ச்சி' சாத்தியப்படும். மாவோயிஸ்டுகளும் பழங்குடியினரும் இந்த 'வளர்ச்சி'யைத் தடுக்கிறார்கள். எனவேதான் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட துணை இராணுவப் படைகளைக் குவித்து, அவர்கள் மீது ''காட்டுவேட்டை'' என்ற பெயரில் பயங்கரவாதப் போரை அரசு தொடுத்து வருகிறது.

பழங்குடியின நிலப்பிரபு குடும்பத்தைச் சேர்ந்த மகேந்திர கர்மா, 1978-இல் வலது கம்யூனிஸ்டு எம்.எல்.ஏ.வாகவும், பின்னர் காங்கிரசில் சேர்ந்து 1996-இல் நாடாளுமன்ற உறுப்பினராகவும், அதன் பிறகு அன்றைய பிரிக்கப்படாத ம.பி.யில் அஜித் ஜோகி அரசாங்கத்தில் தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சராகவும், சத்தீஸ்கர் மாநிலம் உருவான பிறகு எதிர்க்கட்சியான காங்கிரசின் தலைவனாகவும் இருந்தவன். 90-களின் இறுதியில் சத்தீஸ்கரில் கனிம வளங்களைச் சூறையாட கார்ப்பரேட் நிறுவனங்கள் களமிறங்கியபோது, அவற்றுக்கு விசுவாச புரோக்கராகச் செயல்பட்டுவந்த இவன், பழங்குடியினரைக் கனிம வளமிக்க அவர்களின் மண்ணிலிருந்து விரட்டியடிப்பதற்காகவே அரசு மற்றும் கார்ப்பரேட் நிறுவனங்களின் ஆதரவோடும், காங்கிரசு மற்றும் பா.ஜ.க.வின் ஆசியோடும் 2005-இல் சல்வாஜூடும் குண்டர் படையைக் கட்டியமைத்தான். இப்பாசிச பயங்கரவாதக் குண்டர் படையினர் ''சிறப்பு காவல் அதிகாரிகள்'' என்று சத்தீஸ்கர் அரசால் அங்கீகரிக்கப்பட்டனர்.

சல்வாஜூடும் பயங்கரவாத கொலைகாரப் படையினரால் ஏறத்தாழ பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட பழங்குடியின மக்கள் கோரமாகக் கொல்லப்பட்டு, நூற்றுக்கணக்கான கிராமங்கள் தீயிடப்

தங்களது மண்ணைவிட்டு வெளியேற மறுக்கும் பழங்குடியினரின் வீடுகளையும் தானியங்களையும் கொளுத்திய சல்வாஜூடும் குண்டர் படையின் பயங்கரவாத அட்டூழியம்.



பட்டுச்சாம்பலாக்கப்பட்டுள்ளன. ஏறத்தாழ 20 லட்சம் மக்கள் கட்டாயமாக வெளியேற்றப்பட்டு நாடோடிகளாக்கப்பட்டுள்ளனர். 50,000-க்கும் மேலான மக்கள் அவர்களது வாழ்விடங்களிலிருந்து இழுத்துச் செல்லப்பட்டு கட்டாய நிவாரண முகாம்களில் அடைத்து வைக்கப் பட்டுள்ளனர். பல நூற்றுக்கணக்கான பெண்கள் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர். இவற்றில், மகேந்திர கர்மா தானே தலைமையேற்று வழிநடத்திய சூறையாடல்களும் அட்டூழியங்களும் ஏராளம். இதனாலேயே இவன் ‘‘பஸ்தார் புலி’’ என்று ஆளும் கும்பலால் அழைக்கப் பட்டான்.

நந்தினி சுந்தர் முதலான ஜனநாயக சக்திகள் உச்ச நீதிமன்றத்தில் சல்வாஜூடுமின் அட்டூழியங்களுக்கு எதிராக வழக்குகள் தொடுத்த பிறகு, சிறப்பு காவல் அதிகாரிகள் என்ற பெயரில் பழங்குடி இளைஞர்களை நக்சல்பாரிகளுக்கு எதிரான போரில் ஈடுபடுத்துவது சட்டவிரோதமானது என்று கூறி, சல்வாஜூடும் போன்ற அமைப்புகளைக் கலைக்குமாறு 2011-இல் உத்தவிட்டது உச்ச நீதிமன்றம். ஆனால் சத்தீஸ்கர் மாநில அரசோ, சத்தீஸ்கர் துணைப்படை, சிறப்புத் துணைப்படை, கோயா கமாண்டோ படை என்று பெயர் மாற்றி அக்குண்டர் படையை இன்றும்கூட நடத்திக் கொண்டு வருகிறது. சல்வாஜூடும் செய்த நூற்றுக்கணக்கான கொலைகள், வழக்குகளாக நீதிமன்றங்களில் உறங்கிக் கொண்டிருக்கின்றன.

சத்தீஸ்கரில் கார்ப்பரேட் நலன்களுக்காக ஒரு உள்நாட்டுப் போர் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள நிலையில், அரசியலமைப்புச்சட்டம் பழங்குடியினருக்கு வழங்கியிருக்கும் உரிமைகளை வலியுறுத்தி வழக்குகள் பதிவு செய்ததற்காக சத்தீஸ்கரின் காந்தியவாதியான ஹிமான்சு குமார் தண்டிக்கப்பட்டார். அவரது காந்திய ஆசிரமம் போலீசாரால் பட்டப்பகலில் அடித்து நொறுக்கப் பட்டது. கரும் பச்சை நிறத்தில் ஆடைகளை விற்ற வியாபாரிகள் கூட நக்சல்பாரிகளுக்குச் சீருடை கொடுக்கிறார்கள் என்று குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப் பட்டார்கள். சத்தீஸ்கரில் நிலவும் அரசு பயங்கரவாதத்தை அம்பலப்படுத்திய குற்றத்திற்காக பிரபல மருத்துவர் பினாயக் சென் கைது செய்யப்பட்டு சிறையிடப்பட்டார். இந்த ஜனநாயகத்தின் மீது பெருமதிப்பும் பக்தியும் கொண்டுள்ள வலது கம்யூனிஸ்டு கட்சியினரே மாவோயிஸ்டுகள் என்று குற்றம் சாட்டப்பட்டு சத்தீஸ்கரில் சிறையிடப்பட்டுள்ளார்கள். வலது கம்யூனிஸ்டு தலைவர்களான பரதன், ராஜா போன்றோர் ஜனநாயக முறைப்படி பலமுறை கண்டனம் தெரிவித்தும், நீதிமன்றங்களில் மனு செய்தும் கூட அவர்களை சத்தீஸ்கர் அரசு விடுவிக்கவில்லை.



கார்ப்பரேட் நிறுவனங்களின் ஆதரவோடும், காங்கிரசு மற்றும் பா.ஜ.க.வின் ஆசியோடும் கட்டியமைக்கப்பட்ட பாசிச பயங்கரவாத சல்வாஜூடும் குண்டர் படைத் தலைவன் மகேந்திர கர்மா.

கடந்த 2011-ஆம் ஆண்டு சத்தீஸ்கரில் தொடரும் போலீசு அட்டூழியங்களைப் பற்றிய உண்மையைக் கண்டறியச்சென்ற மனித உரிமை ஆர்வலரான சுவாமி அக்னிவேஷ் சல்வாஜூடும் குண்டர்களால் தாக்கப்பட்டார். அது பற்றி விசாரிக்க உச்ச நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் சத்தீஸ்கர் சென்ற மையப் புலனாய்வுத்துறை அதிகாரிகள் மீது சத்தீஸ்கர் துணைப்படை என்று பெயர் மாற்றப்பட்டுள்ள சல்வாஜூடும் குண்டர் படையானது துப்பாக்கிச் சூடு நடத்தியது. இனி போதிய பாதுகாப்பு இல்லாமல் தாங்கள் விசாரணைக்குச் செல்ல இயலாது என்று மையப் புலனாய்வுத் துறை அதிகாரிகள் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர். ஆயுதப் படையினரின் பாதுகாப்பு இல்லாமல், மையப் புலனாய்வுத்துறை அதிகாரிகளே நடமாட முடியாத சத்தீஸ்கர் மாநிலத்தில் சாமானிய பழங்குடியின மக்களுக்கு எத்தகைய உரிமையும் நீதியும் கிடைக்கும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

இந்நிலையில், அரசுத் தலைவரும், பிரதமரும், சோனியாவும், சத்தீஸ்கர் முதல்வரும் இதர அமைச்சர்களும் அரசு பயங்கரவாதத்துக்கு எதிரான மாவோயிஸ்டுகளின் பதிலடியை ‘‘ஜனநாயகத்தின் மீதான கொடிய தாக்குதல்’’ என்கின்றனர். கடந்த மே 17 அன்று பிஜாப்பூர் மாவட்டத்திலுள்ள எட்சமேட்டா கிராமத்தில் மூன்று சிறுவர்கள் உள்ளிட்டு எட்டு அப்பாவி பழங்குடியினர் போலீசாராலும் துணை ராணுவப் படையினராலும் கோரமாகச் சுட்டுக் கொல்லப்பட்டார்களே, அப்போது ஜனநாயகத்தைப் பற்றி இவர்கள் வாய் திறக்கவில்லையே, அது ஏன்? கடந்த ஜனவரி 20 முதல் 23 வரை அதே பிஜாப்பூர் மாவட்டத்தின் டோட்டிதும்னார், பிடியா ஆகிய கிராமங்களில் 20-க்கும் மேற்பட்ட வீடுகளையும் பள்ளிக்கூடத்தையும் போலீசும் துணை ராணுவப்படைகளும் தீயிட்டுக் கொளுத்திய போது, அங்கே இவர்கள் கூறும் ஜனநாயகம் பூத்துக் குலுங்கியதா? சத்தீஸ்கரில் தொடரும் போரை நிறுத்த பேச்சுவார்த்தைக்கு முன்வந்த மாவோயிஸ்டு தலைவரான தோழர் ஆசாத்தை காட்டிலேயே வைத்து இந்திய அரசு சுட்டுக் கொன்றதே, இதுதான் ஜனநாயக மரபா?

அரசு பயங்கரவாதத்தையே ஜனநாயகமாகச் சித்தரிக்கும் ஆளும் கும்பலும் ஊடகங்களும் சத்தீஸ்கரில் முன்னைவிட மூர்க்கமாகத் தாக்குதலை ஏவிப் போராடும் மக்களையும் மாவோயிஸ்டுகளையும் ஒடுக்கத் துடிக்கின்றன. ஆனால், அரசு பயங்கரவாதம் சத்தீஸ்கரில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள நிலையில், அதற்குப் பதிலடியாக இத்தகைய சிவப்பு பயங்கரவாதம் மேலும் மூர்க்கமாகத் தொடரவே செய்யும்.

● மனோகரன்

## பா.ம.க.வின் சாதிவெறி:

# இருட்டில் கல்லெறிந்த சத்திரிய வீரம்

**பா.ம.க. ரவுடிகள் நடத்திய வன்முறை, அச்சாதிவெறிக் கும்பல் தாழ்த்தப்பட்டோருக்கு மட்டுமல்ல, அனைத்துத் தரப்பு மக்களுக்கும் எதிரானது எனக் காட்டிவிட்டது.**

நத்தம் காலனியில் நடத்தப்பட்ட தாக்குதலைப் போலவே மரக்காணம் தாக்குதலும் முன்கூட்டியே திட்டமிட்டு நடத்தப்பட்ட தாக்குதல் என்பது சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணமாகியிருக்கிறது. 2011-ஆம் ஆண்டில், மாமல்லபுரம் வன்னியர் விழாவுக்குச் சென்ற கும்பல் எந்த இடத்தில் தாக்குதல் நடத்த முயன்று அது முறியடிக்கப்பட்டதோ, அதே இடத்தில் இப்போது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தீவைப்பு, கொள்ளை உள்ளிட்ட அனைத்தும் நத்தம் காலனி தாக்குதலை அப்படியே ஒத்திருக்கின்றன.

கிழக்கு கடற்கரைச் சாலையிலிருந்து சுமார் நூறு மீட்டர் உள்ளே இருப்பதும், இடையில் இருக்கும் அடர்த்தியான தைலமரக் காட்டினால் முற்றிலுமாக மறைக்கப்பட்டிருப்பதுமான தாழ்த்தப்பட்டோர் காலனியின் மீது தாக்குதல் நடத்துவதற்கு உள்ளூர் பா.ம.க.வினர்தான் உடன் இருந்து திட்டமிட்டுக் கொடுத்துள்ளனர். இது தன்னெழுச்சியாகவோ, தற்செயலாகவோ நடந்த தாக்குதல் அல்ல. பிரச்சினைக்குரிய இடம் என்று தெரிந்தும் அந்த இடத்தில் மாமல்லபுரம் செல்லும் வண்டிகள் போலீசால் தடுத்து நிறுத்தப்பட்டதும், அங்கே பெயருக்கு சில போலீசார் மட்டுமே நின்றிருந்ததும், இந்தத் தாக்குதல் திட்டத்தை நிறைவேற்ற போலீசு ஒத்துழைத்துள்ளதையே காட்டுகிறது. இந்த விசயத்திலும் நத்தம் காலனி தாக்குதலின்போது போலீசு நடந்து கொண்டதற்கும், மரக்காணத்தில் நடந்துள்ளதற்கும் அதிக வேறுபாடு இல்லை.

மாமல்லபுரம் விழாவாகட்டும், மரக்காணம் தாக்குதலாகட்டும் இரண்டின் நோக்கமும் தாழ்த்தப்பட்டோர் எதிர்ப்பு ஆதிக்க சாதிவெறிதான். இருப்பினும் வன்கொடுமை குற்றம் என்ற அடிப்படையில் கையாள்வதற்குப் பதிலாக, பொதுச்சொத்துக்கு சேதம், வன்முறை என்ற சட்டம்-ஒழுங்கு கோணத்திலேயே பெரும்பாலான வழக்குகளைப் பதிவு செய்திருக்கிறது ஜெ.அரசு. நத்தம் காலனி தாக்குதலிலும் ஆயிரத்துக்கு மேற்பட்ட சாதிவெறியர்கள் ஈடுபட்டிருந்தபோதிலும், முதல் சுற்றில் மாவட்ட போலீசு கண்காணிப்பாளர் அஸ்ரா கார்க்கினால் கைது செய்யப்பட்ட 141 பேருக்கு மேல் வேறு யாரும் அதன் பின்னர் வன்கொடுமை சட்டத்தின் கீழ் கைது செய்யப்படவில்லை.

சாதி வெறியர்களாக இருக்கட்டும், இந்து மதவெறியர்களாக இருக்கட்டும் அவர்கள் மீது உரிய குற்றப்பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்படுவதுமில்லை. குற்றம் நிரூபிக்கப்பட்டுத் தண்டிக்கப்படுவதுமில்லை. மாறாக, ‘‘தடையை மீறியது, உரிய நேரத்தில் கூட்டத்தை முடிக்காதது’’ போன்ற உப்புப் பெறாத விசயங்களுக்காக அப்போதைக்கு கைது செய்து சில நாட்கள் சிறை வைக்கப்படுகின்றனர். அந்த கைது நடவடிக்கையையே பெரும் சாதனை போல ஊடகங்கள் மூலம் காட்டப்படுகின்றன. அல்லது ஒரு சிலர் குண்டர் சட்டம் போன்ற தடுப்புக்காவல் சட்டங்களில் கைது செய்யப்பட்டு ஓரிரு மாதங்கள் சிறை வைக்கப்பட்டு, பின்னர் விடுவிக்கப்படுகின்றனர். தற்போது நடந்து வருவதும் அதுதான்.

மாமல்லபுரம் விழாவிலும் சரி, அதற்கு முன்னரும் சரி, ராமதாசின் தாக்குதல் கருணாநிதியையும் தலித் மக்களையும் நோக்கியே இருந்தது. ‘‘நாங்க என்ன சோப்பு போடுற சாதியா, நாங்க என்ன மோளம் அடிக்கிற சாதியா, அக்கினியில் பொறந்தவன் வன்னியன்’’ என்றும் தாழ்த்



மரக்காணத்திற்கு அருகிலுள்ள கட்டையன் தெரு என்ற ஊரில் வன்னிய சாதிவெறிக் கும்பலால் அடித்து நொறுக்கப்பட்ட தாழ்த்தப்பட்டோர் குடியிருப்பு.

தப்பட்ட மக்களை இழிவுபடுத்தியும் தொடர்ந்து பேசிவருகின்றனர். இத்த கைய சாதிவெறிப் பேச்சுகள், நடவடிக் கைகளுக்காக ராமதாசு, காடுவெட்டி குரு ஆகியோர் மீது டஜன் கணக்கில் வன்கொடுமை வழக்குகள் போடப் பட்டிருக்க வேண்டும். ஆனால் ஜெ. அரசு நடவடிக்கை எடுக்கவில்லை.

''வன்னியனைத் தவிர வேறு யாரையும் ஜெயிக்க விடமாட்டோம், நாங்க கண்ணசைத்தா என்ன நடக்கும் தெரியுமா, நாங்க கலவரம் பண்ணா தமிழகம் தாங்காது''என்ற மாமல்ல புரம் பேச்சுகள் தலித் எதிர்ப்பு என்ற எல் லையைத் தாண்டி மொத்த சமூகத்துக் கும் சவால் விட்டன. வெறியூட்டும் பேச்சுகளால் முடுக்கி விடப்பட்ட வன் னிய குல சத்திரியக் கொழுந்துகள், தமி ழகத்தை ஆளப்பிறந்த பல்லவ மன்னர் பரம்பரை என்ற தோரணையில், மாமல்லபுரம் தொல்லியல் சின்னங் களைத் தமது பிதுரார்ஜித சொத்தாகக் கருதி, அவற்றின் மீது உரிமையோடு மஞ்சள் கொடியேற்றி நடனமாட, இந்தச் சூழலால் போதை தலைக்கேறிய ராமதாசு, ''முடிந்தால் வழக்குப் போடு'' என்று ஒரு பேச்சுக்கு சவால் விட்டார். இதன் விளைவுதான் கத்திரி வெயிலில் திருச்சி சிறையே அன்றி, அது சாதிவெறி நடவடிக்கைக் கான வழக்கோ, தண்டனையோ அல்ல.

இருப்பினும், அந்தக் கைதுக்கும் பயன் இல்லாமல் இல்லை. கைது நடவடிக்கைகள் தொடங்கியவுடன் ''தமது கண்ணசைவில் ஒரு மாவட்டத்துக்கே தீ வைக்கும் ஆற்றல் பெற்ற'' ஆண்ட பரம்பரை சாதிச்சங் கத் தலைவர்கள் தெறித்து ஓடி ஒளிந்து, முறுக்கு மீசை களின் ''வீரத்தை''அம்பலப்படுத்திக் கொண்டனர். அதே நேரத்தில் ராமதாசு கைதைக் கண்டித்து தமிழகம் முழுவ தும் கட்டவிழ்த்துவிட்ட வன்முறையின் மூலம், தாங் கள் தலித் மக்களுக்கு மட்டுமின்றி மொத்த சமூகத் துக்குமே எதிரிகள் என்பதை பா.ம.க. சாதிவெறியர்கள் தெளிவாக எடுத்துக் காட்டினர்.

ராமதாசு கைதுக்கு எதிராகத் தமிழகம் முழுவதும் 500-க்கும் மேற்பட்ட பேருந்துகள் நொறுக்கப்பட்டிருக் கின்றன. மக்களின் உயிரைப் பற்றிக் கடுகளவும் கவலைப்படாமல் பா.ம.க. காலிகள் ஓடும் பேருந்தின் ஓட்டுநரைக் குறிவைத்து இரவு நேரத்தில் கல் வீசியிருக் கின்றனர். ஊத்தங்கரை அருகே இரவு நேரத்தில் அரசுப் பேருந்தை தடுத்து நிறுத்தி பெட்ரோல் ஊற்றி தீ வைத் திருக்கின்றனர். என்ன ஏதென்று தெரியாத பயணிகள் எகிறிக் குதித்து மயிரிழையில் உயிர்தப்பியிருக்கின்றனர். லாரிகளின் மீது பெட்ரோல் குண்டுகளை வீசி எரித்திருக் கின்றனர். அரியானா மாநில ஓட்டுநர் ஒருவர் தீக்காயத் தால் இறந்திருக்கிறார். பாலங்கள், குடிதண்ணீர்க் குழாய் கள் தகர்க்கப்பட்டிருக்கின்றன. நியாய விலைக்கடைகள் எரிக்கப்பட்டிருக்கின்றன.



ராமதாசுக் கைதைக் கண்டிப்பது என்ற பெயரில் பா.ம.க. ரவுடிகள் பேருந்து மீது நடத்திய கல்வீச்சில் கொல்லப்பட்ட சேலத்தைச் சேர்ந்த செல்வம்.

சாதிவெறியர்களின் இந்த ''எதிர்ப்பு'' நடவடிக்கைகள் அனைத்திலும் பொதுமக்களும் பொதுச்சொத்து களுமே இலக்காகியிருக்கின்றன. ஓடும் பேருந்தின் ஓட்டுநர் மீது கல் வீசிய அந்தக் கும்பல், பேருந்து தறி கெட்டு ஓடிக் கவிழ்ந்தால் உயிரிழக்க கூடிய மக்களைப் பற்றி கடுகளவும் கவலைப்படவில்லை. தீக்கிரையான ஓட்டுநரைப் பற்றிக் கவலைப்பட வில்லை. சாதிவெறியர்களின் இந்த சமூகவிரோதத்தன்மை, ''ஐயாகைது'' தோற்றுவித்த கோபத்தினால் ஏற் பட்ட பிறழ்வு அல்ல. ராமதாசின் வக் கீல்களான பின்நவீனத்துவ அறிஞர் கள் கூறும் ''கொண்டாட்ட'' மனோ நிலையிலும் அவர்கள் சமூகவிரோதி களாகவே நடந்து கொண்டிருக் கிறார்கள்.

மரக்காணம் காலனியைத் தாக்குவதற்கு முன்னரே, பல இடங் களில் இருபுறமும் இருந்த கடைகளை களவாடிக் கொண்டும், சாப்பிட்டதற்குப் பணம் கேட்ட ஓட்டல் காரர்களைத் தாக்கிக் கொண்டும், கோட்டக்குப்பம் மதரசாவிலிருந்து வெளியில் வந்த இசுலாமியப் பெண் களை நோக்கி கைலியை அவிழ்த்துக் காட்டி நடன மாடிக்கொண்டும்தான், சத்திரிய குலக்கொழுந்துகள் மாமல்லபுரம் நோக்கி சென்றிருக்கிறார்கள். பிள்ளையார் குப்பம், கூனிமேடு, அனுமந்தை போன்ற பல ஊர்களில் இந்தக் கும்பலால் பாதிக்கப்பட்ட வன்னியர்கள், மீன வர்கள், இசுலாமியர்கள் உள்ளிட்ட அனைத்துச் சமூகத் தினரும் சேர்ந்து இவர்களைத் திருப்பித் தாக்கியிருக் கிறார்கள்.

ராமதாசு தூண்டிவரும் வன்னிய சாதிவெறி என்பது தாழ்த்தப்பட்ட மக்களை மட்டும்தான் தாக்கும் என்று யாரேனும் எண்ணினால் அது தவறு. சாதி என்பது தன் இயல்பிலேயே ஒரு ஜனநாயக விரோத நிறுவனம். சாதித் திமிரும், லும்பன் கலாச்சாரமும், வெறியூட்டப்பட்ட கும்பல் மனோபாவமும் சமூகவிரோத சக்தியாக மட்டுமே நடந்து கொள்ள முடியும். இந்த விசயத்தில் வன்னியர் சங்கம் மட்டுமல்ல, எல்லா சாதி சங்கங்களும் தங்கள் யோக்கியதையை நிரூபித்திருக்கின்றன.

முத்தரையர் சங்கத்தினர் சென்ற ஆண்டு திருச்சியில் ரவுடித்தனம் செய்து மக்களிடம் அடிவாங்கினர். தேவர் குருபூசை, மருது குருபூசை என்றால் அந்தக் கும்பல் போகும் பாதை முழுவதும் கடையடைக்கப்பட்டு ஊர் களெல்லாம் சுடுகாடுகளாகி விடுகின்றன. பயந்து ஓடுவது மொத்த சமூகமும்தான். சாதிச்சங்கங்கள் ஒட்டு மொத்த சமூகத்தையும் அச்சுறுத்தும் சமூகவிரோத சக்திகள். இவர்கள் துப்புரவாக ஒழிக்கப்படவேண்டும் என்பதற்கான நியாயம் முன்எப்போதும் இல்லாத அளவுக்கு துலக்கமாகியிருக்கிறது.

● தொரட்டி

# மின்சாரம் தனியார்மயமானதே மின்கட்டண உயர்வுக்கான காரணம்!

## மின்கட்டண உயர்வுக்கான மக்கள் கருத்துக்கேட்புக் கூட்டம் தனியார்மயத்துக்கு எதிரான பிரச்சாரக் கூட்டமாக மாறியது.

இந்த ஆண்டு (2013-14) மின்கட்டண உயர்வுக்கான மனுவினை மின்வாரியம், மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திடம் சமர்ப்பித்துள்ளது. இந்த மனுவின் மீதான மக்கள் கருத்துக் கேட்புக் கூட்டங்கள் கடந்த மே மாதத்தில் நடத்தப்பட்டன. குடிசை இணைப்புகளுக்கும் விவசாயத்துக்கும் மட்டும் தமிழக மின்வாரியம் கட்டணத்தை உயர்த்தியுள்ளது. இதனையும் மானியமாகத் தந்துவிடப் போவதாக அரசு அறிவித்துள்ளது.

கடந்த ஆண்டில் நிலுவையில் உள்ள கட்டண உயர்வுக்காக ஒதுக்கப்பட்டுள்ள கடனாகிய ரூ. 19,571 கோடியில், ஒரு குறிப்பிட்ட பகுதியை கட்டண உயர்வாக மின்சார ஒழுங்குமுறை ஆணையம் அறிவிக்க வேண்டிய நிலையில் உள்ளது. இதனால் வரப்போகும் நாடாளுமன்றத் தேர்தலில் ஆளுங்கட்சியின் வெற்றி பாதிக்கப்படும் என்பதால் பெயரளவில் ஒரு கட்டண உயர்வை அறிவித்து - அதாவது ரூ.973 கோடி - அதனை அரசு மானியமாக நேர்செய்வதுமாக இந்தக் கட்டண உயர்வு அறிவிக்கப்பட்டுள்ளது. மின்வாரியம் இந்த கட்டண உயர்வை அறிவிக்காமல் இருந்திருந்தால், மின்சாரத் தீர்ப்பாயத்தின் உத்தரவுப்படி ஆணையமே தனது சுய அதிகாரத்தின் மூலம் கட்டண உயர்வை அறிவித்திருக்கும்.

கடந்த 2012-13ஆம் ஆண்டிற்கு தமிழகத்துக்கு 7078 கோடி யூனிட்டுகள் தேவை என்று ஆணையம் மதிப்பிட்டது. இதில் விற்றுவரவாக 5886 கோடி யூனிட்டும், இழப்பாக - அதாவது, நட்டமாக 7874 கோடி யூனிட்டும் இருக்குமென்றும் கூறி, இதை ஈடு செய்யவே கடந்த ஆண்டு கட்டண உயர்வை ஆணையம் அறிவித்தது. ஆனால் மின்வாரியமோ, 2012-13-ஆம் ஆண்டில் மொத்தத்தில் ரூ. 17,593 நட்டமாகியுள்ளதாகவும், நடப்பாண்டாகிய 2013-14-இல் இது மேலும் ரூ. 10,334 கோடி அதிகரிக்கும் என்றும் தெரிவிக்கிறது. மொத்தத்தில் கடந்த 2010 நவம்பர் முதல் நடப்பாண்டில் ஏற்படும் நட்டம் உள்ளிட்டு மொத்த நட்டம் ஏறத்தாழ ரூ.39,744 கோடி ஆகும். இதனை அடுத்த ஆண்டு (2014-15) முதலாக மக்கள் தலையில் சுமத்த வேண்டும் என்கிறது மின்வாரியத்தின் கட்டண உயர்வுக்கான மனு.

தனியார் மின் நிறுவனங்களிடமிருந்து கூடுதல் விலைக்கு மின்சாரத்தை வாங்கியதால்தான் மின்வாரியத்துக்கு இந்த நட்டம் ஏற்பட்டுள்ளது. கடந்த 2012-ஆம் ஆண்டில் ஜி.எம்.ஆர்., சாமல்பட்டி, பி.பி.என்., மதுரை ஆகிய தனியார் நிறுவனங்களிடமிருந்து 271.4 கோடி யூனிட்டுகளை ரூ. 2962 கோடிக்கு மின்வாரியம் வாங்கியுள்ளது. ஆனால் மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இப்படி தனியாரிடமிருந்து வாங்க வேண்டாம் என்று அறிவுறுத்தியபோதிலும் அதை மீறி வாங்கியுள்ளது. ஒரு யூனிட்டின் சராசரி விலை ரூ. 10.91 ஆகும். இந்த மின்சாரத்தின் விலையானது சாதாரணப் பயனீட்டாளர் முனைக்கு வரும்போது ரூ. 18.78 ஆகிறது. கம்பி இழப்பு போக இதனை விற்று வருகின்ற வரவு யூனிட்டுக்கு ரூ. 5 என்ற கணக்கில் ரூ.1058 கோடிகளாகும். ஆக ரூ.2962 கோடிக்கான கொள்முதலில் நட்டம் என்பது ரூ. 1904 கோடிகளாகும்.

மின்சார வாரியத்தின் வல்லூர் மின்நிலையம் உற்பத்தியைத் தொடங்கியிருந்தால் 225 கோடி யூனிட் கிடைத்திருக்கும். குத்தாலம், வழுதூர்1, வழுதூர் 2 ஆகிய மூன்று எரிவாயு நிலையங்களை முறையாகப் பராமரித்திருந்தால் ஏறத்தாழ 140 கோடி யூனிட் கிடைத்திருக்கும். ஆனால் ஏற்

மின் கட்டணத்தை உயர்த்துவது தொடர்பாக திருச்சியில் நடத்தப்பட்ட கருத்துக் கேட்புக் கூட்டத்தில், கட்டண உயர்வின் பின்னேயுள்ள தனியார்மயக் கொள்ளையை அம்பலப்படுத்துகிறார், திருச்சி மாவட்ட ம.க.இ.க. செயலர் தோழர் சீனிவாசன்.



கெனவே உள்ள உற்பத்தியையும், புதிய உற்பத்தியையும் முடக்கி வைத்துவிட்டுத் தனியார் மின் உற்பத்தியாளருக்குச் சாதகமாகவே மின்வாரியம் செயல்பட்டுள்ளது. இவை மட்டுமின்றி, தனியார் காற்றாலை நிறுவனங்கள் மூலம் உற்பத்தியாகும் மின்சாரம் பற்றிய கணக்கெடுப்பில் தனியார் நிறுவனங்களுக்குச் சாதகமாக கணக்கியல் துறை ஊழலிலும் மோசடியிலும் ஈடுபடுகின்றது. இத்துறையின் மோசடியால் மின்வாரியத்துக்கு ஏறத்தாழ ரூ. 4000 கோடிக்கு நட்டம் ஏற்பட்டுள்ளது. இந்த உண்மைகளை விளக்கி, பொறியாளர் சா.காந்தியைத் தலைவராகக் கொண்ட தமிழ்நாடு மின்துறை பொறியாளர் அமைப்பு துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டுள்ளது.



ஒருபுறம் மின்வெட்டு; மறுபுறம் மின் கட்டண உயர்வு என்ற இரட்டைச் சுமையைக் கண்டித்து சேலம் மாவட்டத்திலுள்ள வீரமனூர் பகுதி விசைத்தறி உற்பத்தியாளர்கள் நடத்திய சாலைமறியல். (கோப்புப் படம்)

இந்நிலையில், நடப்பு நிதியாண்டில் (2013-14) ஏற்படும் ரூ. 10,344 கோடி நட்டத்தில், அரசு ஏற்கும் கட்டண உயர்வு மானியமான ரூ. 973 கோடி போக எஞ்சிய ரூ. 9371 கோடியை எதிர்கால கட்டண உயர்வுக்கான கடனாக அடுத்துவரும் நிதியாண்டிலிருந்து (2014-15) மக்கள் தலையில் சுமத்தப்படும் என்பது நிச்சயமாகிவிட்டது. இதற்காகவே, மின் கட்டண உயர்வுக்காக ஒழுங்குமுறை ஆணையத்திடம் மின்சார வாரியம் சமர்ப்பித்துள்ள மனு மீதான மக்கள் கருத்துக் கேட்புக் கூட்டங்கள் கடந்த மே மாதம் 3,8,10,17 ஆகிய தேதிகளில் சென்னை, திருச்சி, மதுரை, கோவை ஆகிய நகரங்களில் நடைபெற்றன.

8.5.2013 அன்று திருச்சியில் மக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் நடந்தபோது, கணக்கு காட்டுவதற்காகவும் மின் கட்டண உயர்வை நியாயப்படுத்திப் பேசுவதற்காகவும் மின்வாரிய ஊழியர்களைப் பொதுமக்கள் போல கொண்டுவந்து மண்டபத்தை நிரப்பியிருந்தனர். சுற்றிலும் போலீசையும் நிறுத்தியிருந்தனர். மின் கட்டண உயர்வுக்கான இக்கருத்துக் கேட்பு கூட்டத்தைத் தனியார்மய எதிர்ப்புக் கண்டனக் கூட்டமாக மாற்றின புரட்சிகர அமைப்புகள்.

மின்சார ஒழுங்குமுறை ஆணையம்தான் மின் கட்டண உயர்வைத் தீர்மானிக்கிறது; மாநில அரசுக்குக் கூட அந்த அதிகாரம் இல்லை; இதில் மின்வாரியத்தின் பங்கு என்ன? எதற்காக இந்த கருத்துக்கேட்பு நாடகம்? - என்று கேள்வி எழுப்பிய ம.க.இ.க, பு.மா.இ.மு, பெ.வி.மு. மற்றும் மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தைச் சேர்ந்த தோழர்கள், 2003 வரையில் இலாபகரமாக இயங்கிவந்த மின்வாரியம், இன்று நட்டம் ஏற்பட்டுள்ளதற்குக் காரணம் தனியார்மயம்தான் என்பதைப் புள்ளிவிவர ஆதாரங்களுடன் விளக்கினர்.

அரசு மின் உற்பத்தி நிலையங்களை இயக்காமல் முடக்கிவிட்டு, தனியார் மின் நிறுவனங்களிடம் கூடுதல் விலைக்கு அதிகமாக மின்சாரம் வாங்குவதன் மர்மம் என்ன? மின்சார ஒழுங்குமுறை ஆணையமே, தனியார் மின்னுற்பத்தி நிறுவனங்களிடமிருந்து கூடுதல் விலைக்கு மின்சாரத்தை வாங்கக் கூடாது என்று உத்தரவிட்டுள்ள போதிலும், அதை மின்வாரியம் மீறுவது ஏன்? பிள்ளைபெருமாள் நல்லூரிலுள்ள அப்பல்லோ மருத்துவமனைக்குச் சொந்தமான தனியார் மின்னுற்பத்தி நிலையத்திடமிருந்து மின்சாரமே வாங்காமல் நாளொன்றுக்கு ஒரு கோடி ரூபாய் வீதம் சுமார் ஒரு வருட காலத்திற்கு நிலைக்கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதே, அது ஏன்? மின்வெட்டால் தமிழக மக்கள் இருளில் தத்தளிக்கும்போது, பன்னாட்டு நிறுவனங்களுக்கு மலிவு விலையில் தடையின்றி மின்சாரம் வழங்குவது ஏன்? - என்று பலமுனைகளிலிருந்தும் அடுத்தடுத்து கேள்விகளை எழுப்பினர். அதிகாரிகளோ இவற்றுக்கு விளக்கமளிக்க முடியாமல் திணறி மழுப்பினர்.

தனியார்மய - தாராளமயத்தை எதிர்த்தும், தனியார் முதலாளிகளின் கொள்ளைக்கு மின்வாரிய அதிகாரிகள் துணைநிற்பதையும் அம்பலப்படுத்திய தோழர்கள், தனியார் மின்னுற்பத்தி நிலையங்களை அரசு கையகப்படுத்த வேண்டும்; பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களுக்குத் தடையின்றி மின்சாரம் வழங்குவதை நிறுத்த வேண்டும் என்பதைத் தீர்வாக முன்வைத்தனர். திரண்டிருந்த உழைக்கும் மக்கள் உண்மைகளைப் புரிந்து கொண்டு ஆரவாரத்துடன் வரவேற்ற இக்கூட்டம், தனியார்மயக் கொள்ளைக்கும் ஊழலுக்கும் எதிரான பிரச்சாரக் கூட்டமாக அமைந்தது.

– பு.ஜ. செய்தியாளர்கள்

# இந்திய-ஐரோப்பிய ஒன்றிய சுதந்திர வர்த்தக ஒப்பந்தம்:

# பகற்கொள்ளைக்குப் பச்சைக்கொடி!

**ஏகாதிபத்தியங்களின் சூறையாடலுக்காக நாட்டை மேலும் அடிமையாக்கும் சதியை மூர்க்கமாகவும் இரகசியமாகவும் செய்து வருகிறது ஆளும் கும்பல்.**

காட் ஒப்பந்தம் உருவான பின்னர், உலக நாடுகளிடையே தடையற்ற வர்த்தகத்தை ஏற்படுத்திடும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டதுதான் உலக வர்த்தகக் கழகம். ஏற்கெனவே உலக வர்த்தகக் கழகத்தின் விதிகளால் திறந்துவிடப்பட்ட பொருளாதாரத்தின் காரணமாக ஏழை நாடுகளின் உள்நாட்டு சிறுதொழில்களும் விவசாயமும் நசியத் தொடங்கிப் பன்னாட்டு, உள்நாட்டு கார்ப்பரேட் நிறுவனங்கள் கொழுத்த ஆதாயமடைந்தன. இதனால் உலக வர்த்தகக் கழகத்தில் ஏழை நாடுகளுக்கும் வளர்ச்சியடைந்த ஏகாதிபத்திய நாடுகளுக்குமிடையே முரண்பாடுகள் முற்றின.

மேற்கத்திய ஏகாதிபத்திய நாடுகளில் மானியம் அளித்து உற்பத்தி செய்யப்படும் விவசாய விளைபொருட்கள் சர்வதேச சந்தைக்கு வரும்போது, அவற்றின் விலை ஒப்பீட்டு ரீதியில் குறைவாக இருப்பதால், ஏழை நாடுகளின் பொருட்களுக்கு அதிக விலையின் காரணமாகப் போதுமான சந்தை கிடைக்காத நிலை ஏற்படுகிறது என்றும்; இதனால் தமது நாட்டின் வர்த்தகம் கடுமையான பாதிப்புக்கு உள்ளாவதாகவும் வாதிடும் ஏழை நாடுகள், மேலைநாடுகள் தமது நாட்டு விவசாயத்துக்கு அளிக்கும் மானியத்தைக் குறைக்க வேண்டுமென்று கோருகின்றன. கடந்த 2001-இல் இதையொட்டியும், வர்த்தகம் தொடர்பான இதர விதிகள் பற்றியும் கத்தார் நாட்டின் தலைநகரான தோஹாவில், உலக நாடுகளுக்கிடையே பேச்சுவார்த்தைகள் தொடங்கப்பட்டன. 2005-க்குள் நிறைவடைய வேண்டுமெனத் தீர்மானித்திருந்த போதிலும் இப்பேச்சுவார்த்தைகள் இன்னும் முடிவடையவில்லை. நாடுகளுக்கு இடையிலான பொது உலக வர்த்தக விதிகள் மற்றும் நிபந்தனைகளை உருவாக்கவும் முடியவில்லை.

இதனால், தமது வர்த்தகமும் ஆதிக்கமும் கொள்ளையும் பாதிக்கப்படுவதாலும், ஏற்கெனவே பொருளாதார நெருக்கடிகளில் சிக்கித் தவிப்பதாலும், ஏகாதிபத்திய நாடுகள் ஒரு புதிய தந்திரத்தை மேற்கொள்ளத் தொடங்கின. அதுதான் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம். இது, இரு நாடுகளுக்கிடையிலானதாக அல்லது பன்னாடுகளுக்கிடையிலானதாக இருக்கும். தோஹாவில் தொடங்கிய பேச்சுவார்த்தைகள் முடிவுக்கு வருவதற்கு முன்னரே, கொல்லைப்புறமாக இப்படியொரு ஏற்பாட்டை ஏகாதிபத்தியங்கள் உருவாக்கியுள்ளன. இந்த ஒப்பந்தங்கள் உலக வர்த்தகக் கழகத்தின் விதிகள் மற்றும் நிபந்தனைகளைவிடக் கடுமையாக இருப்பதால் - அதாவது, ஏகாதிபத்திய நாடுகளுக்குக் கூடுதலாகச் சலுகைகள் தரப்படுவதால், இதனை ''உலக வர்த்தகக் கழகம் பிளஸ்'' என்றும் குறிப்பிடுகின்றனர். தோஹா சுற்றுப் பேச்சுவார்த்தைகளுக்கான வர்த்தக அமைச்சர்களின் மாநாடுகள் மற்றும் கூட்டங்களில், நாட்டின் நலனுக்காக நிற்பதைப் போலவும், ஏகாதிபத்தியங்களை எதிர்ப்பதாகவும் சவடால் அடிக்கும் இந்திய அமைச்சர்கள், இத்தகைய சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களை இரகசியமாகப் போட்டுக் கொண்டு நாட்டை மேலும் அடிமையாக்குவதில் குறியாக இருக்கின்றனர்.

இந்திய-ஐரோப்பிய ஒன்றிய சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்துக்காக டெல்லியில் கடந்த பிப்ரவரியில் நடந்த மாநாட்டில் ஐரோப்பிய ஒன்றியத் தலைவர் ஹெர்மன் வான் ரோம்புய் (இடது), ஐரோப்பிய ஒன்றியக் கமிசனின் தலைவர் ஜோஸ் பர்ராசோ (வலது) ஆகியோரை வரவேற்கும் மன்மோகன் சிங்.



இலங்கை, தாய்லாந்து மற்றும் தெற்காசிய நாடுகளுடன் ஏற்கெனவே சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களைப் போட்டுக் கொண்டுள்ள இந்தியா, 2005-இல் முதன் முதலாக சிங்கப்பூருடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டது. 27 ஐரோப்பிய நாடுகளை உள்ளடக்கிய ஐரோப்பிய ஒன்றி

யத்துடன் தற்போது பிரஸ்செல்ஸ் நகரில் இந்திய- ஐரோப்பிய ஒன்றிய சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்துக்கான இறுதிக்கட்ட பேச்சு வார்த்தைகள் இரகசியமாக நடந்து வருகின்றன. இன்னும் ஓரிரு மாதங்களில் இந்த ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டு நடைமுறைக்கு வந்துவிடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அந்நிய நேரடி முதலீடு மற்றும் வர்த்தகத்துக்கான கட்டுப்பாடுகள் அனைத்தையும் நீக்கிவிட்டு முற்றாக ஐரோப்பிய ஒன்றிய கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு நாட்டைத் திறந்துவிடுவதுதான் இந்திய -ஐரோப்பிய சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் சாரம். இது ஏதோ வழக்கமான தொரு வர்த்தக ஒப்பந்தம் அல்ல; இது, நாட்டின் அரைகுறை இறையாண்மையையும் முற்றாக துடைத்தெறிந்துவிட்டு, கோடானுகோடி மக்களின் வாழ்வாதாரத்தைப் பறித்து அவர்களை வீதிகளில் வீசியெறியும் ஒரு பேரழிவுக்கான தயாரிப்பு.



இந்திய - ஐரோப்பிய ஒன்றிய சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை ரத்து செய்யக் கோரி மணிப்பூர் மாநில வர்த்தகர்களும் உழைக்கும் மக்களும் இணைந்து கடந்த பிப்ரவரியில் நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணி.

ஐரோப்பிய கார்ப்பரேட் நிறுவனங்களை இந்திய முதலீட்டாளர்களைப் போலச் சமமாக நடத்த வேண்டும் என்பது இந்த ஒப்பந்தத்தின் முக்கியமான விதியாகும். அதாவது, இந்திய முதலீட்டாளருக்கு அரசு அளிக்கும் சலுகைகள் அனைத்தும் ஐரோப்பிய கார்ப்பரேட் முதலீட்டாளருக்கும் சமமாக வழங்கப்படும். இந்திய முதலீட்டாளர்கள் விவசாய நிலங்களை அடிமாட்டு விலைக்கு வாங்கி வீட்டுமனையாக்குவதைப் போல, ஐரோப்பிய கார்ப்பரேட் முதலீட்டு நிறுவனமும் இந்தியாவில் விவசாய நிலங்களை வாங்கலாம், தேவையானதைப் பயிரிட்டு ஏற்றுமதி செய்யலாம் அல்லது வீட்டுமனையாக்கலாம்; அதற்கு எவ்விதத் தடையோ, கட்டுப்பாடுகளோ இருக்கக் கூடாது என்கிறது, இந்த ஒப்பந்தம்.

இதன் விளைவாக, பயிரிடப்படும் நிலங்களை ஐரோப்பிய முதலீட்டாளர்கள் மொத்தமாகக் கைப்பற்றி, அவற்றைத் தமது ஏற்றுமதிக்கும் கொள்ளை லாபம் தரக் கூடிய பணப்பயிர் உற்பத்திக்கானதாகவும் மாற்றிக் கொள்ள முடியும். இதனால், இந்தியாவில் உணவு உற்பத்தி நாசமாக்கப்பட்டு, இனி உணவுக்கு ஐரோப்பிய எஜமானர்களின் தயவை எதிர்நோக்கியிருக்க வேண்டிய நிலைக்கு இந்தியா தள்ளப்படும்.

ஒரு ஐரோப்பிய கார்ப்பரேட் நிறுவனம் ஒரு ஊரில் விவசாய நிலங்களை கணிசமான அளவுக்கு வாங்கி, அதில் மிகப் பெரிய பண்ணையை நிறுவி அதற்காக ஆழ்குழாய் கிணறுகளை அமைத்து வரைமுறையின்றி நீரை உறிஞ்சி விவசாயம் செய்யலாம். இதனால், அருகிலுள்ள சிறு விவசாயிகளின் பாரம்பரியமான கிணறுகள் வற்றிப் போனால், அந்த விவசாயி அருகிலுள்ள ஐரோப்பிய கார்ப்பரேட் நிறுவனத்தின் அடாவடித்தனத்தை எதிர்த்து ஒன்றும் செய்ய முடியாது. அவர் அந்த நிலத்தை அடிமாட்டு விலைக்கு ஐரோப்பிய நிறுவனத்துக்கு விற்றுவிட்டு, தனது நிலத்திலேயே ஐரோப்பிய பண்ணையின் கூலியாக வேலைக்குச் செல்வதைத் தவிர வேறு வழியில்லாமல் போகும்.

ஐரோப்பிய நாடுகளில் விவசாயம் மற்றும் பால் உற்பத்திக்கு அரசின் மானியம் பல லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு அளிக்கப்படுகிறது. இதனால், ஐரோப்பிய விவசாய மற்றும் பால் பொருட்கள் சர்வதேசச் சந்தையில் ஒப்பீட்டு ரீதியில் விலை மலிவானதாகவும், இந்திய விவசாய மற்றும் பால் பொருட்களின் விலை அதிகமானதாகவும் இருக்கிறது. மேலும், இந்த ஒப்பந்தப்படி இறக்குமதித் தீர்வை 90 சதவீதம் அளவுக்கு 7 ஆண்டுகளுக்கு ரத்து செய்யப்படுவதால், இந்தத் தாராளச் சலுகையின் காரணமாக ஐரோப்பிய கார்ப்பரேட் நிறுவனங்களின் மலிவான விவசாய மற்றும் பால் பொருட்களும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களும் குளிர் பானங்களும் இந்தியாவில் மலை போலக் குவியும். இதனால், மலிவான ஐரோப்பிய உணவுப் பொருட்களின் விலைக்கு உள்நாட்டில் உற்பத்தியாகும் உணவுப் பொருட்களை விற்க முடியாமல், உள்நாட்டு விவசாயமும் பால் உற்பத்தியும் நாசமாக்கப்பட்டு, இவற்றில் ஈடுபட்டுள்ள கோடானுகோடி விவசாயிகளும் சிறுவீத உற்பத்தியாளர்களும் ஓட்டாண்டிகளாகிப் போவார்கள்.

இறக்குமதித் தீர்வை பெருமளவில் குறைக்கப்படுவதால், ஐரோப்பிய தானியங்கி வாகன உற்பத்தியாளர்கள் உதிரிப் பாகங்களை இந்தியாவுக்குப் பெருமளவில் ஏற்றுமதி செய்வார்கள். இந்தியாவில் சிறுதொழில் உற்பத்தியாகத் தயாராகும் உதிரிப் பாகங்களைவிட, அவை ஒப்பீட்டு ரீதியில் மலிவானதாக இருக்கும் என்பதால், உள்நாட்டு உதிரிப் பாக உற்பத்தி கடுமையாகப் பாதிக்கப்படும். இதனால் பொருளுற்பத்தித் துறையும், வேலை வாய்ப்பும் நாசமாகும்.

மேலும், இந்திய உற்பத்திப் பொருட்களின்தரத்தை ஏற்காமல் நிராகரிக்க ஐரோப்பிய நாடுகளுக்கு முழு உரிமை உண்டு என்று என்று இந்த ஒப்பந்தத்தில் விதிகள் சேர்க்கப்பட்டுள்ளன. ஒரு இந்திய நிறுவனம் இந்தியாவில் விளையும் மாம்பழத்தையோ, வாழைப்பழத்தையோ ஏற்றுமதி செய்தால், அது தரமானதல்ல என்று ஐரோப்பிய நாடுகள் நிராகரிக்கலாம். இதை ஏன் என்று இந்தியா கேட்கக் கூடாது. இதுதான் இந்த ஒப்பந்தத்தின் மகிமை.

இந்த ஒப்பந்தப்படி ஐரோப்பிய உயிரித் தொழில்நுட்ப நிறுவனங்களுக்குக் கூடுதல் சலுகைகள்தரப்படும். இதன்படி, ஐரோப்பிய நிறுவனங்கள் தனது தானிய விதைகளை இந்திய விவசாயிகளிடம் விற்கலாம். அதற்குரிய ராயல்டியும் பெறலாம். இதன் விளைவாக, இந்திய விவசாயிகள் தங்களது பாரம்பரிய விதைகளைச் சேமித்து வைக்கவோ, பரிமாறிக் கொள்ளவோ முடியாமல் போகும். ஏற்கெனவே பி.டி. பருத்தி விதைகளால் பாரம்பரிய பருத்தி விவசாயம் நாசமாகி, இந்திய விவசாயிகள் பல்லாயிரக் கணக்கில் தற்கொலை செய்து கொண்டுள்ள நிலையில், இப்போது அதேபாதையில் ஐரோப்பிய எஜமானர்களுக்குக் கதவை அகலத் திறந்துவிட்டுள்ளது, ஆளும் கும்பல்.

இவை தவிர, விவசாயப் பொருட்களைப் பதப்படுத்துதல் மற்றும் சில்லறை வர்த்தகத்தில் ஏகபோகமாக உள்ள கேர்ஃபோர், டெஸ்கோ போன்ற நிறுவனங்கள் இனி தாராளமாக உள்ளே நுழைய ஏற்பாடாகியுள்ளது. கொள்முதல் செய்வதிலிருந்து விற்பனை வரை அனைத்தையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் இந்நிறுவனங்கள் கொண்டுவந்துவிடும் என்பதால், இதன் விளைவாக இலட்சக்கணக்கான சில்லறை வணிகர்கள் வாழ்விழப்பார்கள்.

உலகளாவிய நிதி நெருக்கடியால், உள்நாட்டில் பெற்ற ஆதாயத்தைவிட இந்தியாவில் அதிக ஆதாயத்தைஐரோப்பிய வங்கிகள் அடைந்துள்ளதால், அவை மேலும் விரிவடையும் வகையிலும், நிதித்துறை சேவை நிறுவனங்களிலும் வங்கித்துறையிலும் ஐரோப்பிய நிதி நிறுவனங்கள் தாராளமாக நுழைய இந்த ஒப்பந்தத்தில் ஏற்பாடாகியுள்ளது. ஐரோப்பிய வங்கித்துறையை ஒப்பிடும்போது, இந்திய வங்கித்துறையானது அதைவிட வலுவானதாக உள்ள நிலையில், இந்த ஒப்பந்தப்படி மேலும் தாராளமயமாக்கப்பட்டால், ஒட்டுமொத்த




அந்நிய நேரடி முதலீடு மற்றும் வர்த்தகத்துக்கான கட்டுப்பாடுகள் அனைத்தையும் நீக்கிவிட்டு முற்றாக ஐரோப்பிய ஒன்றிய கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு நாட்டைத் திறந்துவிடுவதுதான் இந்திய -ஐரோப்பிய சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் சாரம்.

வங்கித்துறையும் சிதைந்து நாசமாக்கப்படும். இது தவிர அந்நிய நேரடி முதலீடுகள், பங்குகள், டிபென்சர்கள், கடன்கள், வட்டிகள், வர்த்தகச் சலுகைகள், அசையும் மற்றும் அசையாச் சொத்துகள் முதலான அனைத்திலும் ஐரோப்பிய நிதி நிறுவனங்கள் தாராளமாக நுழைய அனுமதிக்கப்படுவதால், நாட்டின் ஒட்டுமொத்தப் பொருளாதாரமும் உலகநிதிமூலதனத்தின் இரும்புப் பிடியில் சிக்கிவிடும்.

எல்லாவற்றுக்கும் மேலாக, இந்த ஒப்பந்தம் பற்றி நாட்டு மக்களிடம் தெரிவிக்காமல், நாடாளுமன்றத்திலோ அல்லது அரசியல் கட்சிகளிடமோ தெரிவிக்காமல், மாநில அரசுகளைக் கலந்தாலோசிக்காமல் அனைத்தையும் திரைமறைவில் இரகசியமாகவே செயல்படுத்தி வருகிறது ஆளும் கும்பல். ''சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்துக்கு எதிரான முன்னணி'' என்ற விவசாயிகள் சங்கங்கள் மற்றும் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பானது, இக்கொடிய ஒப்பந்தத்தை ரத்து செய்யக் கோரி நூற்றுக்கணக்கான கடிதங்களை அரசுக்கும் அரசுத்துறை நிறுவனங்களுக்கும் அனுப்பியுள்ளபோதிலும்; இந்த ஒப்பந்தத்தைக் கிழித்தெறியுமாறு அனைத்திந்திய வர்த்தகர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ள போதிலும்; வர்த்தகம் தொடர்பான நாடாளுமன்ற நிலைக்குழு இந்த ஒப்பந்தம் பற்றிய தனது பரிசீலனை அறிக்கையை இன்னமும் இறுதியாக்காத போதிலும்; இவற்றையெல்லாம் அலட்சியப்படுத்திவிட்டு ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் தான் கைக்கூலி மன்மோகன் அரசு குறியாக இருக்கிறது. இந்த ஒப்பந்தம் பற்றி நாடாளுமன்றத்தில் விவாதிக்கக் கோருவதற்கு மேலாக வேறெதையும் செய்யத் திராணியற்ற போலி கம்யூனிஸ்டுகளைத் தவிர, வேறெந்த ஓட்டுக்கட்சியும் இந்த அடிமைச் சாசனத்துக்கு எதிராக வாய்திறக்காமல், கள்ள மவுனம் சாதித்துக் கொண்டிருக்கின்றன.

ஏற்கெனவே தாராளமய-உலகமயத் தாக்குதலால் நாடு அடிமையாக்கப்பட்டு, நாட்டு மக்கள் மரணப் படுகுழியில் வீழ்த்தப்பட்டுள்ள நிலையில், 'அந்நிய மூலதனத்தைக் கவர்ந்திழுப்பது; வளர்ச்சியைச் சாதிப்பது' என்ற பெயரில் இத்துரோக ஒப்பந்தத்தை போட்டுக் கொண்டு நாட்டையும் மக்களையும் பேரழிவுக்குள் வேகமாகத் தள்ளிவிடத் துடிக்கிறது, ஆளும் கும்பல். இந்தக் கொடூரத்துக்குப் பெயர்தான் மறுகாலனியாதிக்கம். இதனை முறியடிக்கத் தேவைப்படுவது முன்னிலும் வீரியமிக்க விடுதலைப் போராட்டம்.

● பாலன்

## அனைவருக்கும் கல்வி மாநாடு:

# அரசுப் பள்ளிகளின் அழிவைத் தடுக்கும் போராட்டம்!




**த**னியார் கல்விக் கொள்ளையர்களை வளர்த்து விடுவதில் அரசு மட்டுமின்றி, கல்வித்துறை அதிகாரிகளும் அரசுப் பள்ளி ஆசிரியர்களும் பெரும் பங்கு வகிக்கின்றனர். வழக்கமாக பிளஸ் டூ தேர்வு முடிவுகள் அறிவிக்கப்பட்டவுடன், தனியார் பள்ளிகளின் 100% தேர்ச்சி விளம்பரங்கள்தான் எல்லா பத்திரிகைகளையும் ஆக்கிரமிக்கின்றன. இந்த ஆண்டு தமிழகம் முழுவதும் 100 அரசுப் பள்ளிகள் 100 சதவீத தேர்ச்சி காட்டியிருப்பதாக கல்வித்துறை ஒரு அறிக்கை வெளியிட்டது. இந்த திடீர் அறிக்கைக்குக் காரணம் விருத்தாசலத்தில் மனித உரிமைப் பாதுகாப்பு மையமும், மாணவர்களின் கல்வி உரிமைக்கான பெற்றோர் சங்கமும் இணைந்து நடத்திய போராட்டம்.

கடலூர் மாவட்டத்தில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகளில் ஒன்றில்கூட 100 சதவீத தேர்ச்சி கிடையாது என்பதுடன், 20 பள்ளிகளில் 22 முதல் 35 சதவீத மாணவர்களே பிளஸ் டூ-வில் தேறியிருக்கின்றனர். இதற்குப் பொறுப்பேற்று கல்வித்துறை அதிகாரிகளோ, ஆசிரியர்களோ எந்தக் காலத்திலும் பதில் சொல்வதில்லை. ‘‘இந்த ஆண்டு பிட் அடிக்க விடாமல் கெடுபிடி செய்த காரணத்தினால்தான் ரிசல்ட் குறைந்து விட்டது’’ என்று கூச்சமே இல்லாமல் பதில் சொல்லியிருக்கிறார்கள் சில ஆசிரியர்கள்.

மாதம் 45,000 ரூபாய்க்கு மேல் சம்பளம் வாங்கும் ஆசிரியர்கள், கந்து வட்டி, ரியல் எஸ்டேட் போன்ற தொழில்களை நடத்துகிறார்கள். அல்லது தனியார் கல்வி நிறுவனங்களின் பங்குதாரர்களாக இருக்கிறார்கள். மக்களின் வரிப்பணத்தைத் தின்று கொண்டு ஏழை மாணவர்களின் எதிர்காலத்தைச் சூனியமாக்கும் இத்தகைய ஆசிரியர்கள் மீதும் இவர்களைக் கண்காணிக்கத் தவறிய கல்வித்துறை அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடு என்று கோரி மாவட்ட கல்வி அதிகாரியின் அலுவலகத்தை முற்றுகையிடும் போராட்டத்தை மே 17 அன்று விருத்தாசலத்தில் ம.உ.பா.மையமும், பெற்றோர் சங்கமும் இணைந்து நடத்தின. பேரணி செல்லும்போதே அதனுடன் மக்கள் பலர் இணைந்து கொண்டனர். அரசுப் பள்ளிகள் புறக்கணிக்கப்படுவது, ஆசிரியர்களின் அலட்சியம் ஆகியவற்றுக்கு எதிராகப் போராடுவது மாணவர்கள் மற்றும் பெற்றோரின் உரிமை என்பதை இப்போராட்டம் எடுத்துக்காட்டியது. குறிப்பாக பிள்ளைகளை மிகவும் கஷ்டப்பட்டு படிக்க வைக்கும் தாய்மார்கள்தான் இப்போராட்டத்துக்குப்

மே 25 அன்று கடலூரில் நடத்தப்பட்ட கல்வி உரிமைக்கான மாநாட்டை துவக்கி வைத்து உரையாற்றும் முன்னாள் அமைச்சர் வி.வி.சாமிநாதன்.



பேராதரவு தந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

நடைபெற்ற இப்போராட்டத்தை தொடர்ந்து, இவ்வமைப்புகளின் சார்பில் மே 25 அன்று கடலூரில் நடத்தப்பட்ட கல்வி உரிமைக்கான மாநாட்டில் நூற்றுக்கணக்கான பெற்றோர் கலந்து கொண்டனர். தலைமையுரையாற்றிய பெற்றோர் சங்கத் தலைவர் வெங்கடேசன், தனியார் பள்ளி நிர்வாகிகளைத்தான் சாதனையாளர்கள் என்று ஆட்சியர்கள் கவுரவிக்கிறார்களேயன்றி, தம் சொந்த ஆர்வத்தில் 86% தேர்ச்சி காட்டியிருக்கும் ஆலடி அரசுப் பள்ளி போன்றவற்றின் ஆசிரியர்களைப் புறக்கணிக்கிறார்கள் என்று சாடினார். மாநாட்டை துவக்கி வைத்த முன்னாள் அமைச்சர் வி.வி.சாமிநாதன், ''சட்டமன்றத்தில் பேசவேண்டிய பிரச்சினையை நாம் தெருவில் பேசுகிறோம். அமைச்சர், எம்.எல்.ஏ. எல்லாம் கல்வி முதலாளிகளாகி விட்டார்கள்'' என்று சாடினார். எழுத்தாளர் இமையம், ''போலி மருத்துவர் போல போலி ஆசிரியர்கள்தான் தனியார் பள்ளிகளில் பாடம் நடத்துகிறார்கள். அரசுப் பள்ளி ஆசிரியர்கள் பலர் ஓய்வெடுப்பதற்குத்தான் பள்ளிக்கு வருகிறார்கள். அத்தகையோர் நல்லாசிரியர் விருதும் வாங்குகிறார்கள்'' என்று அம்பலப்படுத்தினார்.

பு.மா.இ.மு.வின் மாநில ஒருங்கிணைப்பாளர் தோழர் கணேசன், கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் வழங்கும் 25% ஒதுக்கீடு, தனியார் கல்விக் கொள்ளையர்களை வள்ளல்களாகச் சித்தரிக்கும் தந்திரம் என்று சுட்டிக் காட்டினார். ''காந்தப் படுக்கை, ஈமு கோழி போல விளம்பரம் மூலம் தனியார் கல்வி மாயை உருவாக்கப்பட்டு, மாணவர்கள் எந்திரங்களாகவும், கொத்தடிமைகளாகவும் மாற்றப்படுகிறார்கள். இந்தத் தனியார்மயத்தைத் தடுத்து நிறுத்த வேண்டுமானால், மாணவர்களும் பெற்றோர்களும் சங்கமாகத் திரள வேண்டும்'' என்று ம.உ.பா.மையத்தின் தோழர் ராஜு விடுத்த அறைகூவலுடன் நிகழ்ச்சி நிறைவுற்றது.

– பு.ஜ.செய்தியாளர்கள்.

# அஸ்கர் அலி எஞ்சினியர்:

# இந்து, முஸ்லிம் மதவெறியை எதிர்த்து நின்ற மாமனிதர்!

தீவிர மதவெறி எதிர்ப்பு செயல் வீரரும், ஆய்வாளரும், உறுதிமிக்க இசுலாமிய சீர்திருத்தவாதியுமான அஸ்கர் அலி எஞ்சினியர் மே 14, 2013 அன்று தனது 73-வது வயதில் இயற்கை எய்தினார்.

1980-களில் தீவிரம் பெற்ற பார்ப்பன இந்து மதவெறியையும் அதற்கு எதிர்வினையாக வலுப் பெற்ற இசுலாமிய மதவெறியையும் எதிர்த்துப் போராடிய அறிவுத்துறையினரில் எஞ்சினியர் மிகவும் முக்கியமானவர். இந்து மதவெறியை மட்டுமின்றி, இசுலாமிய மதவெறி, கடுங்கோட்பாட்டுவாதத்தை எதிர்ப்பதற்கும் அவரது எழுத்துகள் பெரிதும் பயன்பட்டன.

ஷியா இசுலாமின் ஒரு உட்பிரிவான தாவூதி போஹ்ரா சமூகத்தில் பிறந்தவர் அஸ்கர் அலி எஞ்சினியர். சையத்னா என்ற தலைமை மதகுருவின் சர்வாதிகாரத்திற்கு பெயர் போனது இந்த உட்பிரிவு. சையத்னா மொகியுத்தீன் என்ற தலைமை மத குருவை வணங்க மறுத்து, தன் இளம் வயதிலேயே கலகத்தைத் தொடங்கியவர் அஸ்கர். 70-களில் சையத்னாவின் சர்வாதிகாரத்தை அம்பலப்படுத்தி டைம்ஸ் ஆஃப் இந்தியா நாளேட்டில் ஒரு கட்டுரை எழுதியதைத் தொடர்ந்து இவர் சமூக நீக்கம் செய்யப்பட்டு, சொந்த தாயைக்கூடப் பார்க்க முடியாமல் தடுக்கப்பட்டார். ஆறு முறை அஸ்கரின் மீது கொலைவெறித் தாக்குதல் நடத்தினர் சையத்னாவின் கூலிப்படையினர். அவருடைய வீடும் அலுவலகமும் சூறையாடப்பட்டு தரைமட்டமாக்கப்பட்டது. ஆனால், அஸ்கர் அலி எஞ்சினியர் இறுதிவரை பணியவில்லை.

அஸ்கர் இறை நம்பிக்கையாளர். நாத்திகக் கோட்பாடு என்ற காரணத்தினால் மார்க்சியத்தை ஒதுக்கியதாகவும், பின்னர் மார்க்சியம் தன்னை வென்றெடுத்து விட்டதாகவும் அவர் சொல்வாரென்று குறிப்பிடுகின்றனர் அவரது நண்பர்கள். ''ஒடுக்கப்பட்டோரின் ஏக்கப்பெருமூச்சு, இதயமற்ற உலகத்தின் இதயம்'' என்ற கோணத்தில் மதத்தின் பாத்திரத்தை முதன்மைப்படுத்தி மதிப்பிட்ட அஸ்கர், மத நிறுவனங்களின் பிடியிலிருந்து மதத்தை விடுவிக்க வேண்டுமெனக் கருதினார்.

ஒடுக்கப்பட்ட மக்களுக்காக உருவான இசுலாமை, பிரபுக்குலத்தினர் தம் வர்க்க நலனுக்கேற்ப வளைத்ததையும், பெண்ணுரிமையைப் பறித்ததையும், துணைக் கண்டத்தில் அஷ்ரப், அஜ்லப் என்ற மேல்சாதி - கீழ்சாதி பிரிவினை பேணப்பட்டதையும் அவர் அம்பலப்படுத்துகிறார். காலனியாதிக்க எதிர்ப்பிலும்கூட, ஒடுக்கப்பட்ட சாதிகளைச் சேர்ந்த ஏழை முசுலீம்களும் உலமாக்களும்தான் முன்நின்றனரேயன்றி, மேட்டுக்குடி முஸ்லிம்கள் அல்ல என்பதையும் தனது ஆய்வுகளில் ஆதாரபூர்வமாக அவர் விளக்குகிறார்.

1980-களில் ஷா பானு வழக்கில், குற்றவியல் நடைமுறைச் சட்டப்படி அந்த மூதாட்டிக்கு ஜீவனாம்சம் வழங்கப்பட்டதை எதிர்த்தும், முஸ்லிம் பெண்களின் மணவிலக்கு வழக்குகள் ஷரியத்தின்படி மட்டுமே தீர்ப்பளிக்கப்பட வேண்டும் என்றும் இசுலாமிய மதவாதிகள் எழுப்பிய கோரிக்கையை எதிர்ப்பதில் அஸ்கர் முன்னணியில்

நின்றார். இந்தப் போராட்டம் இந்து மதவெறி சக்திகளை வளர்த்து விடுவதற்குத்தான் உதவும் என்று சாடினார்.

இந்து மதவெறியின் எதிர்வி ளைவாகத்தான் இசுலாமிய கடுங்கோட்பாட்டுவாதமும், தீவிரவாதமும் வலுப்பெற்றன என்ற போதிலும், சிறுபான்மை மதவெறியை அவர் மென்மை யாக அணுகவில்லை. மதவெறி யினால் ஏற்படும் பாதிப்புகளை, இந்து-முஸ்லிம் என்ற சட்டகத் திற்கு அப்பாற்பட்டு, உழைக் கும் வர்க்கத்துக்கு ஏற்படும் பாதிப்பு என்ற கோணத்தி லேயே அவர் முதன்மையாக அணுகினார்.



அஸ்கர் அலி எஞ்ஜினியர்: துயரம் நிறைந்த இழப்பு.

''பதிலடி தரவேண்டும் என்று சில முஸ்லிம் இளைஞர் கள் கருதுவது நியாயமாகவே தெரிகிறது'' என்று பிவாண்டி கலவரத்தைப் பார்த்த பின்னர் அஸ்கரிடம் தான் கூறியதாக வும், அதை அவர் கடுமையாக மறுத்ததாகவும் நினைவு கூர்கிறார், பத்திரிகையாளர் ஜோதி புன்வானி. 1993-இல் மும்பையில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட முஸ்லிம் கள் கொல்லப்பட்டிருந்த அச்சுறுத்தும் சூழலில், மும் பையின் குடிசைப் பகுதிகள் முழுவதிலும் அவர் முன் நின்று நடத்திய நல்லிணக்க பேரணியில் அஸ்கர் ஆற் றிய உரைகள் வர்க்க ஒற்றுமையைத்தான் வலியுறுத்து கின்றன.

மதக் கலவரங்கள் தொடர்பான அஸ்கரின் ஆய்வுகள் முன்மாதிரியானவை. ஜபல்பூர் கலவரத்தில் தொடங்கி வட இந்தியாவில் அடுத்தடுத்து நடத்தப்பட்ட கலவரங் களை அவர் நுணுக்கமாக ஆய்வு செய்திருக்கிறார். ஒவ் வொரு பிரச்சினையிலும் என்ன விதமான வர்க்க முரண் பாடுகள் அல்லது சமூக பொருளாதாரக் காரணிகள் எப் படி மத முரண்பாடுகளாகத் திரிக்கப்பட்டன என்பதை அவர் நிறுவுகிறார்.

''நாலு பெண்டாட்டி, முஸ்லிம் வாக்கு வங்கி, மத மாற்றம்'' என்பன போன்ற இந்துத்துவ சக்திகள் பரப் பிய இசுலாமிய எதிர்ப்பு புனைவுகளுக்கும் அரை உண் மைகளுக்கும் சராசரி இந்துக்கள் எனப்படுவோர் பலி யாகியிருந்த சூழலில், அவற்றை முறியடிப்பதற்கு நமக்கு ஆதாரங்கள் தேவைப்பட்டன. அவற்றை அரும் பாடுபட்டுத் திரட்டி நம் கையில் ஆயுதமாய் வழங்கிய வர்களில் முக்கியமானவர் அஸ்கர்.

இந்தியாவின் வரலாற்றையே இந்து-முஸ்லிம் மோதலின் வரலாறாகத் திரித்துக் காட்டும் சதியை இந் துத்துவ சக்திகள் மிகத் தீவிரமாக அரங்கேற்றி வந்த காலத் தில், ஆதாரபூர்வமாக அவற்றை மறுக்கும் எழுத்து கள் அஸ்கரிடமிருந்து வந்தன. மன்னர்களை அவர்களுடைய வர்க்க நலன்தான் இயக்கியதே யன்றி, மதமல்ல என்பதை அவர் வரலாற்று ஆதாரங்களு டன் நிறுவினார். மத வேறு பாடுகளுக்கு அப்பாற்பட்டு உழைக்கும் வர்க்கத்திடம் நிலவி வந்த ஒற்றுமையின் சான்றாக, சூஃபி மற்றும் வட இந்திய பக்தி இயக்க மரபு களிடையே காணப்படும் ஒற்று மையை அவர் வரலாற்றி லிருந்து எடுத்துக் காட்டினார்.

இசுலாமிய சீர்திருத்தவாதி யாக இருந்தபோதிலும், எப் போதும் அவர் மதச்சார்பற்ற வர்களுடன்தான் இணைந்து நின்றார். இறந்த பின்னரும் முற்போக்காளர்கள் துயிலும் இடுகாட்டில் தன்னைப் புதைக்க வேண்டும் என்றே அவர் விரும்பினார். ''கொள் கையைக் கடைப்பிடிப்பதில் பாறை போன்ற உறுதியைக் கொண்டவர்'' என்று தனது தந்தையை நினைவு கூர்கிறார் அவரது மகன் இர்பான் எஞ்சினியர்.

எனினும், மதவெறியை எதிர்த்த போராட்டத்திற்கே தனது வாழ்நாளை அர்ப்பணித்த அந்த மனிதர், குஜராத் படுகொலை பற்றிய செய்திகளை மட்டும் கேட்க விரும் பவில்லை என்று கூறுகிறார் அவரது நண்பர் ஜாகிர் ஜன் முகமது. ''அதில் அவருக்கு அக்கறையில்லை என்ப தல்ல; எல்லா மனிதர்களுமே அடிப்படையில் நல்லவர் கள்தான் என்பது அஸ்கர் கொண்டிருந்த நம்பிக்கை. அவருடைய அந்த நம்பிக்கையைத் தகர்க்கும் விதத்தில் இருந்தன குஜராத்திலிருந்து வந்த செய்திகள்'' என்று குறிப்பிடுகிறார் ஜன்முகமது

மனிதர்கள் அடிப்படையில் நல்லவர்கள் என்பன போன்ற அருபமான நம்பிக்கைகள் தகர்வது தவிர்க்க வியலாததுதான். இருப்பினும், ''பழகிய அண்டை வீட்டாரே கொலை செய்வது, வீடு புகுந்து சூறை யாடுவது, கடைகளை அபகரித்துக் கொண்டு அகதிகளா கத்துரத்தியடிப்பது, கர்ப்பிணிப் பெண்ணின் வயிற்றைக் கிழித்து சிசுவைக் கொல்வது'' போன்ற குஜராத் இனப் படுகொலையின் கொடூரங்களைக் கேட்டு அஸ்கரின் நல்லெண்ணமிக்க இதயம் நடுங்கியிருக்கக் கூடும்.

தனது ஆதாரமான நம்பிக்கை நழுவியதால் அவரை அழுத்தியிருக்கக் கூடிய துயரத்தின் சுமை, பொருள் முதல்வாதிகளாகிய நம் மீதும் இறங்குகிறது. அவரது மறைவு தோற்றுவிக்கும் துயரத்தைக் காட்டிலும் இது கனமானது.

● சூரியன்

# எதிர்கொள்வோம்!

**இணையத்தின் மூலமாகவும் நேரடியாகவும் எமது தோழர்களிடம் எழுப்பப்படும் கேள்விகள், வைக்கப்படும் விமர்சனங்களைத் தொகுத்து அவற்றுக்குத் தக்க பதிலளிக்கும் பகுதி.**

இவ்வளவு நாளாகப் புலிகளையும் பிரபாகரனையும் பாசிஸ்டு என்று கூறிவிட்டு, மாணவர் போராட்டம் அளித்த நிர்பந்தத்தின் காரணமாக, தாங்களும் ஈழப் போராட்டத்துக்கு ஆதரவு என்று வேறு வழியில்லாமல் காட்டிக்கொள்கிறீர்கள். அல்லது ஆதாயம் அடைவதற்காக இப்படி நடிக்கிறீர்கள்.

இப்படிச் சொல்லுவது கொஞ்சமும் உண்மைக் கலப்பில்லாத முழுப்பொய். பாசிஸ்டுகளின் அதிகாரபூர்வ ஊதுகுழல்களான கோயபல்சு - கோயரிங் போன்றவர்கள்கூட இப்படிப் புளுகுவதற்குத் துணிய மாட்டார்கள். ஆனால், தங்களுக்கென்று எந்தவொரு சொந்த அரசியல் திட்டமும் நடைமுறையும் இல்லாமல் ஈழச் சிக்கலை வைத்துக் கொண்டு பிழைப்பு நடத்தும் சில அரசியல் காளான்கள் தொடர்ந்து இப்படிப் புளுகி வருகிறார்கள்.

ஈழ விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவு என்ற நிலையிலிருந்து ம.க.இ.க., புதிய ஜனநாயகம் மற்றும் இதன் தோழமை அமைப்புகள் ஒருபோதும் விலகியிருந்ததாகவோ, ஒதுங்கியிருந்ததாகவோ, அல்லது மற்ற அமைப்புகளை விடப் பின்தங்கியிருந்ததாகவோ இவர்களால் ஆதாரபூர்வமாக நிரூபிக்க முடியுமா? அதற்கு மாறாக, ஈழ விடுதலைப் போராட்டத்தை எப்போதும் தம் தலையில் தாங்கிச் சுமப்பவர்களாகக் காட்டிக் கொள்ளும் நெடுமா, வைகோ, பெமா, ராமா, திருமா, தியாகு, சுப.வீ., வீரமணி போன்றவர்களெல்லாம் தமது பிழைப்புவாத அரசியல் நலனுக்காகவும் தம் தோலைக் காத்துக் கொள்வற்கும் ஈழம் என்ற சொல்லை உச்சரிப்பதற்கோ, எழுதுவதற்கோகூட அஞ்சிய தருணங்களையும் நாம் ஆதாரங்களுடன் எடுத்து காட்ட முடியும்.

அவர்களோடு சேர்ந்து இப்போது முளைத்துள்ள புலிகளின் புதிய துதிபாடிகளும் ஈழத்தின் எதிரிகளை வீழ்த்துவதை விட, ம.க.இ.க., புதிய ஜனநாயகம், பு.மா.இ.மு., மற்றும் இவற்றின் தோழமை அமைப்புகளை ஈழ விடுதலைப் போராட்டத்துக்கு எதிரானவை என்று புளுகி, இவற்றைத் தமிழ் மக்களிடமிருந்து தனிமைப்படுத்தும் பணியை முதன்மையாகக் கொண்டு செயல்படுகிறார்கள். பிரபாகரனையும் விடுதலைப் புலிகளையும் பாசிஸ்டுகள் என்று மதிப்பிடுவதாலும் ''ஈழச் சிக்கலுக்குப் பொது வாக்கெடுப்பு'' என்று ஒருபுறம் முழுங்கிக் கொண்டே, ''தனி ஈழம் தான் ஒரே தீர்வு'' என்பதை இப்பொழுதே முடிந்த முடிவாகக் கூறாதவர்களை, ஈழப் போராட்ட ஆதரவுக்கு எதிர்நிலைக்குத் தள்ளுகின்றனர்.

''ஈழத்திலே வெறியாட்டம்! இங்கே எதற்கு குடியரசுக் கொண்டாட்டம்!!'' என்ற முழக்கத்தின் கீழ் ஈழத்தின் மீது நடத்தப்படும் போரில் இந்திய அரசு உடந்தையாக இருப்பதை அம்பலப்படுத்தி ஜனவரி 26, 2009 அன்று சென்னை - சைதாப்பேட்டை பனகல் மாளிகை அருகே ம.க.இ.க. உள்ளிட்ட புரட்சிகர அமைப்புகள் இணைந்து நடத்திய எழுச்சிமிகு ஆர்ப்பாட்டம். (கோப்புப் படம்)




பிரபாகரன் மற்றும் புலிகளை பாசிஸ்டுகள் என்று இப்போதும்தான் ம.க.இ.க., புதிய ஜனநாயகம் மற்றும் இதன் தோழமை அமைப்புகள் கூறி வருகின்றன; எதற்காகவும் யாருக்காகவும் அவ்வாறு கூறுவதை இந்த அமைப்புகள் நிறுத்திவிடவில்லை; பிரபாகரன் மற்றும் புலிகளை பாசிஸ்டுகள் என்பது கடந்தகால வரலாற்று உண்மை. பிரபாகரன் மற்றும் அவர் தலைமையிலான விடுதலைப் புலிகளின் முந்தைய பாசிச அரசியல், இராணுவத் தவறுகளிலிருந்து பாடங்கற்றுக் கொள்ள

வேண்டும். மீண்டும் அவர்களின் வழி முறைகளை யாரும் பின்பற்றக் கூடாது.

ஆனால், கடந்த முப்பதாண்டுகால ஈழப் போராட்டத்தில் பிரபாகரனும் புலிகளும் தவறே செய்யவில்லை; ஈழப்போரின் துயரமான முடிவுகளுக்குப் பன்னாட்டுச் சதியும் இலங்கை, இந்திய அரசுகள் நடத்திய கொடூரமான தாக்குதல் மட்டும்தான் காரணம் என்று கூறி, பிரபாகரன் மற்றும் புலிகளின் பாசிச அரசியல், இராணுவ நடவடிக்கைகளையும் நியாயப் படுத்திக் கொண்டு, பிரபாகரன் மற்றும் புலிகள் மீது கட்டியெழுப்பப்பட்ட பிரமை, தனிநபர் வழிபாடு, கற்பிதங்கள் எல்லாமும் தொடரும் பொழுது இந்த விடயம் அவசியமாகிறது. இந்த அளவுக்குத்தான் ஈழச் சிக்கலின் இன்றைய நிலையில் பிரபாகரன் மற்றும் புலிகளை பாசிஸ்டுகள் என்ற கருத்து-மதிப்பீடு முக்கியத்துவமுடையது.



ராஜபக்சே கும்பலுடன் கைகோர்த்துக் கொண்டு ஈழத்தமிழின அழிப்புப் போரை நடத்திவரும் இந்திய அரசை அம்பலப்படுத்தி, 12.02.2009 அன்று திருச்சியில் அனைத்துப் பள்ளி - கல்லூரி மாணவர்களை அணிதிரட்டி, மத்தியப் பேருந்து நிலையம் அருகே உள்ள 117-ஆவது பிரதேச இராணுவப்படைத் தலைமை அலுவலகத்தை முற்றுகையிட்டு பு.மா.இ.மு. நடத்திய ஆர்ப்பாட்டம் (கோப்புப் படம்)

‘‘மாணவர் போராட்டம் அளித்த நிர்ப்பந்தம்’’ என்பது கடைந்தெடுத்த பொய்யும் மாணவர் போராட்டம் பற்றிய ஞானசூனியத்தின் பிதற்றலும் தான். கடந்த பல ஆண்டுகளில் ஈழ ஆதரவு மாணவர் போராட்டத்தைக் கட்டியெழுப்பியதில் ம.க.இ.க., புதிய ஜனநாயகம் மற்றும் இதன் தோழமை அமைப்புகளின் பங்கு, குறிப்பாக, புட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணியின் பங்கு மிகமிக முக்கியமானதாகும்.

புலிகளிடமிருந்து ஈழத்தின் கிழக்கு மாகாணத்தை முழுமையாகக் கைப்பற்றிக்கொண்ட இலங்கை பாசிச இராணுவம் 2008 நவம்பரில் வன்னியின் மீது தாக்குதல் தொடுத்து, புலிகளின் தலைமையகமாக இருந்த கிளிநொச்சியைச் சுற்றிவளைத்தது.

கசாப்புக்காரனிடமே காருண்யம் கோரும் கதையாக, கொலைகாரன் மன்மோகனிடமே, இங்குள்ள ஓட்டுக் கட்சிகள் ‘கோரிக்கை’ வைத்துக் கொண்டிருந்த சூழலில், தமிழக மக்கள் போராட்டங்கள் இந்திய அரசுக்கும் ஆளும் வர்க்கங்களுக்கும் எதிராக நடத்தப்பட வேண்டும் என்று ம.க.இ.க., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு., வி.வி.மு., பெ.வி.மு., ஆகிய அமைப்புகள் முன்வைத்தன. அந்த அடிப்படையில் அவ்வமைப்பினர், 2008 நவம்பரில் ‘‘ஈழத் தமிழர் படுகொலைக்குத் துணைநிற்கும் இந்திய அரசை முறியடிப்போம்’’, ‘‘கொலைவெறி பிடித்த மன்மோகன் சிங்கே, உன் டாடாவும், அம்பானியும் கொள்ளையடிக்க எங்கள் ஈழத் தமிழர் சாக வேண்டுமா?’’ - என விண்ணதிரும் முழக்கங்களை எழுப்பி, சென்னை அண்ணாசாலையை மறித்து, நந்தனம் இராணுவ எஸ்டேட் அலுவலகத்தைத் திடீரென்று முற்றுகையிட்டுப் போராடினர். திருச்சி இராணுவ வளாகத்தை (கண்டோன்மெண்ட்) ம.க.இ.க., பு.மா.இ.மு. முதலான அமைப்புகள் முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் நடத்தின.

‘‘சென்னையில் மட்டுமின்றி, அதே முழக்கங்களை முன்வைத்து இந்தப் புரட்சிகர அமைப்புகள் திருச்சி பாலக்கரையிலும்; கோவை செஞ்சிலுவைச்சங்கம் முன்பாகவும்; தஞ்சை இரயிலடி எதிரிலும்; ஓசூர் ராம்நகர் அண்ணாசாலை அருகிலும்; தருமபுரி ராஜகோபால் பூங்கா முன்பாகவும்; கடலூரில் உழவர் சந்தை அருகிலும் திரளான மக்கள் பங்கேற்புடன் கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்தின.

அந்த நாளில் போலீசின் அனுமதி மறுப்பு மற்றும் மழை காரணமாகத் தடைபட்ட பல பகுதிகளில் பேருந்து, ரயில் மற்றும் தெருமுனைப் பிரச்சாரங்களை முன்னெடுத்துச் சென்றன. இதன் தொடர்ச்சியாக கடந்த 17.10.08 அன்று துறையூர் பேருந்து நிலையம் எதிரிலும், கிருஷ்ணகிரி வட்டாட்சியர் அலுவலகம் எதிரிலும் கண்டன ஆர்ப்பாட்டத்தையும்; சென்னை குரோம்பேட்டை பேருந்து நிலையம் அருகில் தெருமுனைக் கூட்டத்தையும் நடத்தின. 19.10.08 அன்று கோத்தகிரியில், நீலமலை அனைத்துத் தொழிலாளர் சங்கத்தினர் எழுச்சிமிகு ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். 20.10.08 அன்று திருச்சி சத்திரம் பேருந்து நிலையம் அருகில் மாபெரும் பொதுக்கூட்டம், கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.’’

‘‘13.11.08 அன்று அதிராம்பட்டினத்தில், ஈழத் தமிழர் படுகொலைக்குத் துணை நிற்கும் இந்திய அரசுக்கெதிராக வி.வி.மு; பு.மா.இ.மு. ஆகிய அமைப்புகளின் சார்பில் செங்கொடி ஏந்தி விண்ணதிரும் முழக்கங்களுடன் ஆர்ப்பாட்டம் நடந்தது. 19.11.08 அன்று கிருஷ்ணகிரியில் பு.ஜ.தொ.மு; வி.வி.மு., ஆகிய அமைப்புகளின் சார்பில் பகுதிவாழ் மக்களின் ஊக்கமான பங்கேற்போடு பொதுக்

கூட்டம் நடைபெற்றது. கடலூர் மாவட்டம் - நெல்லிக் குப்பத்தில், வி.வி.மு; பு.மா.இ.மு; பு.ஜ.தொ.மு; ஆகிய அமைப்புகள் இணைந்து ஈழத்தமிழர் படு கொலைக்குத் துணைபோகும் இந்திய அரசைச் சாடிப் பொதுக்கூட்டம் நடத்தின. புதுச்சேரி மற்றும் விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த இப்புரட்சிகர அமைப்புகள் இணைந்து 22.11.08 அன்று கோட்டக்குப்பத்தில் இதே முழக்கத்தின் கீழ் பொதுக்கூட்டத்தை நடத்தின. இப் பொதுக்கூட்டங்களும் ம.க.இ.க. மையக் கலைக் குழுவின் புரட்சிகர கலைநிகழ்ச்சியும் ஆயிரக்கணக்கான உழைக்கும் மக்களின் நெஞ்சில் ஈழ ஆதரவு அரசி யலைப் பதியவைத்தன.''

''2008 - ஆம் ஆண்டு இறுதியில் ஈழத்தமிழர்கள் மீதான அழித்தொழிப்புப் போர் உச்சமடைந்து வந்த சூழலில் பாசிச சிங்கள பேரினவாத ஒடுக்குமுறைக்கு எதிராகவும், இப்படுகொலைகளுக்குத் துணை நிற்கும் இந்திய அரசுக்கெதிராகவும், புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணி தொடர் பிரச்சார இயக்கத்தை மேலும் உறுதியாக நடத்தியது.

''திருச்சியில், 08.12.08 அன்று மாலை பாலக்கரை பிரபாத் திரையரங்கம் எதிரில் அனைத்துக் கல்லூரி மாண வர்களை ஒருங்கிணைத்து பு.மா.இ.மு. தலைமையில் ஈழத்தமிழரின் சுயநிர்ணய உரிமைப் போரை ஆதரித்து எழுச்சிமிகு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப் பாட்டத்தில் திருச்சி அரசு சட்டக் கல்லூரி, உருமு தன லெட்சுமி கல்லூரி, நேஷனல் கல்லூரி, பிஷப் ஹீபர் கல்லூரி, இன்ஃபன்ட் ஜீசஸ் பாலிடெக்னிக் மற்றும் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் பெருந்திரளாகப் பங்கேற்றனர். ம.க.இ.க., பு.மா.இ.மு., தோழர்களோடு மாணவர் பிரதிநிதிகளும் எழுச்சியோடு உரையாற்றினர்'' (ஆதாரம்: புதிய ஜனநாயகம், 2008).

2009 ஜனவரி-பிப்ரவரியில் இலங்கை இராணுவம் கிளிநொச்சியைக் கைப்பற்றி, வன்னியைத் திறந்தவெளி வதை முகாமாக சிங்கள இராணுவம் மாற்றிவிட்ட நிலை யில், புலிகள் முல்லைத் தீவுக்கு தள்ளப்பட்ட நிலையில் ''எப்படியாவது போரை நிறுத்துங்கள், இங்கே நாங்கள் கொத்துக் கொத்தாகக் கொல்லப்படுகிறோம்'' என்று துயரக்குரல் எழுப்பினர், ஈழத் தமிழர். முத்துக்குமார் தீக் குளிப்பும், வழக்குரைஞர்கள் போராட்டங்களும் தமிழகத் தில் ஈழ ஆதரவு உணர்வலைகளை ஏற்படுத்தின. முத்துக் குமார் இறுதி ஊர்வலத்தையும் மாணவர்கள், வழக்குரை ஞர்கள் போராட்டங்களையும் போர்க்குணமிக்கவையாக மாற்றியதில் பு.மா.இ.க., ம.க.இ.க. தோழர்களின் பாத்திரம் முதன்மையானதாக இருந்தது.

## “போர்க்குற்றவாளி ராஜபக்சே கும்பலைத் தண்டிக்கப் போராடுவோம்!”

### – புரட்சிகர மாணவர் – இளைஞர் முன்னணியின் ஆர்ப்பாட்டம்

நான்காண்டுகளுக்கு முன்பு நடந்த இறுதிக்கட்ட ஈழப் போரில், 2009 மே 17-ஆம் நாளில் பல்லாயிரக் கணக்கான ஈழத்தமிழ் மக்களைக் கொன்றொழித்த தோடு, இலட்சக்கணக்கான ஈழத்தமிழ் மக்களை இன்னமும் முட்கம்பியிடப்பட்ட தடுப்பு முகாம்களில் அடைத்து வதைத்துவரும் இன அழிப்புப் போர்க்குற்ற வாளி ராஜபக்சே கும்பலைத் தண்டிக்கவும், ஈழத் தமிழின அழிப்புப் போரை வழிகாட்டி இயக்கிய இந்திய மேலாதிக்க அரசைத் திரைகிழித்தும் மே-17 முள்ளிவாய்க்கால் படுகொலை நாளில் தமிழக மெங்கும் புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி தாங்கள் செயல்படும் பகுதிகளில் ஈழத் தமிழரின் தன்னுரிமைக்கான மாணவர் முன்னணியுடன் இணைந்து நினைவஞ்சலிக் கூட்டங்களையும் ஆர்ப் பாட்டங்களையும் நடத்தின.




சென்னையில், மே 17 அன்று வள்ளுவர் கோட்டம் அருகில் பு.மா.இ.மு.வும் ஈழத் தமிழரின் தன்னுரிமைக்கான மாணவர் முன்னணியும் இணைந்து, இனஅழிப்புப் போரில் கொல்லப்பட்ட ஈழத்தமிழர் களுக்கு அஞ்சலி செலுத்தியதோடு, ''இனப்படுகொலைக் குற்றவாளி ராஜபக்சே கும்பலைத் தண்டிக்க நூரம்பர்க் போர்க் குற்ற விசாரணைக்குக் குறைவான எதையும் ஏற்க மறுப்போம்! தமிழகத்தில் சிறப்பு அகதி முகாம் எனும் முள்வேலிக்குள் சிறை வைக்கப்பட்டிருக்கும் ஈழத்தமிழ் அகதிகளை விடுதலை செய்யப் போராடுவோம்! இந்திய மேலாதிக்க அரசின் அலுவல கங்களைத் தமிழக மண்ணில் செயல்படவிடாமல் முடக்கு வோம்!'' எனும் முழக்கங்களோடு மாணவர்களை அணிதிரட்டி ஆர்ப்பாட்டத்தை நடத்தியது.

தருமபுரி மாவட்டத்தில், மே 17 அன்று தருமபுரி, பாப்பாரப் பட்டி, இண்டூர், பென்னாகரம் ஆகிய நான்கு பகுதிகளில் பு.மா.இ.மு. சார்பில் நினைவஞ்சலிக் கூட்டங்கள் நடை பெற்றன. இக்கூட்டங்களில் உரையாற்றிய முன்னணியாளர் கள், இனப்படுகொலைக் குற்றவாளி ராஜபக்சே கும்பலைத் தண்டிக்கவும், இக்கருப்பு நாளை நினைவுகூர்வதன் மூலம் ஈழத்தமிழ் மக்கள் தமது தன்னுரிமைக்கான போராட்டத்தைத் தொடர்வதற்குத் துணைநிற்கவும் உறுதியேற்று, போராட அறை கூவினர்.

மெழுகுவர்த்தி ஏந்தி அஞ்சலி செலுத்தும் கையாலாகாதப் போக்குகளைத் திரைகிழித்து பு.மா.இ.மு. நடத்திய இந்த நினை வஞ்சலிக் கூட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் தமிழக மக் களிடம் புதிய நம்பிக்கையை ஏற்படுத்துவதாக அமைந்தன.

-பு.ஜ. செய்தியாளர்கள்.

புு.மா.இ.மு. தலைமையில் சென்னை பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் நூற்றுக்கணக்கில் சாலை மறியலில் இறங்கி, போலீசு கைது முயற்சியை முறியடித்தனர். முத்துக் குமார் உடலடக்கத்தை அரசியலற்றதாக நடத்தும்படியான போலீசின் கோரிக்கையை தமிழினவாதக் குழுக்கள் ஏற்ற நிலையில், ம.க.இ.க. பு.மா.இ.மு., தோழர்கள் தலையிட்டு அதை அரசியல் ரீதியிலானதாக்கினர். பு.மா.இ.மு., தோழர்கள் சிங்கள இராணுவ வெறியின் கொடூரங்களை சித்தரிக்கும் காட்சிகளோடு முத்துக் குமார் இறுதி ஊர்வலம் அரசியல் எழுச்சியோடு நடந்தது.




ம.க.இ.க. உள்ளிட்ட புரட்சிகர அமைப்புகள் இணைந்து, 2009-ஆம் ஆண்டு மே தினத்தன்று, ''ஈழத்தின் மீதான இந்திய மேலாதிக்கப் போருக்குப் பதிலடி கொடுப்போம்!'' என்ற அரசியல் முழக்கத்தை முன்வைத்து தஞ்சையில் நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணி. (கோப்புப் படம்)

அதன்பிறகும், ஒட்டுமொத்த ஈழத் தமிழினத்தையும் அழித்தொழிக்கும் பயங்கரவாதப் போரை சிங்கள இன வெறி அரசோடு கூட்டுச்சேர்ந்து நடத்திய இந்தியாவின் சதிச் செயலை எதிர்க்காமல், ஈழப் போரை நிறுத்தி, அமைதி வழியில் தீர்வு காணுமாறு இந்திய அரசிடமே கெஞ்சிக் கேட்கும் அடையாளப் போராட்டங்களை மட்டும் நடத்திவந்தன, தமிழினவாதக் குழுக்கள். ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு., முதலிய புரட்சிகர அமைப்புகள் மட்டுமே ஈழத் தமிழர் ஆதரவு போர் நிறுத்தக் கோரிக்கையோடு, இந்தியாவின் சதிச் செயலை எதிர்த்த தொடர்பிரச்சார இயக்கத்தைத் தமிழகமெங்கும் நடத்தி வந்தன. ஈழப் போர் நிறுத்தத்திற்காகப் பல பத்தாயிரம் துண்டறிக்கைகளையும் பிரசுரங்களையும் சுவரொட்டிகளையும் வெளியிட்டு, பிரச்சாரக் குழுக்களைக் கொண்டு ரயில்களிலும் பேருந்துகளிலும் பிரச்சார இயக்கங்களைத் தமிழகம் தழுவிய அளவில் தொடர்ந்து நடத்தின. ஆனால், தமிழினக் குழுக்களோ, 2009 நாடாளுமன்றத் தேர்தல்களில் ஜெயா- பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் போர்நிறுத்தம் ஏற்படும், ''இலை மலர்ந்தால் ஈழம் மலரும்'' என்ற மயக்கத்தில் மாணவர்களையும் மக்களையும் மூழ்கடித்தனர்.

2009 தமிழினப் படுகொலைக்குப் பின் அடுத்த நான்காண்டுகளில் தமிழக மாணவர்களிடையேயும் பொது மக்களிடையேயும் பெரிய அளவு எழுச்சி எதுவும் ஏற்பட்டுவிடவில்லை. பெரும்பாலும் ஈழ ஆதரவு இயக்கங்களைச் சேர்ந்த மாணவர்கள் மட்டும் பங்கேற்ற போராட்டங்கள் மட்டுமே நடந்தன. இதற்கான முக்கியக் காரணங்களில் ஒன்று முள்ளிவாய்க்கால் போரில் பிரபாகரனோடு விடுதலைப் புலிகள் கூண்டோடு அழிக்கப்பட்டது கண்டு பிரமை தட்டிப் போயிருந்த தமிழினக் குழுக்கள், ''பிரபாகரன் கொல்லப் படவில்லை; பிரபாகரனோடு விடுதலைப் புலிகள் மீண்டும் வருவார்கள்; சிங்கள வெறியர்களைப் பழி தீர்ப்பார்கள்'' என்று புளுகி வந்தார்கள்.

ம.க.இ.க., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு., வி.வி.மு., பெ.வி.மு., ஆகிய அமைப்புகள் மட்டுமே ஈழப் போரின் இறுதி நாட்களின் உண்மைகளைச் சொன்னதோடு, போர்க் குற்றவாளி ராஜபக்சேவைத் தண்டிப்பது, ஈழ விடுதலைப் போராட்டம் தொடருவது ஆகியவற்றுக்காக மக்கள் இயக்கத்தைக் கட்டியெழுப்பும் தீர்வை முன்வைத்து செயல்படுகின்றன.

உண்மை இவ்வாறு இருக்கையில், முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலைகள் நடந்து கிட்டத்தட்ட நான்காண்டுகளுக்குப் பிறகு வந்த மாணவர் போராட்ட நிர்ப்பந்தம் காரணமாகத்தான் ''ஈழப்போராட்டத்துக்கு ஆதரவு என்று வேறு வழியில்லாமல் காட்டிக்கொள்கிறீர்கள். அல்லது ஆதாயம் அடைவதற்காக இப்படி நடிக்கிறீர்கள்'' என நம்மைப் பார்த்துக் கூறுவது பச்சைப் பொய் தவிர வேறென்ன? முள்ளிவாய்க்கால் முடிவுகளுக்கு பிரபாகரன், புலிகள் மட்டுமல்ல; தமக்குரிய பங்கை மூடிமறைப்பதற்காகவும், அதைச் சொல்லும் நமது வாயை மூடுவதற்காகவும் தமிழினவாதக் குழுக்கள் இவ்வாறு அவதூறு செய்கின்றன. ஆனால், அவர்கள் கனவு பலிக்காது.

மேலும், ''ஈழ ஆதரவு மாணவர் போராட்டம்'' என்பது எமது பு.மா.இ.மு. தலைமையிலான ''ஈழத் தன்னுரிமைக்கான மாணவர் முன்னணி''யையும் உள்ளடக்கியதுதான். விமான நிலைய முற்றுகை, ரயில்வே தலைமை அலுவலக முற்றுகை உட்பட சென்னை, கோவை, திருச்சி எனத் தமிழகமெங்கும் அவ்வமைப்பு நடத்திய போராட்டங்கள் எல்லாம் ஈழப் போராட்டத்துக்கு ஆதரவு என்று வேறு வழியில்லாமல் காட்டிக்கொள்ளும் அல்லது ஆதாயம் அடைவதற்காக இப்படி நடிப்பு என்று செல்வதன் மூலம் அவற்றில் பங்கேற்ற ஆயிரக்கணக்கான மாணவர்களைத்தான் அவர்கள் அவமானப்படுத்துகிறார்கள்.

- ஆசிரியர் குழு

## பிரதமர் பதவிக்கு மோடி:

# அருகதை என்ன?

**கிரிமினல்கள் தேர்தலில் நிற்பதைத் தடை செய்ய வேண்டுமெனக் கோரப்படும் நிலையில், காவி கிரிமினலான நரேந்திர மோடி பிரதமர் பதவிக்கான தகுதி வாய்ந்த நபராக முன்னிறுத்தப்படுவது அவமானகரமானது.**

நரேந்திர மோடி என்ற பெயரைக் கேட்டவுடனேயே இந்திய மக்கள் பெரும்பாலோருக்கு நினைவுக்கு வருவது 2002-ஆம் ஆண்டு குஜராத்தில் நடந்த பெருந்திரள் முசுலீம் படுகொலைதான். எத்தனை சிறப்புப் புலனாய்வுக் குழுக்கள் வந்து மோடியைக் குற்றமற்றவர் என அறிக்கை அளித்தாலும், அப்படுகொலையின் சூத்திரதாரி, தளபதி மோடிதான் என்ற உண்மையை, அவரது கரங்களில் ஆயிரக்கணக்கான அப்பாவி முசுலீம்களின் இரத்தக் கறை படிந்திருப்பதைப் பொதுமக்களின் மனதிலிருந்து, அவர்களின் நியாய உணர்ச்சியிலிருந்து துடைத்தெறிந்துவிட முடியாது. குஜராத் படுகொலைகளுக்காக நரேந்திர மோடி தண்டிக்கப்பட வேண்டும் எனப் பாதிக்கப்பட்ட முசுலீம்களும் சமூக ஆர்வலர்களும் பல்வேறு இடர்ப்பாடுகளுக்கு மத்தியில் போராடிவரும் வேளையில், அக்கிரிமினல் பேர்வழியைப் பிரதமர் நாற்காலியில் அமர்த்த வேண்டுமென்ற பிரச்சாரம் பத்திரிகைகளில், இணைய தளங்களில் தீவிரமடைந்திருக்கிறது.

ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு வரை துக்ளக் சோ, அ.தி.மு.க. தலைவி ஜெயா உள்ளிட்ட ஒரு சிறு பார்ப்பன-பாசிச கும்பல் மட்டும்தான் நரேந்திர மோடிக்கு நெருக்கமானதாக இருந்துவந்தது. அந்தளவிற்கு இந்திய அரசியல் அரங்கில் ஒதுக்கப்பட்டவராக இருந்த மோடியோடு இன்று இந்தியத் தரகு முதலாளிகள் மற்றும் தேசியப் பத்திரிகைகளில் ஒரு பிரிவு மிகவும் வெளிப்படையாகக் கைகோர்த்துக்கொண்டு, அவரைப்பிரதமர் பதவிக்கான தகுதி வாய்ந்த நபராக முன்னிறுத்துகின்றனர். 1930-களில் ஜெர்மன் முதலாளி வர்க்கம் அடால்ஃப் இட்லரை அந்நாட்டின் அதிபராக்க ஆதரளித்துத்தீவிரமாகப் பிரச்சாரம் நடத்தியதைப் போன்று, இன்று இந்தியத் தரகு முதலாளி வர்க்கமும் அவர்கள் கட்டுப்பாட்டின் கீழுள்ள பத்திரிகைகள், செய்தி சேனல்களும் மோடியின் பிரச்சாரப் பீரங்கியாகச் செயல்பட்டு வருகின்றனர்.

''இந்தியப் பொருளாதாரம் சரிந்து கிடக்கும் நிலையிலும், குஜராத் மாநிலத்தை வளர்ச்சிப் பாதையில் தள்ளிச் செல்லும் வித்தையை மோடி நிகழ்த்திக் காட்டியிருக்கிறார்; அம்மாநிலத்தில் ஊழலற்ற நல்ல நிர்வாகத்தை அவர் நடத்தி வருகிறார். இப்படிபட்ட திறமையை மூலதனமாகக் கொண்ட தலைவர் ஒருவர்தான் பிரச்சினைகள் நிறைந்த இன்றைய இந்தியாவை நிர்வகிக்க முடியும்'' எனக் கூறி மோடியை முன்னிறுத்துகிறது, இக்கும்பல். சொல்லிக்கொள்ளப்படும் இந்த வளர்ச்சி குஜராத் மாநிலத்தில் நுழைந்துள்ள மூலதனத்தின் அளவையும், கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள சலுகைகளையும் அடிப்படையாக வைத்துதான் கணக்கிடப்படுகிறதேயொழிய, அம்மாநில மக்களின் வாழ்க்கைத்தரத்தை வைத்து மதிப்பிடப்படவில்லை.

அம்மாநிலத்தின் சௌராஷ்ட்ரா மற்றும் கட்ச் பகுதிகளில் இன்றும்கூடப் பொதுமக்கள் பல கிலோ மீட்டர் நடந்துசென்றுதான் குடிதண்ணீரை எடுத்துவருகிறார்கள். மோடியின் ஆட்சியில் சாதிக்கப்பட்டதாகக் கூறப்படும் விவசாய வளர்ச்சி, சாதாரண விவசாயிகளின் வருமானத்தைப் பதம் பார்த்துவிட்டது. பாது

குஜராத் 'வளர்ச்சி'யின் கோரம்: விவசாயம் பொய்த்துப் போனதால், வங்கிக்கடனைக் கட்ட முடியாத அவமானத்தால் தற்கொலை செய்து கொண்ட ஜாம்நகர் மாவட்டம் - கிச்டாட் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி அனிருத் சிங் ஜடேஜாவின் குடும்பம் (இடது) மற்றும் விரம்டாட் கிராம விவசாயி தேவயார் ஹதாபாய் அஹிரின் குடும்பம். (கோப்புப் படம்)



காப்பற்ற தினக்கூலி வேலைவாய்ப்புகள் பெருகிய அளவிற்கு, நிரந்தர வேலைவாய்ப்புகள் அம்மாநிலத்தில் உருவாக்கப்படவில்லை. பொது சுகாதாரம், குழந்தை இறப்பு விகிதம், ஆண்-பெண் பாலின விகிதம், ஊட்டச்சத்து குறைபாடு உள்ளிட்ட மனிதவள மேம்பாடு தொடர்புடைய இனங்களில் மோடியின் குஜராத் மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதை மோடியால்கூட மறுக்க முடியவில்லை.

மேற்கு வங்கம்-சிங்கூர் பகுதியைச் சேர்ந்த விவசாயிகளால் அடித்துத் துரத்தப்பட்ட டாடாவை வரவேற்று, தனது மாநிலத்தில் நானோ கார் தொழிற்சாலையை அமைக்க விவசாய நிலங்களை அபகரித்துக் கொடுத்தவர் மோடி. சலவைத் தூள் தயாரிக்கும் நிர்மா நிறுவனம் மாஹூ௰ பகுதியில் அமைத்துள்ள சிறப்புப் பொருளாதார மண்டலம் 15,000 வெங்காய விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பறித்துவிட்டு, வெறும் 416 பேருக்கு தினக்கூலி வேலைவாய்ப்பைத்தான் உருவாக்கிக் கொடுத்தது. அதானி குழுமம் முந்த்ரா பகுதியில் 10,000 ஹெக்டேர் பரப்பளவில் அமைத்துள்ள சிறப்புப் பொருளாதார மண்டலம் 56 மீனவ கிராமங்களையும் 126 குடியிருப்புப் பகுதிகளையும் அடியோடு அழித்தது. மாருதி நிர்வாகத்தின் கொடூர அடக்குமுறைகளுக்கு எதிராக குர்கான் தொழிலாளர்கள் வீரமிக்க போராட்டத்தை நடத்தியதைத் தொடர்ந்து, மாருதி தனது புதிய கார் தொழிற்சாலையை அமைக்கத் தேர்ந்தெடுத்த இடம் மோடியின் குஜராத்.

மோடி குஜராத்தில் உருவாக்கியிருக்கும் வளர்ச்சி ரிலையன்ஸ், எல் அண்ட் டி., எஸ்ஸார், அதானி போன்ற சில கார்ப்பரேட் நிறுவனங்களுக்குச் சாதகமாகவும், தொழிலாளர்கள், விவசாயிகள், மீனவர்கள் உள்ளிட்ட அடித்தட்டு மக்களுக்கு எதிராகவும் இருப்பதை இவை போன்ற பல உதாரணங்களைக் கொண்டு எடுத்துக் காட்டலாம். தனியார்மயம்-தாராளமயத்தின் கீழ் எட்டப்படும் வளர்ச்சி இதற்கு மாறாக, பொதுமக்களுக்கு நன்மைபயக்கும் விதத்தில் ஒரு போதும் இருக்கப் போவதில்லை; இருக்கவும் முடியாது. எனவே, ஆர்.எஸ்.எஸ். அம்பிகளும், முதலாளித்துவப் பத்திரிகைகளும், கார்ப்பரேட் முதலாளிகளும் வியந்தோதும் குஜராத்தின் வளர்ச்சி என்பது அடிப்படையிலேயே மக்கள் நலனுக்கு எதிரானது.

குஜராத்தின் கட்ச் வளைகுடாவை ஒட்டி அமைந்துள்ள முந்த்ரா பகுதியில் 7,500 கோடி ரூபாய் மதிப்புமிக்க 5 கோடி சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட நிலத்தை, மோடி தனக்கு மிகவும் நெருக்கமான அதானி குழுமத்திற்கு வெறும் 160 கோடி ரூபாய்க்கு வாரிக் கொடுத்திருக்கிறார். தொழில் தொடங்கப் போவதாகக் கூறி இந்த நிலத்தைப் பெற்ற அதானி குழுமம், அந்த நிலத்தின் பெரும்பகுதியை பிளாட்டு போட்டு விற்றதன் மூலம் பல ஆயிரம் கோடி ரூபாயை இலாபமாகச் சுருட்டிக் கொண்டது.

மோடியின் ஆட்சியில் இது போன்று பல நிலபேர மோசடிகள் நடந்திருப்பதையும்; எஸ்ஸார், எல் அண்ட் டி., ஃபோர்டு இந்தியா, ரிலையன்ஸ் உள்ளிட்டுப் பல கார்ப்பரேட் நிறுவனங்கள் இந்த நிலக் கொள்ளையின் மூலம் கொழுத்த இலாபமடைந்திருப்பதையும் இந்தியத் தணிக்கைத் துறை அறிக்கையாகவே அளித்திருக்கிறது. இந்த நிலக்கொள்ளை ஒருபுறமிருக்க, மோடி அரசு ரிலையன்ஸ், எஸ்ஸார், அதானி, ஏ.பி.எல்.,

## விவசாயிகளை நசுக்கும் கருப்புச் சட்டம்:

# மோடி அரசின் வக்கிரம்!

விவசாயிகள் தமது நிலத்தில் 45 மீட்டர் ஆழத்திற்கு மேல் கிணறு தோண்டினாலோ, குழாய் இறக்கினாலோ அரசின் அனுமதி பெற வேண்டும்; விவசாயிகள் பாசனத்துக்குப் பயன்படுத்தும் தண்ணீரை எப்படி எடுத்தோம் என அரசுக்குக் கணக்கு காட்ட வேண்டும். தவறினால், 10,000 ரூபாய் அபராதமும் ஆறு மாதச் சிறைத் தண்டனையும் அளிக்க வகை செய்யும் கருப்புச் சட்டமொன்றை நிறைவேற்றியிருக்கிறது, மோடி அரசு.

நிலத்தடி நீரைப் பாதுகாப்பது என்ற பெயரில் நிலத்தடி நீர்வளம் அனைத்தையும் தன் கட்டுப்பாட்டில் எடுத்துக்கொண்டு, அதனை முதலாளிகளுக்கு அள்ளிக் கொடுப்பதற்காகவே ஒரு ஆணையத்தை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது, மன்மோகன் சிங் அரசு. அவர் எள் என்றவுடன் எண்ணெயாகிச் சட்டத்தைக் கொண்டுவந்துவிட்டார், மோடி.

வறட்சிமிக்க மாநிலமான குஜராத்தில் நிலத்தடி நீரைப் பாதுகாக்க வேண்டுமென்றால், நிலத்தடி நீரைப் புட்டிகளில் அடைத்து விற்கும் பன்னாட்டு மற்றும் உள்நாட்டு கம்பெனிகள், கோல்ப் மைதானங்கள், தண்ணீர் விளையாட்டு கேளிக்கை பூங்காக்களை நடத்தும் முதலாளிகள் மீது பாயும்படிதான் சட்டம் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், மோடியோ பொதுமக்களின் தண்ணீர்த் தேவையில் கைவைக்கிறார். அதனால்தான் மோடியைப் பிரதமராக்கிவிடத் தரகு முதலாளிகள் துடிக்கிறார்கள்.

நிர்மா நிறுவனத்தின் சிமெண்ட் ஆலை மற்றும் சுரங்கத்திற்காகத் தமது நிலங்களை வலுக்கட்டாயமாக அபகரித்துக் கொண்ட மோடி அரசை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தும் மாஹூ௰ பகுதி விவசாயிகள். (கோப்புப் படம்)





ஒரு குடம் தண்ணீருக்காகக் காத்திருக்கும் பாடன் கிராம மக்கள்.

டொரண்ட் பவர் ஜெனரேஷன் ஆகிய கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு வழங்கிய சட்டவிரோத சலுகைகளால் அரசிற்கு 580 கோடி ரூபாய் நட்டமேற்பட்டிருப்பதாகவும்; 2009-10 மற்றும் 2010-11 ஆகிய இரு நிதி ஆண்டுகளில் மட்டும் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு காட்டப்பட்டுள்ள சட்டவிரோத சலுகைகளால் மாநில அரசிற்கு 17,000 கோடி ரூபாய் அளவிற்கு இழப்பு ஏற்பட்டிருப்பதாகவும் தணிக்கைத் துறை தனது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது.

மன்மோகன்சிங் அரசும் மோடி அரசும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் என்பதைத்தான் குஜராத்தில் நடந்துள்ள இந்த கார்ப்பரேட் பகற்கொள்ளைகள் எடுத்துக் காட்டுகின்றன. இதில் மோடி தனிப்பட்ட விதத்தில் எந்த விதமான ஆதாயமும் அடையவில்லையே என வாதாடுவது அபத்தமானது மட்டுமல்ல, அயோக்கியத்தனமானதும்கூட.

●●●

மன்மோகன் சிங்கிற்கும் மோடிக்கும் இடையே பொருளாதார வளர்ச்சி குறித்த கருத்திலும் நடைமுறையிலும் எந்தவிதமான வேறுபாடும் கிடையாது என்றாலும், ஊழலற்ற நல்ல நிர்வாகத்தைத்தர வேண்டும் என்ற நோக்கில்தான் தரகு முதலாளிகள் மற்றும் பத்திரிகைகள்/செய்தி சேனல்களின் ஒரு பிரிவு நரேந்திர மோடியை ஆதரிப்பதாகக் கூறுவது அபத்தமானது. ஏனென்றால், மன்மோகன்சிங் ஆட்சியில் நடந்துள்ள ஊழல்கள் அனைத்திலும் பங்குதாரர்களாக இருந்து, மிகப்பெரும் இலாபத்தைச் சுருட்டிக் கொண்டவர்கள் இந்த கார்ப்பரேட் கும்பல்கள்தான். எனவே, அவர்களின் பிரச்சினை ஊழலல்ல.

தனியார்மய-தாராளமயப் பொருளாதாரக் கொள்கைகளின் மக்கள் விரோதப் போக்கும் அதன் மோசடிகளும் ஆளுங்கட்சிகளை வெகுவிரைவிலேயே மக்களின் வெறுப்புக்கும் கோபத்திற்கும் ஆளாக்கிவிடுவதால், ஆளும் வர்க்கங்களுக்கும் அவர்களின் அறிவுசார்ந்த பிரதிநிதிகளுக்கும் வேறொரு கட்சியை, அதன் தலைவனை ஆளுங்கட்சிக்கு மாற்றாக, கவர்ச்சிகரமான முறையில் மக்கள் முன் நிறுத்த வேண்டிய தேவை ஏற்படுகிறது. இப்படி அடுத்த மாற்றாக முன்னிறுத்தப்படும் ஓட்டுக்கட்சித்தலைவர் ஆளும் வர்க்கங்களுக்குச் சாதகமாக நடந்து கொள்வதோடு, அதனின் சித்தாந்தத்தை வரித்துக் கொண்டவராகவும் இருப்பது பழம் நழுவிப் பாலில் விழுவதைப் போன்றது.

அந்த வகையில் நரேந்திர மோடி இந்திய ஆளும் கும்பலுக்கு லாட்டரி பரிசு போலக் கிடைத்திருக்கிறார். நரேந்திர மோடி பார்ப்பன-பாசிச சித்தாந்தமான ஆர்.எஸ்.எஸ். கொள்கைகளால் வார்க்கப்பட்டவர் என்பது ஒருபுறமிருக்க, அவர் காலாவதியாகிப் போன அரசு முதலாளித்துவக் கொள்கைகளை அடியோடு வெறுப்பவர். அரசும், தனியாரும் இணைந்து செயல்படுவதன் மூலம்தான், அதாவது அரசின் கட்டுப்பாட்டிலுள்ள நிலம், ரோடு, துறைமுகம், தண்ணீர், கனிமவளங்கள் போன்ற பொதுச் சொத்துக்களைத் தரகு முதலாளிகளுக்கு பட்டாபோட்டுக்கொடுப்பதன் மூலம்தான் வளர்ச்சியைச் சாதிக்க முடியும்; இத்தகைய வளர்ச்சியின் மூலம்தான் வறுமையை, ஏழ்மையை ஒழிக்க முடியுமே தவிர, சமூக நலத் திட்டங்களின் மூலம் ஒழிக்க முடியாது என்ற புதிய பொருளாதாரக் கொள்கையை ஏற்றுக் கொண்டுள்ள மோடி, அதனைத் தனது மாநிலத்தில் கடந்த பத்தாண்டுகளாக மிகத் தீவிரமாக நடைமுறைப்படுத்தி வருகிறார்.

பிரதமர் பதவிக்கான தகுதி வாய்ந்த நபர் குறித்து தான் நடத்திய கருத்துக் கணிப்பில் மோடி முதலிடத்தில் இருப்பதைக் குதூகலத்தோடு அறிவிக்கும் இந்தியா டுடே இதழின் முகப்பு அட்டை.




அரசுப் பதவிகளில் உட்கார்ந்துள்ள மற்ற தலைவர்கள் பல்வேறு கவர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துவதைக் கைவிடாத பொழுது, மோடி அவற்றை வாக்கு

வங்கி அரசியல் என வெளிப்படையாகச் சாடி வருகிறார். குஜராத் மாநிலத்தில் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படுவது கிடையாது; குப்பை அள்ளுவதுகூட அங்கு இலவசமாக நடைபெறவில்லை என்பதெல்லாம் தனியார்மயத்தின்பால் அவருக்குள்ள வெறித்தனமான மோகத்தைத்தான் எடுத்துக்காட்டுகின்றன.

ஓட்டுப்போட்டுத்தம்மைத் தேர்ந்தெடுத்த மக்களுக்கு அரசாங்கம் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கு மாறாக, முதலீட்டாளர்களுக்குத் தேவையான சலுகைகளையும் வசதிகளையும் செய்துகொடுப்பதுதான் அரசின் வேலை; இதற்கேற்ப அரசு நிர்வாகம் செம்மைப்படுத்த வேண்டும் என அறிவிக்கிறார், மோடி. அதாவது, மூலதனம் கூலித் தொழிலாளர்களையும், இயற்கை வளங்களையும் பொதுச் சொத்துக்களையும் சூறையாடுவதற்கு அரசு எந்த விதத்திலும் தடையாக இருக்கக்கூடாது என்பதுதான் இதன் பொருள். மேற்கு வங்கத்திலிருந்து துரத்தப்பட்ட டாடாவிற்கு இரண்டே நாளில் நானோ கார் தொழிற்சாலையை அமைக்க அனுமதி கொடுத்ததை இந்தப் பின்னணியிலிருந்துதான் பார்க்க வேண்டும். கார்ப்பரேட் முதலாளிகளும் படித்த நடுத்தர வர்க்கமும் அரசு நிர்வாகம் ஒரு கார்ப்பரேட் கம்பெனியைப் போல நடத்தப்பட வேண்டும் என்று கூறிவருவது இதைத்தான்.

இப்படிபட்ட சிந்தனைப்போக்கும் நடைமுறையும் கொண்ட மோடியை இந்தியாவின் பிரதமர் பதவியில் உட்கார வைத்தால், அரசியல் காரணங்களுக்காக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பொருளாதாரச் சீர்திருத்த திட்டங்களை உடனடியாகவே நடைமுறைப்படுத்திவிடுவார். தனது கட்சிக்குள் இருந்த தனது எதிர்ப்பாளர்களை வீழ்த்தியதைப் போல, சீர்திருத்தங்களைச் சுயநலம் காரணமாக எதிர்க்கும் கூட்டணிக் கட்சிகளை மட்டுமல்ல, பழங்குடி இன மக்களின், மாவோயிஸ்டுகளின் எதிர்ப்புகளையும் ஒடுக்கி வனங்களை, அவற்றுக்கு அடியிலுள்ள இயற்கை வளங்களைத் தமது கரங்களுக்கு மாற்றி பட்டா போட்டுக் கொடுத்துவிடுவார் எனக் கருதுகிறது, கார்ப்பரேட் முதலாளி வர்க்கம்.

இந்திய போலி ஜனநாயகத்தின் மீது இன்னும் நம்பிக்கை கொண்டுள்ள பலரும் இந்து மதவெறி பாசிஸ்டான நரேந்திர மோடியைப் பிரதமராக்கினால், குஜராத் போல நாடு முழுவதும் மதரீதியான பிளவுகள் ஏற்பட்டுவிடும் என எச்சரிப்பதையெல்லாம் கார்ப்பரேட் கும்பல் ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளவில்லை. ஏனென்றால், மறுகாலனியாக்கச் சூழலில் மக்களிடையே வர்க்க ஒற்றுமை ஏற்பட்டுவிடாதபடி, மதரீதியான பிளவுகள் உருவாவது அவர்களுக்குச் சாதகமானதுதானே!

மறுகாலனியாக்க கொள்கைகளின் அமலாக்கம் தோற்றுவித்துவரும் விலைவாசி உயர்வு, வேலையிழப்புகள், சிறு தொழில்களின் அழிவு போன்றவற்றால் கொந்தளிப்புமிக்க ஒரு சூழலை நாடு எதிர்கொள்ளவிருக்கிறது. போராட்டங்களுக்கும் எதிர்ப்புகளுக்குமிடையிலும் தனியார்மய, தாராளமயக் கொள்கைகளின் அமலாக்கத்தை உத்திரவாதப்படுத்தக் கூடிய உறுதி நரேந்திர மோடி எனும் பாசிஸ்டுக்கே உள்ளது என்று இந்திய ஆளும் வர்க்கம் நம்புகிறது.

இப்படித்தான் நல்லவரு, வல்லவரு என்று போற்றித் துதிபாடி மன்மோகன் சிங் என்ற கல்லுளிமங்கனைப் பதவியில் அமர்த்தியது ஆளும் வர்க்கம். கல்லுளி மங்கனுக்கு அடுத்தபடியாக ஒரு காவிக்கிரிமினல்.

• செல்வம்

## நரேந்திர மோடி – கெட்டிக்கார புளுகன்!

‘‘குஜராத் மாநில பெட்ரோலியம் கார்ப்பரேஷன் ஆந்திரா மாநிலக் கடற்கரைப் பகுதியையொட்டிஅமைந்துள்ள கிருஷ்ணா-கோதாவரிப் படுகையில் 20 இலட்சம் கோடி கன அடி இருப்பு கொண்ட இயற்கை எரிவாயுவைக் கண்டுபிடித்திருக்கிறது; இதன் மதிப்பு 5,000 கோடி அமெரிக்க டாலர்கள் (இன்றைய மதிப்பின் படி 2,50,000 கோடி ரூபாய்) ஆகும்’’ என கடந்த 2005 ஜூனில் பத்திரிகையாளர்களையெல்லாம் அழைத்து டாம்பீகமாக அறிவித்தார், மோடி. இதனையடுத்து குஜராத் மாநில பெட்ரோலியம் கார்ப்பரேஷனை, தேசங்கடந்த தொழிற்கழகத்தினைப் போன்று மாற்றும் மோடிவித்தை தொடங்கப்பட்டது.

கிருஷ்ணா-கோதாவரி கண்டுபிடிப்பை ஆய்வு செய்து வந்த மைய அரசின் ஹைட்ரோகார்பன் இயக்குநரகம், ‘‘குஜராத் அரசு சொல்வது போல அந்த வயலில் 20 இலட்சம் கோடி கன அடி இருப்பு கொண்ட இயற்கை எரிவாயு காணப்படவில்லை. அங்கு இருப்பது வெறும் 2 இலட்சம் கோடி கன அடி இயற்கை எரிவாயுதான்’’ என்றஉண்மையை கடந்த 2012-ஆம் ஆண்டு போட்டு உடைத்தது.

மோடியின் இந்த அண்டப்புளுகைவிடக் கவனம் கொள்ளத்தக்கது அந்த நிறுவனத்தில் நடந்துள்ள ஊழல்கள்தான். மோடி அரசு அக்கார்ப்பரேஷன் குத்தகைக்கு எடுத்துள்ள எண்ணெய் வயல்களின் பங்குகளை பார்படோஸ் நாட்டில் ஒரு அனாமதேய முகவரியில் இயங்கிவரும் ஜியோ குளோபல் என்ற லெட்டர் பேட் நிறுவனத்திற்கு மிகவும் மலிவான விலையில் விற்றிருக்கிறது. இந்த விற்பனையால் அந்நிறுவனத்தின் சொத்து மதிப்பு வெறும் 64 டாலரிலிருந்து (ரூ.3,200/-) 10,000 கோடி ரூபாயாக அதிகரித்துவிட்டதென அம்பலப்படுத்தி இருக்கிறார், அர்விந்த் கெஜ்ரிவால். அலைக்கற்றை ஊழலோடுகூட ஒப்பிட்டுப் பேச முடியாத பிரம்மாண்ட ஊழல் இது.

மோடியை வளர்ச்சியின் நாயகனாக அரிதாரம் பூசிக் காட்டுவதற்காகவே ‘‘துடிப்புமிக்க குஜராத்’’ என்ற பெயரில் முதலீட்டாளர்கள் பங்குபெறும் கருத்தரங்குகளை குஜராத் அரசு நடத்திவருகிறது. 2003-2011 காலக்கட்டத்தில் நடத்தப்பட்ட ஐந்து கருத்தரங்குகளின் மூலம் 87,600 கோடி அமெரிக்க டாலர்கள் பெறுமான அந்நிய நேரடி முதலீட்டை குஜராத் ஈர்த்திருப்பதாகத் தம்பட்டம் அடித்துவருகிறது, மோடி அரசு. ஆனால், இந்திய ரிசர்வ் வங்கி 2000-2011 காலக்கட்டத்தில் குஜராத் மாநிலத்தில் நுழைந்துள்ளமொத்த அந்நிய நேரடி முதலீடு வெறும் 720 கோடி அமெரிக்க டாலர்கள்தான்என்றும், அந்நிய நேரடி முதலீட்டை ஈர்ப்பதில் குஜராத் அரசு கர்நாடகா, தமிழ்நாடு ஆகிய மாநிலங்களைவிடப் பின் தங்கி இருப்பதாகவும் அறிக்கை அளித்திருக்கிறது.

கோயபல்ஸ் பாணியில் நாக்கூசாமல் பொய்களை விற்பதுதான் மோடியின் நிர்வாகத்திறமை போலும்!

## வங்கதேசம்:

# உலகமயம் நிகழ்த்திய படுகொலை!

**ஏழை நாட்டுத் தொழிலாளர்களின் உழைப்பு மட்டுமல்ல, அவர்களின் உயிரும் ஏகாதிபத்தியங்களுக்கு மலிவானதாகிவிட்டது.**

**க**டந்த ஏப்ரல் மாதம் 24-ஆம் தேதி, வங்கதேச தொழிலாளி வர்க்கம் ஒரு மிகக் கொடிய பயங்கரவாதத் தாக்குதலை - முதலாளித்துவ பயங்கரவாத தாக்குதலை எதிர் கொண்டது. அன்றுதான், டாக்கா நகரில் 8 மாடிக்கட்டிடம் ஒன்று இடிந்து விழுந்ததில் ஆயிரத்துக்கும் அதிகமான இளம் தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர்; 300-க்கும் அதிகமானவர்கள் கை-கால்களை இழந்தனர்.



ஏழை நாட்டுத் தொழிலாளர்களைப் பலிகொள்ளும் அமெரிக்க டாலரின் கொடூரம்: கட்டிட இடிபாடுகளில் சிக்கி மாண்டு போன இளம் தொழிலாளர்கள்.

வங்கதேசத் தலைநகர் டாக்காவின் புறநகர்ப் பகுதியில், வணிக நிறுவனங்களுக்கு வாடகைக்குவிடும் ''ஷாப்பிங் மாலு''க்காகக் கட்டப்பட்ட 'ராணா பிளாசா' என்ற கட்டிடம், ஆயத்த ஆடை உற்பத்தித் தொழிலகமாக மாற்றப்பட்டுச் செயல்பட்டு வந்தது. 5000-த்திற்கும் அதிகமான தொழிலாளர்கள், அந்தக் கட்டிடத்தில் வேலை செய்து வந்தனர். நெகிழ்வான நிலத்தில் கட்டப்பட்ட அந்தக் கட்டிடம், ஒவ்வொரு தளத்திலும் மிகப்பெரும் ஜெனரேட்டர்கள் பொருத்தப்பட்டு, எப்போது வேண்டுமானாலும் இடிந்துவிழும் நிலையில் இயங்கிவந்தது.

ஏப்ரல் 23-ஆம் தேதியன்று அந்தக் கட்டிடத்தின் மூன்றாவது தளம் பிளந்து தொங்கிவிட, போலீசார் கட்டிடத்திற்கு சீல் வைத்தனர். ஆனால், மறுநாளே அதே கட்டிடத்தில் வேலை செய்யும்படி தொழிலாளர்கள் நிர்பந்திக்கப்பட்டனர். மறுத்தால், அந்த மாதம் முழுவதும் வேலை செய்ததற்கான சம்பளம் கிடைக்காது என நிர்வாகம் மிரட்டியதால், வேறு வழியின்றித் தொழிலாளர்கள் வேலைக்கு வந்தனர். காலை நேரத்தில் மின் தடை ஏற்பட, ஜெனரேட்டரை பயன்படுத்தியுள்ளனர். அதன் அதிர்ச்சியைத் தொடர்ந்து ஒரு சில நிமிடங்களில் மொத்தக் கட்டிடமுமே இடிந்து விழுந்துள்ளது.

ஆயிரத்துக்கும் மேற்பட்டோரைப் பலிகொண்ட முதலாளித்துவப் பயங்கரவாதத்தின் கோரம்: சீட்டுக்கட்டு சரிந்ததைப் போலக் கற்குவியலாக நொறுங்கிப் போன 8 மாடிக் கட்டிடம்.



இடிபாடுகளில் சிக்கிக்கொண்ட தொழிலாளர்களின் கூக்குரல் கேட்டு, அக்கம் பக்கத்துக் கட்டிடங்களில் வேலை செய்த தொழிலாளர்கள் ஓடி வந்த போது, அவர்களை வெளியே செல்லவிடாமல் அந்தந்த நிறுவனங்கள் தடுத்து நிறுத்தின. அதை

யும் மீறித்தான் தொழிலாளர்கள் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். பின்னர் சாவகாசமாக இராணுவம் வரவழைக்கப்பட்டு மீட்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டது. அதற்குள் இடிபாடுகளில் சிக்கிய தொழிலாளர்களில் பெரும்பாலானோர் இறந்துவிட, அவர்களது பிணங்களைத் தோண்டியெடுக்க இராணுவம் 20 நாட்களுக்கும் மேல் எடுத்துக் கொண்டது.

ஆயத்த ஆடை ஏற்றுமதியில் முன்னணியில் இருக்கும் வங்கதேசம், அந்தத் தொழிற்கூடங்களில் ஏற்படும் விபத்துக்களின் எண்ணிக்கையிலும் முன்னணியில் இருக்கிறது. தற்போதைய இந்த விபத்து ஏற்படுவதற்குச் சில மாதங்கள் முன்புதான் ‘தஸ்ரீன்’ என்ற நிறுவனத்தில் ஏற்பட்ட தீவிபத்தில் 317 தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர். அதற்கு முன்னரும் பலமுறை தீவிபத்துகள் நடந்துள்ளன. அவற்றில் இதுவரை ஆயிரக்கணக்கில் தொழிலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஒவ்வொரு முறை விபத்து ஏற்படும்போதும் வங்கதேச அரசு சில நிறுவனங்களை மூடி சீல் வைக்கும் சடங்கை நடத்தும். தற்போதுகூட அந்நாட்டு அரசு ஒன்பது நிறுவனங்களை மூடி சீல் வைத்துள்ளது.

அங்கே தொடர்ந்து நடைபெற்றுவரும் விபத்துகளுக்கு, உலக ஆயத்த ஆடை தொழிலைக் கட்டுப்படுத்தும் வால்மார்ட், டெஸ்கோ போன்ற பன்னாட்டு நிறுவனங்களின் இலாப வெறிதான் காரணமாக இருக்கிறது. இந்த ஏகபோக நிறுவனங்களின் இலாப இலக்கு ஆண்டுக்காண்டு அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. அவர்களது லாப இலக்கை அடைய அவர்கள் மேற்கொள்ளும் ஒரே வழிமுறை, உற்பத்திச் செலவுகளைக் குறைக்கும்படி அவர்களுக்குத் துணிகளை ஏற்றுமதி செய்யும் ஏழைநாட்டு முதலாளிகளை நிர்பந்திப்பதுதான்.

இதன் காரணமாக வங்கதேசத்து முதலாளிகள் தொழிலாளர்களது கூலியைக் குறைப்பது, வேலை நேரத்தை அதிகரிப்பது, அடிப்படை வசதிகளைக்கூடச் செய்து தர மறுப்பது, தொழிலாளர்களது பாதுகாப்புக்கான நிதியைக் குறைப்பது போன்றவற்றின் மூலம் உற்பத்திச் செலவுகளைக் குறைத்து தங்களது ஒப்பந்தங்களை நிலைநிறுத்திக் கொள்கின்றனர். அது மட்டுமன்றி, ஆண் தொழிலாளர்களை விட பெண் தொழிலாளர்களுக்குக் கூலி குறைவு என்பதால், ஆயத்த ஆடை உற்பத்தி முழுவதிலும் பெண்களையே அதிகமாக ஈடுபடுத்தி வருகின்றனர்.

இத்தனையையும் செய்து ஓராண்டுக்கு துணிகளை ஏற்றுமதி செய்தாலும், அடுத்த ஆண்டுக்கான ஒப்பந்தங்களை இந்த முதலாளிகள் எளிதில் பெற்றுவிட முடியாது. ஒவ்வொரு ஆண்டும் அதற்கு முந்தைய ஆண்டின் இலாப விகிதத்தைவிடப் பலமடங்கு அதிக இலாப விகிதத்தை எதிர்பார்க்கும் பன்னாட்டு நிறுவனங்கள், உற்பத்திச் செலவுகளை மேலும் மேலும் குறைக்கக் கோருகின்றன. இதற்குமேல் உற்பத்திச் செலவுகளைக் குறைக்க முடியாது எனும் நிலை வரும்போது, வங்கதேசத்தைவிடக் கீழான வாழ்க்கை நிலைமைகளைக் கொண்ட ஏழை நாடுகளைத் தேடிச் சென்று விடுகின்றனர்.

தற்போது இடிந்து விழுந்த கட்டிடத்தில் ஐந்து ஆயத்த ஆடை தயாரிப்பு நிறுவனங்கள் இயங்கி வந்தன. அவற்றில் உற்பத்தியான ஆடைகள் டெஸ்கோ, வால்மார்ட் உள்ளிட்ட பிரபல பன்னாட்டு நிறுவனங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. எனவே இந்த விபத்தில் பலியானவர்களுக்கும் காயமடைந்தவர்களுக்கும் இப்பன்னாட்டு ஏகபோக நிறுவனங்கள்தான் இழப்பீடு தர வேண்டும் என வங்கதேசத்து தொழிற்சங்கங்கள் கோருகின்றன. ஆனால், ஆடை தயாரித்துத் தரும் வங்கதேச நிறுவனங்கள் வேறு, தாங்கள் வேறு என்று சட்டவாதம் பேசி, கிஞ்சித்தும் மனிதாபிமானமின்றி நடந்து கொள்ளும் இப்பன்னாட்டு நிறுவனங்கள், இழப்பீடு தர மறுத்து வருகின்றன.

பன்னாட்டு நிறுவனங்களின் இந்தப் பகற்கொள்ளைக்கு ஏழை நாடுகளின் அரசுகளும் துணை போகின்றன. ஒட்டுண்ணியைப் போல நாட்டின் இயற்கை வளத்தையும், தொழிலாளர்களின் இரத்தத்தையும் உறிஞ்சிக் கொழுக்கும் இத்தகைய பன்னாட்டு நிறுவனங்களை அடித்து விரட்டுவதன் மூலம்தான் அவற்றின் கோரப்பிடியிலிருந்து ஏழை நாடுகளின் தொழிலாளி வர்க்கம் தப்பிக்க முடியும்; இது போன்ற விபத்துக்களையும் உயிரிழப்புகளையும் தடுக்கவும் முடியும்.

• அன்பு

விரிசல் விழுந்த கட்டிடங்களில் பாதுகாப்பு ஏதுமின்றிப் பணிபுரிய நிர்ப்பந்திக்கும் முதலாளித்துவப் பயங்கரவாதத்தை எதிர்த்து டாக்கா அருகே அஷுலியாவில் ஆயத்த ஆடைத் தொழிலாளர்கள் திரண்டு நடத்தும் சாலைமறியல் -ஆர்ப்பாட்டம்.



## மணிப்பூர்:

# 64 ஆண்டுகளாகத் தொடரும் ஆக்கிரமிப்பு

**மணிப்பூரை ஆக்கிரமித்திருக்கிறது இந்திய இராணுவம். அங்கே கடந்த ஐந்தாண்டுகளில் 1,500 பேர் இந்திய இராணுவத்தால் போலி மோதலில் கொல்லப்பட்டிருக்கின்றனர்.**

மணிப்பூரில் இந்திய இராணுவம் நடத்திவரும் போலி மோதல் கொலைகளை, சமீபத்தில் உச்ச நீதி மன்றத்தில் விசாரணைக்கு வந்துள்ள ஒரு பொதுநல வழக்கு அம்பலத்துக்கு கொண்டு வந்துள்ளது. நீதிக்குப் புறம்பாகக் கொல்லப்பட்டவர்களது குடும்பத்தினர் சங்கம் என்ற மணிப்பூரைச் சேர்ந்த அமைப்பு தாக்கல் செய்துள்ள இம்மனு, 2007 முதல் 2012 வரையிலான 5 ஆண்டுகளில் சுமார் 1500 பேருக்கும் மேற்பட்டவர்கள் போலி மோதலில் இராணுவத்தால் கொல்லப்பட்டிருக்கின்றனர் என்றும், இது குறித்து ஒரு சுயேச்சையான விசாரணைக்கு உத்தரவிட வேண்டுமென்றும், ஆயுதப் படைகள் சிறப்பு அதிகாரச் சட்டத்தை மணிப்பூரிலிருந்து விலக்கிக் கொள்ள வேண்டும் என்றும் கோரியிருக்கிறது.

இந்த வழக்கில் தனது தரப்பை அறிக்கையாகத் தாக்கல் செய்துள்ள தேசிய மனித உரிமைகள் ஆணையம், மேற்குறிப்பிட்ட 5 ஆண்டுகளில் மணிப்பூரிலிருந்து மொத்தம் 1671 போலி மோதல் கொலைப் புகார்கள் தங்களிடம் வந்துள்ளதாகவும், அவற்றில் 191 புகார்களை விசாரித்ததில், அனைத்தும் போலி மோதல் கொலைகளே என்று தெரியவந்ததால், கொல்லப்பட்டவர்களின் குடும்பத்தினருக்கு 10.5 கோடி ரூபாய் இழப்பீடு வழங்க உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. மீதமுள்ள வழக்குகளை விசாரிக்கவிடாமல் தடுக்க அம்மாநில அரசு, பல்வேறு முட்டுக்கட்டைகளைப் போட்டுவருவதாகவும் தேசிய மனித உரிமை ஆணையம் தனது அறிக்கையில் குற்றம் சாட்டியுள்ளது.

இப்பிரச்சினை குறித்து உச்ச நீதிமன்றமும் ஒரு விசாரணைக் குழுவை நியமித்தது. முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி சந்தோஷ் ஹெக்டே தலைமையிலான அந்தக் குழு, தன்னிடம் விசாரணைக்கு வந்த 7 கொலைகளும் போலி மோதல் கொலைகளே என்று கூறியிருப்பதுடன், ஆயுதப் படைகள் சிறப்பு அதிகாரச் சட்டத்தை திரும்பப் பெறவேண்டும் என்றும் கருத்து தெரிவித்திருக்கிறது.

இத்தகையதொரு கொடூரமான இராணுவ ஒடுக்குமுறையை மணிப்பூரில் கட்டவிழ்த்து விட்டிருக்கிறது இந்திய அரசு. ஆயுதப்படைகள் சிறப்பு அதிகாரச் சட்டத்தை ரத்து செய்ய வேண்டுமென்று நவம்பர் 2000 முதல் உண்ணாநிலைப் போராட்டம் நடத்தி வரும் ஐரோம் சர்மிளா மீது தற்கொலை முயற்சி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதேயன்றி, அச்சட்டம் விலக்கிக் கொள்ளப்படவில்லை. ஜூலை 2004- இல் தங்ஜம் மனோரமா என்ற பெண்ணை அசாம் ரைபிள்ஸ் படையினர் வல்லுறவு செய்து கொன்றதை எதிர்த்து, ''இந்திய இராணுவமே எங்களையும் வல்லுறவு செய்'' என்று இம்பாலில் உள்ள அசாம் ரைபிள்ஸ் தலைமையகத்தின் முன் நிர்வாணமாக நின்று போராடினார்கள் மணிப்பூர் தாய்மார்கள். அவர்கள் தேசியப் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் சிறைவைக்கப் பட்டனர்.

மக்கள் போராட்டம் காரணமாக அசாம் ரைபிள்ஸ் குற்றவாளிகள் மீது மாநில போலீசு வழக்கு பதிவு செய்த போதிலும், ஆயுதப்படைகள் சிறப்பு அதிகாரச்சட்டத்தின் படி, இராணுவத்தின் மீது வழக்கு பதிவு செய்யும் அதிகாரம் மாநில போலீசுக்கு இல்லை என்று கூறி, அவர்கள் மீது வழக்கு பதிவு செய்ய அனுமதி மறுத்து வருகின்றது மத்திய அரசு.

பிரிவினைவாத இயக்கங்களை ஒடுக்குவது என்ற பெயரில் மணிப்பூரில் படுகொலைகளையும் பாலியல் வன்முறைகளையும் அரங்கேற்றுவது மட்டுமின்றி, மணிப்பூர் இளைஞர்களைப் போதைக்கு

மணிப்பூரில் அமலில் உள்ள ஆயுதப் படைகள் சிறப்பு அதிகாரச் சட்டத்தை நீக்கக் கோரி பத்தாண்டுகளுக்கும் மேலாக உண்ணாவிரதப் போராட்டம் நடத்திவரும் ஐரோம் ஷர்மிளா (இடது); அசாம் துப்பாக்கிப் படைப் பிரிவால் பாலியல் வன்புணர்ச்சிக்கு ஆளாக்கப்பட்டுச் சுட்டுக் கொல்லப்பட்ட தங்ஜம் மனோரமா (வலது படம்) வழக்கு, இன்னும் விசாரணை நிலையைக்கூட எட்டவில்லை.



அடிமையாக்கிச் சீரழிப்பதையும் இந்திய இராணுவம் திட்டமிட்டே செய்கிறது. சுமார் 15 கோடி ரூபாய் மதிப்புள்ள போதை மருந்து களைக் கடத்த முயன்ற லெப்டினென்ட் கர்னல் அஜய் சவுத்திரி என்ற இந்திய இராணுவ கர்னல் பர்மா எல்லைக்கு அருகே சமீபத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். இருப் பினும் சிறப்பு அதிகார சட்டம், இந்த இராணுவ அதிகாரியையும் காப்பாற்றிவிடும்.

ஆயுதப்படைகள் சிறப்பு அதிகாரச் சட்டம் என்பது முதன்முதலாக 1958 - ஆம் ஆண்டில் ஒரு அவசரச் சட்டமாக மத்திய அரசால் அறி முகப்படுத்தப்பட்டது. அன்று முதல் இன்று வரை அந்தச் சட்டம் மணிப்பூரில் அமலில் இருக்கிறது. ஒரு பகுதி கலவரப்பகுதியாக தொடர்ந்து நீடிக்கிறதா, அங்கே ஆயுதப்படை கள் சிறப்பு அதிகாரச் சட்டத்தைத் தொடர்வது அவசியமா என்று ஆறு மாதங்களுக்கு ஒருமுறை ஆய்வுக்கு உட்படுத்தி, உரிய காரணங்கள் இருந்தால் மட்டுமே இதனை நீட்டிக்க வேண்டும் என்று 14 ஆண்டு களுக்கு முன்னரே மணிப்பூர் தொடர்பான ஒரு வழக் கில் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. போலி மோதல் கொலை குறித்த புகார்கள் வந்தால், அவற்றைக் கையாள வேண்டிய முறை குறித்தும் உச்ச நீதிமன்ற உத்தரவுகள் இருக்கின்றன. எனினும் இவை எதையும் அரசோ, இராணுவமோ குப்பைக் காகிதத்துக்குச் சம மாகக்கூட மதித்ததில்லை.




இராணுவமும் துணை இராணுவப் படைகளும் மணிப்பூரில் கண்மண் தெரியாமல் நடத்திவரும் போலி மோதல் கொலைகளைத் தடுத்து, விசாரணை நடத்தக் கோரி மணிப்பூரி மாணவர்களும், மக்களும் டெல்லி ஜந்தர் மந்தரில் நடத்திய முழக்க ஆர்ப்பாட்டம் (கோப்புப் படம்)

சுமார் 20 இலட்சம் மக்கள் தொகை கொண்ட மணிப் பூரில் இதுவரை சுமார் 20,000 பேருக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டிருக்கின்றனர். இராணுவத்தினால் பாதிக் கப்படாத குடும்பம் மணிப்பூரில் இல்லை. ஐம்பது பேருக்கு ஒரு சிப்பாய் வீதம் இராணுவம் அங்கே நிறுத் தப்பட்டிருக்கிறது. 1958 முதல் அங்கே இந்திய இராணு வம் நிரந்தரமாகக் குடியிருக்கிறது. காரணம் - மணிப் பூரை இந்தியா ஆக்கிரமித்திருக்கிறது என்பதுதான்.

1891-இல் மணிப்பூர் மன்னனைப் போரில் வென்று மணிப்பூரைத் தனது ஆளுகையின் கீழ் கொண்டுவந்தது பிரிட்டிஷ் அரசு. 1947 வரை பிரிட்டிஷ் இந்தியாவுடன் மணிப்பூர் இணைக்கப்படவில்லை. அனைவருக்கும் வாக்குரிமை என்ற அடிப்படையில் 1948 - இல், (இந்திய அரசியல் சாசனம் நிறைவேற்றப்படுவதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே) மணிப்பூர் என்ற நாடு தனது முதல் தேர்தலை நடத்தியது. தேர்தலுக்குப்பின் 'பிரஜா சாந்தி' என்ற கட்சியின் தலைமையில் கூட்டணி ஆட்சி அமைக்கப்பட்டது. இந்தத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி யும் போட்டியிட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் 1949 அக்டோபரில், அந்நாட்டு மக்களின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில், மணிப்பூர் இந்தியாவுடன் பலவந்தமாக இணைக்கப்பட்டது. மணிப்பூரின் ராஜா புத்தசந்திராவை பேச்சுவார்த்தை என்று சொல்லி அழைத்து, ஷில்லாங்கில் வீட்டுக் காவலில் அடைத்த இந்திய அரசு, இராணுவத்தைக் குவித்து அவரை மிரட்டி, மணிப்பூரை இந்தியாவுடன் இணைக்கும் ஒப் பந்தத்தில் கையெழுத்திட வைத்தது. மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட அரசும், மந்திரி சபையும் கலைக்கப் பட்டன. இதுதான் மணிப்பூரை இந்தியா ஆக்கிரமித்ததன் சுருக்கமான வரலாறு. இதனை எதிர்த்து மணிப்பூர் மக்கள் அமைதி வழியில்தான் போராடத் தொடங்கினார்கள். எனினும், அங்கே இந்திய இராணுவம் குவிக்கப் பட்டது. பின்னர் பல ஆயுதக் குழுக்கள் தோன்றின. அவற்றை ஒடுக்குவது என்ற பேரில் இராணுவத்தின் ஆட்சி அங்கே நிரந்தரமாக்கப்பட்டு விட்டது.

''ஆயுதப்படைகள் சிறப்பு அதிகாரச் சட்டம் வல்லுற வுக் குற்றவாளிகளைகளுக்குப் பாதுகாப்பு தரக்கூடாது'' என்று வர்மா கமிசன் கூறியது. போலி மோதல் கொலை களை விசாரிக்குமாறு ஏராளமான உச்ச நீதிமன்ற உத்தரவு கள் உள்ளன. இருப்பினும் இந்திய அரசு ஆக்கிரமிப்பு என்ற பெருங்குற்றத்தை நியாயப்படுத்துவதற்காகத்தான் ஆயுதப்(ஆக்கிரமிப்பு) படைகள் பாதுகாப்புச் சட்டத்தை இயற்றி வைத்திருக்கிறது.

மணிப்பூரை மட்டுமல்ல, சுய நிர்ணய உரிமை கோரிப் போராடிவரும் காஷ்மீர் மற்றும் வடகிழக்கிந்திய தேசிய இனங்கள் அனைத்தையும் தனது இராணுவ வலி மையைப் பயன்படுத்தித்தான் இந்திய அரசு நசுக்கி வரு கிறது. நேரு காலத்திலிருந்து தொடர்ந்து கொண் டிருக்கும் இந்த ஆக்கிரமிப்புகளையும் இன ஒடுக்கு முறைகளையும் போலி கம்யூனிஸ்டுகள், திராவிடக் கட்சிகள் உள்ளிட்ட எல்லா ஓட்டுப் பொறுக்கிகளும் ஆதரிக்கின்றனர். இந்த வெட்கங்கெட்ட ஆக்கிரமிப்பை தேசிய ஒருமைப்பாட்டைப் பாதுகாக்கும் நடவடிக்கை யாகச் சித்தரிக்கின்றனர். அதனைக் கொண்டாடும்படி மக்களைப் பயிற்றுவித்திருக்கின்றனர்.

இத்தகைய அயோக்கியர்களான ஓட்டுப் பொறுக்கி களும் இனவாதிகளும் ஊடகங்களும்தான், இன்று ஈழத் தமிழர்களுக்காகக் கண்ணீர் விடுகின்றனர். ஈழத்தை இந் திராகாந்தி வாங்கித்தந்திருப்பார், ஜெயலலிதா வாங்கித் தருவார் என்றெல்லாம் கதையளக்கின்றனர்.

● அஜித்

# உச்ச நீதிமன்றத்தின் சந்தர்ப்பவாதம்!

**பொதுச் சொத்துக்களைத் தரகு முதலாளிகளுக்கு வாரிக் கொடுப்பதில் நடக்கும் ஊழல்கள் குறித்துத் தீர்ப்பு அளிப்பதில் உச்ச நீதிமன்றம் இரட்டைவேடம் போடுகிறது.**

**ஊ**டகங்களும் எதிர்க்கட்சிகளும் நீதிமன்றமும் அரசியல் உள்நோக்கத்தோடும், தி.மு.க.வைப் பலியிட வேண்டும் என்ற மறைமுகத் திட்டத்தோடும்தான் 2ஜி ஊழல் வழக்கை அணுகி வருகின்றன என்பதை ஏற்கெனவே பல்வேறு ஆதாரங்களை முன்வைத்து நாம் அம்பலப்படுத்தி இருக்கிறோம். இந்நிலையில் கெய்ர்ன் இந்தியா என்ற கார்ப்பரேட் நிறுவனம் தனது 60 சதவீதப் பங்குகளை வேதாந்தா நிறுவனத்திற்கு விற்றது குறித்த வழக்கில் உச்ச நீதிமன்றம் கடந்த மாதம் அளித்துள்ள தீர்ப்பு, பொதுச் சொத்துக்களைத் தரகு முதலாளிகளுக்கும் பன்னாட்டு நிறுவனங்களுக்கும் அரசு பட்டா போட்டுக் கொடுப்பதை உச்ச நீதிமன்றம் பாரபட்சமாகவும் ஆளுக்குத்தக்கப்படியும்தான் அணுகி வருகிறது என்பதை இன்னும் துலக்கமாக எடுத்துக்காட்டியிருக்கிறது.

மைய அரசின் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுக் கழகம் இராசஸ்தான் மாநிலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட எண்ணெய் வயல்களிலிருந்து கச்சா எண்ணெய் எடுத்து விற்கும் உரிமத்தை இங்கிலாந்தைச் சேர்ந்த தொழிற்கழகமான கெய்ர்ன் நிறுவனத்திற்கு வழங்கியிருந்தது. இந்த உரிமத்தின் 70 சதவீதப் பங்குகளை கெய்ர்ன் இந்தியா நிறுவனமும் 30 சதவீதப் பங்குகளை எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுக் கழகமும் உடைமையாகக் கொண்டிருந்தன.

கெய்ர்ன் நிறுவனம் குத்தகை உரிமம் பெற்ற இராசஸ்தான் எண்ணெய் வயலின் உற்பத்தியைத் தொடங்கி வைக்கும் பிரதமர் மன்மோகன் சிங். (கோப்புப் படம்)



கெய்ர்ன் இந்தியா எண்ணெய் வயல் உரிமத்தைப் பெற்ற சில நாட்களிலேயே தனது வசமிருந்த 70 சதவீதப் பங்குகளில் 60 சதவீதப் பங்குகளை இங்கிலாந்தைச் சேர்ந்த தேசங்கடந்த தொழிற்கழகமான வேதாந்தா நிறுவனத்திற்கு (தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையின் உரிமையாளருக்கு) 42,500 கோடி ரூபாய்க்கு விற்றது. இதனை ஆய்வு செய்த தணிக்கைத் துறை, கெய்ர்ன் இந்தியா நிறுவனத்திற்கு எண்ணெய் வயல்களை ஒதுக்கீடு செய்திருப்பதில் சட்டத்திற்குப் புறம்பாகப் பல்வேறு விதமான சலுகைகள் வழங்கப்பட்டிருப்பதாகவும், பங்கு விற்பனையால் அரசிற்கு ஏறத்தாழ ஒரு இலட்சம் கோடி ரூபாய் அளவிற்கு இழப்பு ஏற்பட்டுள்ளது என்றும் மதிப்பிட்டு அறிக்கை அளித்தது.

இதன் அடிப்படையில் பெங்களூருவைச் சேர்ந்த அனில் குமார் அகர்வால் என்ற வழக்குரைஞர் இந்த விற்பனை ஒப்பந்தத்தை ரத்துசெய்யக் கோரி உச்ச நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தொடுத்தார். இத்தனியார்மய நடவடிக்கையில் மோசடியும் ஊழலும் பின்னிப் பிணைந்திருப்பது கண்கூடாகத் தெரிந்தபோதும், பங்குகள் விற்கப்பட்டதை அங்கீகரித்து உச்ச நீதிமன்றம் தீர்ப்பு அளித்திருக்கிறது.

2ஜி ஒதுக்கீடில் அரசிற்கு 1.76 இலட்சம் கோடி ரூபாய் உத்தேச இழப்பு ஏற்பட்டதாகக் கூறிய தணிக்கைத்துறையின் அறிக்கையை உச்சந்தலையில் வைத்துக் கொண்டாடி வரும் உச்ச நீதிமன்றம், இவ்வழக்கிலோ தணிக்கைத்துறையின் அறிக்கைக்கு ஒரு காகிதக் கட்டு என்பதற்கு மேல் எந்தவிதமான மதிப்பையும் தர மறுத்துவிட்டது.

''தணிக்கைத் துறை சுயேச்சையான, மதிப்புக்குரிய அரசு அமைப்பு என்றபோதும், அதனின் அறிக்கையை ஆண்டவனின் வேதவாக்கைப் போலக் கருத வேண்டியதில்லை'' எனத் தமது தீர்ப்பில் உபதேசித்துள்ள உச்ச நீதிமன்ற நீதிபதிகள், ''தணிக்கைத் துறையின் அறிக்கை குறித்து சம்பந்தப்பட்ட அமைச்சகம் தெரிவிக்கும் கருத்துக்களைப் பரிசீலனை செய்ய வேண்டும்; நாடாளுமன்றத்தால் அமைக்கப்படும் பொது கணக்குக் கமிட்டிக்கு தணிக்கைத் துறையின் அறிக்கையை நிராகரிக்கும் உரிமையுண்டு; தணிக்கைத் துறையின் அறிக்கை குறித்து நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தப்பட வேண்டும்''

என்றெல்லாம் வாதங்களை அடுக்கி, தணிக்கைத் துறையின் மதிப்பீடை இறுதியானதாகவோ, முடிவானதாகவோ எடுத்துக்கொள்ளத் தேவையில்லை எனக் கூறிவிட்டனர்.

உச்சநீதிமன்றத்தின் இந்த வாதங்களை 2ஜி ஒதுக்கீடு குறித்த தணிக்கைத் துறையின் அறிக்கைக்குப் பொருத்தினால், அது குப்பைக்கூடையில் போடுவதற்கு மட்டுமே தகுதியுடையதாக ஆகிவிடும். ஏனென்றால், 2ஜி ஒதுக்கீடில் 1.76 இலட்சம் கோடி ரூபாய் அளவிற்கு உத்தேச இழப்பு ஏற்பட்டுள்ளது என்ற தணிக்கைத் துறையின் மதிப்பீடைத் தொலைத்தொடர்புத் துறை அமைச்சகம் ஏற்றுக்கொள்ளவில்லை. தணிக்கைத் துறை அறிக்கையைப் பரிசீலனை செய்த நாடாளுமன்ற பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் முரளி மனோகர் ஜோஷி, ஆ.ராசாவையும், மன்மோகன் சிங்கையும் அந்த ஊழலுக்குப் பொறுப்பாக்கித் தயாரித்த வரைவு அறிக்கையை, அக்குழுவின் பெரும்பான்மை உறுப்பினர்கள் நிராகரித்துவிட்டனர்.

> **தனியார்மயம் என்பதே பொதுச் சொத்துக்களை கார்ப்பரேட் முதலாளிகள் கொள்ளையடிப்பதற்கு வழங்கப்படும் லைசென்சுதான் எனும்பொழுது, அதில் முறைகேடுகள் நடந்துள்ளதா, இல்லையா என ஆராய்ச்சி நடத்துவதற்கு எந்தவொரு அடிப்படையும் கிடையாது.**

அலைக்கற்றைகளை ஒதுக்கீடு செய்ததில் ஆ.ராசா விதிமுறைகளை மீறி, சில நிறுவனங்களுக்குச் சாதகமாக நடந்துகொண்டார் எனக் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது. ஏறத்தாழ அதேபோன்ற விதிமுறை மீறல்தான் கெய்ர்ன் இந்தியா பங்கு விற்பனையிலும் நடந்துள்ளது. இராசஸ்தான் எண்ணெய் வயல் ஒப்பந்த விதிகளின்படி, கெய்ர்ன் இந்தியா தனது பங்குகளை எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கழகத்திடம்தான் விற்க முடியும்; இயற்கை எரிவாயுக் கழகம் அப்பங்குகளை வாங்க மறுத்தால்தான் வேறு தனியார் நிறுவனங்களுக்கு விற்க முடியும். தனியொரு பன்னாட்டு நிறுவனத்திற்குச் சாதகமாக இந்த ஒப்பந்த விதி மீறப்பட்டுள்ளது என்பதுதான் இந்த வழக்கின் மையமான குற்றச்சாட்டு.

அலைக்கற்றைகள் முன்பின் அனுபவமில்லாத நிறுவனங்களுக்கு விற்கப்பட்டதைப் போலவே, எண்ணெய் வயல் பங்குகள் எண்ணெய் துரப்பணவுத் தொழிலில் முன்பின் அனுபவமில்லாத வேதாந்தா நிறுவனத்திற்கு விற்கப்பட்டுள்ளன. அலைக்கற்றை ஒதுக்கீடு செய்வதில் ‘‘லாபியிங்’’ நடந்ததைப் போலவே, கெய்ர்ன் நிறுவனத்தின் பங்குகள் வேதாந்தாவிற்கு விற்கப்படுவதை உடனடியாக அனுமதிக்கும்படி பிரிட்டன் நாட்டு பிரதமர் கேமரூன், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு நிர்ப்பந்தம் கொடுத்திருக்கிறார். 42,500 கோடி ரூபாய்க்கு இப்பங்குகளை வாங்கியுள்ள வேதாந்தா நிறுவனத்திற்கு, போட்ட மூலதனத்திற்கு மேல் 60,000 கோடி ரூபாய் அளவிற்கு இலாபம் கிடைக்கும் எனக் கூறப்படுகிறது.

650 கோடி பேரல்கள் இருப்பு கொண்ட எண்ணெய் வயல்கள் ஒரு பன்னாட்டு நிறுவனத்திற்குத் தூக்கிக் கொடுக்கப்பட்டிருப்பதற்கு எதிராக உச்ச நீதிமன்றம் அறச்சீற்றம் கொள்ளவில்லை. மாறாக, ‘‘பொது நல நோக்கத்தின் காரணமாகவே கெய்ர்ன் இந்தியா நிறுவனத்தின் பங்குகள் வேதாந்தா நிறுவனத்திற்கு விற்கப்பட்டுள்ளன’’ என விளக்கமளித்து, இந்த விற்பனையை அங்கீகரித்தது. ‘‘பொது நல நோக்கத்தின் காரணமாகவே அலைக்கற்றைகளைக் குறைந்த விலையில் ஒதுக்கீடு செய்தேன்’’ என்ற ஆ.ராசாவின் வாதத்தை 2ஜி வழக்கில் ஒதுக்கித் தள்ளிய உச்ச நீதிமன்றம், இவ்வழக்கில் அதற்கு நேர்எதிராக, வெளிப்படையாகவே பாரபட்சமான முறையில் தீர்ப்பளித்திருக்கிறது.

2ஜி அலைக்கற்றைகளை ஒதுக்கீடு செய்ததில் அரசுக்கு ஏற்பட்ட இழப்பை ஈடுசெய்ய ஆ.ராசா வழங்கிய 122 உரிமங்களை அடியோடு ரத்து செய்த உச்ச நீதிமன்றம் இந்த வழக்கிலோ, ‘‘அரசின் பொருளாதார முடிவுகள் பரிசோதனையின் அடிப்படையில்தான் எடுக்கப்படுகின்றன. எடுக்கப்பட்ட முடிவு அரசிற்கு இழப்பீடைக்கூட ஏற்படுத்தலாம். அம்முடிவு சட்டத்திற்குப் புறம்பாகவும் உள்நோக்கத்தோடும் எடுக்கப்பட்டிருந்தால் மட்டுமே நீதிமன்றம் தலையிடுமே தவிர, அரசு எடுக்கும் ஒவ்வொரு பொருளாதார முடிவு குறித்தும் நாங்கள் தீர்ப்பு அளிக்க முடியாது’’ எனக் கூறி இந்த விற்பனையையும், அதனால் அரசுக்கு ஏற்பட்டுள்ள ஒரு இலட்சம் கோடி ரூபாய் இழப்பையும் நியாயப்படுத்தியிருக்கிறது.

தனியார்மயம் என்பதே பொதுச் சொத்துக்களை கார்ப்பரேட் முதலாளிகள் கொள்ளையடிப்பதற்கு வழங்கப்படும் லைசென்சுதான் எனும்பொழுது, அதில் முறைகேடுகள் நடந்துள்ளதா, இல்லையா என ஆராய்ச்சி நடத்துவதற்கு எந்தவொரு அடிப்படையும் கிடையாது. பொதுச் சொத்துக்களை கார்ப்பரேட் முதலாளிகளுக்கு பட்டா கொடுப்பதில் ஆளுக்குத்தக்கபடி நடந்து கொள்வதற்காகவே, நீதிபதிகளும் பத்திரிகைகளும் அப்படிபட்ட வேறுபாடு இருப்பதாக ஒரு கற்பிதத்தை வலிந்து உருவாக்கி வருகின்றன. இராசஸ்தான் எண்ணெய் வயல்கள் வேதாந்தா நிறுவனத்திற்கும், கிருஷ்ணா-கோதாவரி எண்ணெய் வயல்கள் அம்பானிக்கும், நிலக்கரி வயல்கள் பல்வேறு தரகு முதலாளிகளுக்கும் பட்டா போட்டுக் கொடுக்கப்பட்டிருப்பதை நீதிமன்றமும் பத்திரிகைகளும் எதிர்க்கட்சிகளும் அணுகும் விதமே இவற்றின் இரட்டை வேடத்தையும், இவை ஆ.ராசா விசயத்தில் உள்நோக்கத்தோடு நடந்துவருவதையும் அம்பலப் படுத்திக் காட்டுகின்றன.

● ரஹீம்

# சூரிய மின்சக்தியிலும் சுயசார்பை அழிக்கும் அமெரிக்கா

**காலாவதியான அணு உலைகளைத் தலையில் கட்டுவதைப் போலவே, சூரிய மின்சக்தியிலும் பின்தங்கிய தொழில்நுட்பத்தை நம் மீது திணிக்கிறது அமெரிக்கா.**

புவி வெப்பமடைதலைத் தடுப்பதற்கு, மரபு சாராத, புதுப்பிக்கக்கூடிய ஆற்றல் வளங்களின் மூலம், தூய்மையான மின்சாரம் தயாரிக்கப்பட வேண்டும் என்று சுற்றுச் சூழலை மாசுபடுத்துவதில் முன்னணியில் உள்ள ஏகாதிபத்தியங்கள் பிரச்சாரம் செய்து வருகின்றன. தூய்மையான மின்சாரம் என்ற பெயரில்தான் அமெரிக்கா தனது காலாவதியான அணு உலைகளை நம் தலையில் கட்ட முயற்சிக்கிறது.

அணு மின்சக்தியில் மட்டுமின்றி, சூரிய ஒளி மின்திட்டங்களிலும் சுயசார்பு நிலையை எட்டவிடாமல், காலாவதியான தங்களது தொழில்நுட்பத்தைத்தான் இந்தியா வாங்கவேண்டும் என அமெரிக்க அரசு நிர்பந்தித்து வருகிறது. உள்நாட்டு சூரிய மின் கருவித் தயாரிப்பாளர்களுக்கு இந்திய அரசு முன்னுரிமை அளிப்பதாகவும், இது காட் ஒப்பந்தத்துக்கு எதிரானது என்றும் கூறி, இந்தியாவுக்கு எதிராக உலக வர்த்தகக் கழகத்தில் அமெரிக்க அரசு வழக்கும் தொடுத்திருக்கிறது.

2022-ஆம் ஆண்டிற்குள் 22 ஆயிரம் மெகாவாட் சூரிய சக்தி மின்சாரம் தயாரிக்க வேண்டும் என்பது மத்திய அரசு நிர்ணயித்திருக்கும் இலக்கு. கடந்த 6 மாதங்களில், ஐந்து மாநிலங்களில் மட்டும் 6 ஆயிரம் மெகாவாட் அளவிற்குப் புதிய சூரிய ஒளி மின்திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் தமிழக அரசு மட்டும் மூன்றே ஆண்டுகளில் 3 ஆயிரம் மெகாவாட் உற்பத்தி செய்யப் போவதாக அறிவித்துள்ளது.

இந்தியா முழுவதும் அறிவிக்கப்படுகின்ற இந்த சூரிய மின்சக்தித் திட்டங்கள் சுயசார்பானவையா என்றால், இல்லை. ஜவஹர்லால் நேரு தேசிய சூரியசக்தி மின்சாரத் திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் நிறுவப்பட்டிருக்கும் சூரிய மின்சக்தி நிலையங்களில் 60 சதவீத நிலையங்கள் அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் கருவிகளை நம்பியே இருக்கின்றன. எடுத்துக்காட்டாக, சூரிய மின்சக்தி உற்பத்தியில் முன்னணியில் இருக்கும் மாநிலம் என்று கூறப்படும் குஜராத் முழுவதும் அமெரிக்க இறக்குமதியை நம்பியே இருக்கிறது. குறிப்பாக ஆசியாவிலேயே மிகப் பெரியதென்று கூறப்படும் 600 மெகாவாட் சூரிய ஒளிப் பூங்காவை சன் எடிசன் என்ற அமெரிக்க நிறுவனம்தான் குஜராத்தில் நிறுவி இயக்குகிறது.

சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் தயாரிக்கப் பயன்படும் போட்டோ வோல்டாயிக் சோலார் செல்களில் இரண்டு வகை; உண்டு. ஒன்று, கிரிஸ்டலைன் செல்கள்; இரண்டாவது வகை, தின்-பிலிம் செல்கள். கிரிஸ்டலைன் செல்கள் எனப்படுவதே நவீன தொழில் நுட்பம். இதில் உலகிலேயே சீனா முன்னிலை வகிக்கிறது. தின்-பிலிம் என்பது உற்பத்தி திறன் குறைந்த தொழில்நுட்பம்; அதன் ஆயுளும் குறைவு. அமெரிக்க கம்பெனிகள் இதையே உற்பத்தி செய்கின்றன.

சூரிய மின்சக்தி திட்டத்தின் முதல் கட்டத்தை 2011-இல் அறிவித்த மத்திய அரசு, கிரிஸ்டலைன் செல்களை

குஜராத்தில் சர்தார் சரோவர் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள சநாந்த் கால்வாயின் மேல்பகுதியில் அமெரிக்க நிதியுதவியோடு அமைக்கப்பட்டுள்ள சூரியசக்தி மின்நிலையம்.



உள்நாட்டு உற்பத்தியாளர்களிடமிருந்து மட்டுமே வாங்க வேண்டும் எனக் கட்டுப்பாடு விதித்திருந்தது. இந்தக் கட்டுப்பாடு சீன இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதை மட்டுமே நோக்கமாகக் கொண்டது. தின்-பிலிம் செல்கள் என்ற அமெரிக்க தொழில்நுட்பத்தின் இறக்குமதிக்குக் கட்டுப்பாடு விதிக்கப்படவில்லை. அமெரிக்க இறக்குமதிக்கு வழிசெய்யும் வகையில் அது பற்றி வேண்டுமென்றே குறிப்பிடாமல் விடப்பட்டிருந்தது.

மூன்றே ஆண்டுகளில் 3,000 மெகாவாட் திறன் கொண்ட சூரிய ஒளி மின்சாரத்தை உற்பத்தி செய்வது என்ற தமிழக அரசின் திட்டத்தின் கீழ் மதுரை காமராசர் பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள சூரிய சக்தி மின்நிலையம்.



இத்தகைய சாதகமான நிலைமையிலும்கூட, சீனத் தயாரிப்புகளையும், இந்திய சூரிய ஒளி மின்கருவிகளையும் நேருக்கு நேர் போட்டியில் சந்திக்கும் ஆற்றல் அமெரிக்க முதலாளிகளுக்கு இல்லை. இதற்காக அமெரிக்காவின் எக்ஸ்போர்ட்-இம்போர்ட் வங்கி மற்றும் ஓவர்சீஸ் பிரைவேட் இன்வெஸ்ட்மென்ட் வங்கி ஆகிய இரண்டு வங்கிகளையும் அமெரிக்க அரசு களமிறக்கியது.

> ***சீனாவுடன் சூரிய மின்சக்தி துறையில் போட்டியிட்டு வெல்ல முடியாத அமெரிக்கா, ஏகாதிபத்தியத்துக்கே உரிய முறையில் கையை முறுக்கிக் காரியம் சாதிக்க முனைந்திருக்கிறது. இந்த அடிப்படையில்தான் உலக வர்த்தகக் கழகத்தில் இந்தியாவுக்கு எதிராக அமெரிக்கா வழக்கு தொடுத்திருக்கிறது.***

அமெரிக்கத் தயாரிப்புகளை வாங்குபவர்களுக்கு 3% ஆண்டு வட்டியில் முழுத்தொகையும் கடனாகத் தரப்படுவதுடன், கடனைத் திருப்பிச் செலுத்தும் தவணைக்காலமும் 18 ஆண்டுகள் என்று கூறி மின் கருவிகள் வாங்குவோர் அனைவரையும் அமெரிக்க நிறுவனங்கள் கவர்ந்திழுத்தன. அதே நேரத்தில் இந்திய நிறுவனங்களால் தயாரிக்கப்பட்ட சோலார் செல்களை வாங்குவதற்கான கடனுக்கு இந்திய வங்கிகள் விதிக்கும் வட்டியோ 14% ஆக இருந்தது. தவணைக்காலமும் குறைவு.

மேற்படி அமெரிக்க வங்கிகளால் மட்டும் எப்படி இத்தனை குறைந்த வட்டிக்குக் கடன் தர இயலுகிறது என்று துருவி ஆராய்ந்த அறிவியல் தொழில்நுட்ப நிறுவனம் என்ற தில்லியைச் சேர்ந்த தன்னார்வ நிறுவனம், அமெரிக்காவின் கீழ்த்தரமான மோசடியை வெளிக்கொணர்ந்துள்ளது.

இவ்விரு வங்கிகளும் தங்களுடைய சொந்தப் பணத்தைக் கடனாகக் கொடுக்கவில்லை, மாறாக, ஐ.நா.வின் ‘பாஸ்ட்-பார்வர்டு’ நிதியை இதற்காக இந்த வங்கிகள் பயன்படுத்தியிருப்பது தெரியவந்துள்ளது. கடந்த 2009-ஆம் ஆண்டு கோபன்ஹேகனில் நடந்த ஐ.நா.வின் உலக தட்பவெப்ப மாற்றங்கள் குறித்த உச்சி மாநாடு, 2011-12 ஆண்டுகளில் ஏழை நாடுகளில் மாற்று எரிசக்தித் துறையின் வளர்ச்சிக்காகச் செலவிட 3 ஆயிரம் கோடி அமெரிக்க டாலர்களை ஒதுக்கியது.

இந்த நிதியையே தங்களது வங்கியின் கடன்கள் என்ற பெயரில் வழங்கியது மட்டுமன்றி, கடன் வேண்டுமென்றால், குறிப்பிட்ட சில அமெரிக்க நிறுவனங்களின் சோலார் செல்களை வாங்க வேண்டும் என்று நிர்ப்பந்தப்படுத்தி, காலாவதியான அமெரிக்கத் தொழில்நுட்பத்தை இந்திய வாடிக்கையாளர்களின் தலையில் கட்டியதுடன், ஏழை நாடுகளின் மாற்று எரிசக்தி வளர்ச்சிக்காக என்ற பெயரில் ஒதுக்கப்பட்ட நிதியை அமெரிக்க கம்பெனிகள் திருடித் தின்றிருக்கின்றன.

தற்போது இந்த உண்மைகள் எல்லாம் வெளியே வந்து சந்தி சிரித்து விட்டன. சூரிய சக்தி மின்கருவிகளைத் தயாரிக்கும் பெல் நிறுவனம், டாடா உள்ளிட்ட தரகு முதலாளித்துவ நிறுவனங்கள் மற்றும் சிறு உற்பத்தியாளர்களால் அமெரிக்காவின் போட்டியைச் சமாளிக்க முடியவில்லை. பலர் முற்றிலுமாகவே தமது தொழிலை இழுத்து மூடும் நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டதால் கடுமையாக எதிர்ப்பு தெரிவிக்கத் தொடங்கினர். இதன் காரணமாகத் தேசிய சூரிய மின்சக்தித் திட்டத்தின் இரண்டாவது கட்ட அறிவிப்பை 2012-இல் வெளியிட்டபோது , தின்-பிலிம் செல் தொழில்நுட்பத்துக்கும் சேர்த்துக் கட்டுப்பாட்டை அறிவித்தது இந்திய அரசு.

இந்தியாவைப் போன்றே கனடா, பிரான்ஸ், மலேசியா, துருக்கி போன்ற நாடுகள் சோலார் செல் இறக்குமதிக்குப் பல்வேறு தடைகளைப் போட்டுள்ளன. அவ்வளவு ஏன், சீனா தனது நாட்டு சோலார் உற்பத்தியாளர்களுக்கு அதிகமாக மானியம் வழங்குகிறது என்று

கூறி சீன இறக்குமதிகள் மீது கடுமையாக வரி விதித்திருக்கிறது, அமெரிக்கா.

இருப்பினும், இந்திய அரசு தனது உள்நாட்டு உற்பத்தியாளர்களைப் பாதுகாக்கும் பொருட்டு ஒரு தலைப்பட்சமான முடிவை எடுத்திருப்பதாகவும், இச்செயல் காட் ஒப்பந்த விதிகளை மீறுகிறது என்றும் கூறி உலக வர்த்தகக் கழகத்தில் இந்தியாவிற்கு எதிரானதொரு வழக்கை தொடுத்திருக்கிறது, அமெரிக்கா.

சூரிய மின்சக்தி என்பது எதிர்காலத்தின் மிக முக்கியமான ஆற்றல் மூலம். இத்தொழில் நுட்பத்தில் மேலாண்மை செலுத்த வேண்டும் என்ற நோக்கில் அமெரிக்க, ஐரோப்பிய அரசுகள் இது தொடர்பான ஆராய்ச்சிக்குப் பல்லாயிரம் கோடிகளை ஏற்கெனவே செலவிட்டிருக்கின்றன. இருப்பினும், இத்துறையில் சமீபத்தில் நுழைந்த சீனா, கிரிஸ்டலைன் செல்களின் உலகச் சந்தையில் மேலாண்மை பெற்று விட்டது.

சீனாவுடன் இந்தத் துறையில் போட்டியிட்டு வெல்ல முடியாத அமெரிக்கா, ஏகாதிபத்தியத்துக்கே உரிய முறையில் கையை முறுக்கிக் காரியம் சாதிக்க முனைந்திருக்கிறது. அதுதான் உலக வர்த்தகக் கழகத்தில் அமெரிக்கா தொடுத்திருக்கும் வழக்கு. இந்திய அரசு இதற்கு எதிராக ஒருபுறம் வாய்ச்சவடால் அடித்துக் கொண்டிருக்கிறது. அதேநேரத்தில் தமிழகம் உள்ளிட்ட மாநில அரசுகள் அறிவிக்கும் சூரிய மின் உற்பத்தி திட்டங்கள் மத்திய அரசின் கொள்கை அறிவிப்பின்படி, பெல் போன்ற உள்நாட்டு நிறுவனங்களுக்குத் தரப்படுவதில்லை. அவற்றை வழக்கம் போல அமெரிக்க நிறுவனங்கள்தான் கைப்பற்றி வருகின்றன. தாமிரவருணித் தண்ணீரை புட்டியில் பிடித்துத் தருவதற்கே ''கோக்'' கின் தொழில் நுட்பம் தேவைப்படும்போது, சூரிய வெப்பத்தை மின்சாரமாக்கித் தருவதற்கு அமெரிக்க தொழில் நுட்பம் தேவைப்படுவதில் வியப்பென்ன இருக்கிறது?

● தனபால்

# “கொலைகாரர்களால் ஆளப்படும் நாடு!”

**சீக்கியப் படுகொலையை நடத்திய குற்றவாளிகள் போலீசு, சி.பி.ஐ., நீதிமன்றம் என அரசின் அனைத்து உறுப்புகளாலும் பாதுகாக்கப்படுகிறார்கள்.**

1984-இல் நடந்த சீக்கியப் படுகொலை தொடர்பான வழக்கொன்றில் கொலைக்குற்றம் சுமத்தப்பட்டிருந்த காங்கிரசு கட்சியைச் சேர்ந்த முன்னாள் எம்.பி.யான சஜ்ஜன் குமார், அவ்வழக்கு தொடர்பான அனைத்துக் குற்றச்சாட்டுகளிலிருந்தும் - கொலைக்குற்றம் மற்றும் கலவரம் - விடுவிக்கப்பட்டுள்ளார். கடந்த 29 ஆண்டுகளாக நீதிக்காகப் போராடி வரும், நீதிக்காகக் காத்திருக்கும் சீக்கியர்களிடம் இந்த அநீதியான தீர்ப்பு எத்தகைய மன உளைச்சலை ஏற்படுத்தியிருக்கும் என்பதை எந்தவொரு வார்த்தையாலும் விவரித்துவிட முடியாது.

1984-ஆம் ஆண்டு அக்டோபர் 31 அன்று காலையில் அன்றைய பிரதமர் இந்திரா காந்தி, சீக்கிய மதத்தைச் சேர்ந்த இரண்டு மெய்க்காப்பாளர்களால் சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்துத் தொடங்கிய சீக்கியப் படுகொலை நவம்பர் 3-ஆம் தேதி வரை தொடர்ந்து நடந்தது. இப்படுகொலையின் குவிமையமாக தலைநகர் டெல்லி இருந்தது. அங்கு மட்டும் ஏறத்தாழ 3,000 சீக்கியர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

டெல்லியில் நடந்த சீக்கியப் படுகொலையை அப்பொழுது செய்தி-ஒலிபரப்புத் துறை அமைச்சராக இருந்த ஹெச்.கே.எல்.பகத், நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த ஜகதீஷ் டைட்லர், டெல்லி மாநகர கவுன்சிலராக இருந்த சஜ்ஜன் குமார் ஆகியோர்தான் தலைமையேற்று நடத்தினர். டெல்லி போலீசு இப்படுகொலையை நடத்திய காங்கிரசு கும்பலின் பங்காளியாக நடந்து கொண்டது. இந்திரா காந்தி கொல்லப்பட்டதைத் தொடர்ந்து இந்தியப் பிரதமராகப் பதவியேற்றுக் கொண்ட ராஜீவ் காந்தி, ''ஒரு ஆல மரம் விழுந்தால் பூமி அதிரத்தான்

காங்கிரசு காலிகள் டெல்லியில் அப்பாவி சீக்கிய மக்களைத் தாக்கிப் படுகொலை செய்யும் கோரக்காட்சி. (கோப்புப் படம்)



செய்யும்'' எனக் கூறி, காங்கிரசு கும்பல் நடத்திய படுகொலையைப் பச்சையாக நியாயப்படுத்தினார்.

டெல்லியில் சீக்கியர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட படுகொலை, பாலியல் வல்லுறவுகள், கலவரம், தீவைப்பு தொடர்பாக 740 வழக்குகள் தொடரப்பட்டதில், 324 வழக்குகள் விசாரணை எதுவுமின்று ஊத்தி மூடப்பட்டுவிட்டன. நீதிமன்ற விசாரணை வரை சென்ற 403 வழக்குகளுள் 335 வழக்குகளில் குற்றவாளிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டுவிட்டனர். 13 வழக்குகள் என்ன நிலைமையில் உள்ளன என்ற விவரம் யாருக்குமே தெரியவில்லை. மீதி வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன.



டெல்லி சீக்கியப் படுகொலையின் தளபதிகள்:
சஜ்ஜன்குமார் (இடது) மற்றும் ஜகதீஷ் டைட்லர்.

பா.ஜ.க. கூட்டணி ஆட்சியின்பொழுது இப்படுகொலையை விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்ட நானாவதி கமிசன், ஹெச்.கே.எல்.பகத், சஜ்ஜன் குமார், ஜகதீஷ் டைட்லர் ஆகியோரைக் குற்றவாளிகளாக அறிவித்தது. மைய அரசு நியமித்த கமிசனால் அம்மூவரும் குற்றவாளிகளாக அடையாளம் காட்டப்பட்ட பிறகும், காங்கிரசுக் கட்சி கொஞ்சம்கூடக் குற்ற உணர்வின்றி, ஜகதீஷ் டைட்லருக்கும் சஜ்ஜன் குமாருக்கும் 2004 நாடாளுமன்றத் தேர்தல்களில் போட்டியிட சீட்டுக் கொடுத்தது. காங்கிரசின் இந்த மமதைக்கு எதிராகப் பாதிக்கப்பட்ட சீக்கியர்களின் போராட்டம் வலுப்பெற்றதையடுத்து, சஜ்ஜன் குமாருக்கு வழங்கப்பட்ட சீட்டுத் திரும்பப் பெறப்பட்டு, அத்தொகுதியில் அவரது தம்பி வேட்பாளராக நிறுத்தப்பட்டார். ஜகதீஷ் டைட்லரோ, அத்தேர்தலில் வென்று, அமைச்சராகி, அதன் பின்னர் வேறு வழியின்றிப் பதவியிலிருந்து விலகினார்.

சீக்கியப் படுகொலை நடந்து முடிந்து 20 ஆண்டுகள் கழிந்த பிறகு - 2005-இல்தான் இவர்கள் இருவரின் மீதும் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. அதற்கு முன்புவரை, அவர்களது பெயர் எந்தவொரு குற்றப்பத்திரிக்கையிலும், வழக்கிலும் சேர்க்கப்படாமல் பார்த்துக் கொண்டது டெல்லி போலீசு. ஹெச்.கே.எல்.பகத் நோய்வாய்ப்பட்டிருந்ததைக் காரணமாகக் காட்டி, அவர் மீது வழக்குப் பதிவு செய்ய மறுத்தது, காங்கிரசு கூட்டணி அரசு. வழக்கு, விசாரணை போன்ற எதையும் சந்திக்காமலேயே செத்துத் தொலைந்தான், பகத்.

சஜ்ஜன்குமாரைத் தண்டிக்கக் கோரி, கடந்த 29 ஆண்டுகளாகப் போராடிவரும் ஜெக்திஷ் கவுர்.



ஜகதீஷ் டைட்லருக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட ஒரேயொரு வழக்கை விசாரித்து வந்த சி.பி.ஐ., அவருக்கு எதிரான சாட்சியங்கள் நம்பத்தக்கதாக இல்லை என்ற காரணத்தைக் கூறி, அந்த வழக்கை 2007-இல் நீதிமன்ற அனுமதியோடு கைகழுவியது. பின்னர் அந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டாலும், அதே காரணத்தைக் கூறி, 2009-இல் நீதிமன்ற அனுமதியோடு அந்த வழக்கு மறுமுறையும் சி.பி.ஐ.யால் கைவிடப்பட்டது. சி.பி.ஐ.-இன் இந்த முடிவுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்கை விசாரித்து வந்த டெல்லி குற்றவியல் நீதிமன்றம் இந்த வழக்கை மீண்டும் விசாரிக்குமாறு கடந்த ஏப்ரல் மாத மத்தியில் உத்தரவிட்டுள்ளது. சஜ்ஜன் குமாருக்கு எதிராக நடந்துவரும் மூன்று வழக்குகளில் ஒன்றில், அவருக்கு எதிரான சாட்சியங்கள் நம்பத்தக்கதாக இல்லை என நீதிமன்றமே கூறி, அவரை கடந்த ஏப்ரல் மாத இறுதியில் விடுதலை செய்துவிட்டது.

இவ்வழக்குகள் தொடர்பான சி.பி.ஐ. விசாரணை, நீதிமன்றத் தீர்ப்புகள் இவையிரண்டுமே முரண்பாடுகளின் மூட்டையாகவும், அரசியல் தொடர்புடைய முக்கிய குற்றவாளிகளைத் தப்பவைக்க வேண்டும் என்ற உள்நோக்கத்தோடு நடத்தப்பட்டிருப்பதும் பச்சையாகத் தெரிகின்றன. புல் பங்கஷ் என்ற குருத்வாராவில் மூன்று சீக்கியர்கள் கொல்லப்பட்ட வழக்கில், அக்கொலைகளைத் தூண்டிவிட்டு நடத்தியதாக ஜகதீஷ் டைட்லர் மீது குற்றஞ்சுமத்தப்பட்டிருந்தது. ''இப்படுகொலை நடந்த சமயத்தில் ஜகதீஷ் டைட்லர் அந்த குருத்வாரா இருக்கும் பகுதியிலேயே இல்லை; அப்பொழுது அவர் தீன்மூர்த்தி பவனில் வைக்கப்பட்டிருந்த இந்திரா காந்தியின் உடலருகே ஒப்பாரி வைத்துக் கொண்டிருந்தார். இதற்கு தூர்தர்ஷனின் ஒளிப்பதிவுகள் ஆதாரமாக உள்ளன'' என்று கூறி, டைட்லரை உத்தமனாகக் காட்டி வருகிறது, சி.பி.ஐ.

படுகொலை நடந்த குருத்வாராவிற்கும் தீன்மூர்த்தி பவனுக்கும் இடையே உள்ள தூரத்தை வெறும் 15 நிமிடத்தில் கடக்கலாம் என்ற சாட்சியங்களின் தரப்பு வாதத்தை, சி.பி.ஐ. ஒரு பொருட்டாகவே எடுத்துக் கொள்ளவில்லை. மேலும், இப்படுகொலை தொடர்பாக சாட்சியம் அளிக்க முன்வந்த நான்கு சாட்சி

யங்களின் வாக்குமூலங்களைப் பதிவு செய்யாமலேயே, அவை நம்பத்தகுந்த சாட்சியங்கள் இல்லை என இட்டுக்கட்டிக் கூறி, இந்த வழக்கை நீதிமன்ற அனுமதியோடு மூடியது, சி.பி.ஐ. இதற்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்கில், மாஜிஸ்டிரேட் கோர்ட் அளித்த உத்தரவை ரத்து செய்து, அந்த நான்கு சாட்சியங்களை விசாரித்து அவர்களின் வாக்குமூலங்களைப் பதிவு செய்ய வேண்டும் என உத்தரவிட்டுள்ள மாவட்டக் குற்றவியல் நீதிமன்றம், இவ்விசாரணையை மீண்டும் சி.பி.ஐ.யிடமே ஒப்படைத்துள்ளது. நீதிமன்றத்தின் இந்த முடிவு அடிப்படையிலேயே நாணயமற்றது; குற்றவாளி டைட்லரைத் தப்பவைக்கும் உள்நோக்கத்தோடு வழங்கப்பட்டிருக்கும் இன்னொரு வாய்ப்பாகும்.



சஜ்ஜன்குமார் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டதைக் கண்டித்து, காங்கிரசு தலைவி சோனியா காந்தியின் வீட்டை முற்றுகையிட்டுப் போராடும் சீக்கியர்கள்.

ராஜ் நகர் பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து சீக்கியர்கள் கொல்லப்பட்ட வழக்கில் சஜ்ஜன் குமார் உள்ளிட்டு ஆறு பேர் மீது கொலை, கலவரம், தீவைப்பு ஆகிய குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தன. தனது கணவர், மகன், மூன்று கொழுந்தன்களைப் பறிகொடுத்த ஜெகதிஷ் கவுர் இப்படுகொலைகளை நேரில் பார்த்த சாட்சி மட்டுமல்ல, இப்படுகொலை நடந்த சமயத்தில் சஜ்ஜன் குமார் அப்பகுதியில் இருந்தார் என்றும், சீக்கியர்களைக் கொல்லுமாறு தனது ஆதரவாளர்களைத் தூண்டிவிட்டுக் கொண்டிருந்தார் என்றும் சாட்சியம் அளித்தார். படுகொலை நடந்து 29 ஆண்டுகள் கழிந்த பிறகும், அவர் அளித்துள்ள சாட்சியத்தில் எவ்விதமான தடுமாற்றமும் காணப்படவில்லை. சஜ்ஜன் குமார் தவிர்த்த மற்ற ஐந்து பேரைக் குற்றவாளிகள் எனத் தீர்ப்பு அளிப்பதற்கு ஜெகதிஷ் கவுர் அளித்த சாட்சியத்தை ஏற்றுக் கொண்டுள்ள நீதிமன்றம், அவர் சஜ்ஜன் குமாருக்கு எதிராக அளித்த சாட்சியத்தை மட்டும் நம்பத்தக்கதாக இல்லை என ஒதுக்கித் தள்ளிவிட்டு, சஜ்ஜன் குமாரை விடுதலை செய்துவிட்டது.

''சீக்கியப் படுகொலை தொடர்பாக விசாரணை நடத்திய ரங்கநாத் மிஸ்ரா கமிசனிடம் ஜெகதிஷ் கவுர் சாட்சியம் அளித்தபொழுது, அவர் சஜ்ஜன் குமார் பெயரைக் குறிப்பிடவில்லை. அதற்கு முரணாக அவர் இந்த விசாரணையின்பொழுது சஜ்ஜன் குமார் பெயரைக் குறிப்பிடுவது சந்தேகத்திற்குரியது'' என இரக்கமற்ற முறையில் தீர்ப்பளித்திருக்கிறது, நீதிமன்றம். சஜ்ஜன் குமார் ஏவிவிட்ட அடியாட்களால் ஜெகதிஷ் கவுர் தொடர்ந்து மிரட்டப்பட்டு வந்தார்; தனது உயிரைக் காத்துக் கொள்ளும்பொருட்டே மிஸ்ரா கமிசனிடம் அவர் சஜ்ஜன் குமார் பெயரைக் குறிப்பிடவில்லை என்ற உண்மையை நீதிமன்றம் நாணயமற்ற முறையில் புறக்கணித்திருக்கிறது.

சீக்கியப் படுகொலை நடந்து முடிந்த இந்த 29 ஆண்டுகளில், பெரும்பாலான ஆண்டுகள் டெல்லியையும் மைய அரசையும் காங்கிரசு கும்பல்தான் ஆண்டு வந்திருப்பதால், சஜ்ஜன் குமார், டைட்லர் போன்ற குற்றவாளிகள் ஜெகதிஷ் கவுர் போன்ற சாட்சியங்களை மிரட்டிப் பணிய வைப்பதையும், விலைக்கு வாங்கிக் கலைப்பதையும் எளிதாகச் செய்து வந்துள்ளனர். பாதிக்கப்பட்ட சீக்கியர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டிய டெல்லி குருத்வாரா தலைமை பீடமோ, காங்கிரசோடு கைகோர்த்துக்கொண்டு சாட்சிகளைக் கலைக்கும் துரோகத்தனத்தைக் கூச்சநாச்சமின்றி செய்துவந்தது. சீக்கியர்களின் பாதுகாவலன் என மார்தட்டிக் கொள்ளும் அகாலி தளக் கட்சியோ, இப்படுகொலையில் பாதிக்கப்பட்டது தமது ஓட்டு வங்கிக்குப் பயன்படாத டெல்லியைச் சேர்ந்த சீக்கியர்கள் என்பதால், பாதிக்கப்பட்ட சீக்கியர்களுக்கு ஆதரவாக அறிக்கைவிட்டதைத் தாண்டி உருப்படியாக எதையும் செய்ய முன்வரவில்லை.

இதனால் பாதிக்கப்பட்ட சீக்கியர்கள் அரசியல் செல்வாக்கு மிகுந்த குற்றவாளிகளை எதிர்த்துத் தனியாக போராட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். டைட்லருக்கு எதிராகச் சாட்சியம் அளித்த ஜஸ்பீர் சிங், சுரிந்தர் சிங் போன்றோர் தமது உயிரைக் காத்துக் கொள்ள இந்தியாவிலிருந்து வெளியேறி, அமெரிக்காவில் தஞ்சமடைந்தனர். சி.பி.ஐ.-யும், நீதிமன்றங்களும் சாட்சியங்களின் இந்தக் கையறு நிலையைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, அரசியல் செல்வாக்கு மிகுந்த குற்றவாளிகளைத் தப்பவைக்கும் அயோக்கியத்தனத்தைச் சட்டப்படியே செய்துவருகின்றனர்.

குஜராத் முசுலீம் படுகொலையை நடத்திய நரேந்திர மோடிக்கும், சீக்கியப் படுகொலையை நடத்திய நேரு-காந்தி குடும்பத்திற்கும் இடையே எள்ளளவும் வேறுபாடு கிடையாது. சஜ்ஜன் குமார் விடுதலை செய்யப்பட்ட நாளன்று, ''இந்த நாடு கொலைகாரர்களால் ஆளப்படுகிறது; அவர்களிடம் நாங்கள் நீதிக்காகக் காத்திருப்பதில் எந்த அர்த்தமும் இல்லை'' என சீக்கியர் ஒருவர் தனது மனக்குமுறலைக் கொட்டித் தீர்த்தார். இந்திய ஜனநாயகத்தின், மதச்சார்பின்மையின், நீதி பரிபாலணத்தின் போலித்தனத்தைத் தோலுரித்துக் காட்டும் சத்தியமான வார்த்தைகள் அல்லவா அவை!

● குப்பன்

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

2-ஆம் பக்கத் தொடர்ச்சி...




யில், நில ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டத்தில் முன்னணியில் நின்ற நரகரிசாகு, தருண்மண்டல், மனஸ்ஜெனா மற்றும் லக்ஷ்மன் ப்ரமரிக் ஆகிய செயல் வீரர்கள், அடுத்தகட்டப் பணிகள் குறித்து விவாதித்துக் கொண்டிருக்கையில் போஸ்கோ நிறுவனத்தின் கூலிப்படையினர் வெடிகுண்டுகளை அவர்கள் மீது வீசினர். இச்சம்பவத்தில் லக்ஷ்மன்ப்ரமரிக் மட்டும் படுகாயங்களோடு உயிர்தப்பினார். மற்ற மூவரும் சம்பவ இடத்திலேயே கோரமாகக் கொல்லப்பட்டனர்.

இக்கொடுஞ்செயலை எதிர்த்து இப்பகுதிவாழ் மக்கள் குமுறிக் கொண்டிருந்த நிலையில், ''வெடிகுண்டு தயாரித்த போது ஏற்பட்ட விபத்தில்தான் அவர்கள் 3 பேரும் இறந்தனர்'' என்று எழுதப்பட்ட ஒரு வாக்குமூலக் கடிதத்தில் கையெழுத்திட்டுத் தருமாறு பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினரை நள்ளிரவில் வந்து மிரட்டியுள்ளது போலீசு. உயிரிழந்தோரின் குடும்பத்தினர் அதற்குக் கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்து கையெழுத்திட மறுத்திருக்கின்றனர். மறுநாள் - மார்ச் 3 அன்று இக்கொலைவெறியாட்டத்தைப் பற்றி புகார் கொடுக்கச் சென்ற நரகரிசாகுவின் உறவினரிடமிருந்து புகாரை வாங்க மறுத்து திருப்பி அனுப்பியிருக்கிறது போலீசு. போஸ்கோவின் கைக்கூலி அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையில் மார்ச் 4-ஆம் தேதியன்றுதான் முதல் தகவல் அறிக்கையையே போலீசு பதிவு செய்துள்ளது. ஆட்சியாளர்களோ, போலீசு உருவாக்கிய கதையின்படி, போராட்டக் குழுவினர் வெடிகுண்டு தயாரித்த போது நடந்த விபத்தில்தான் மூவரும் இறந்தனர் என்று கூசாமல் புளுகினர். தொடர் போராட்டங்களின் மூலம் இப்பகுதிவாழ் மக்கள் இந்த அபாண்டமான பொய்யை அம்பலப்படுத்தியுள்ளதோடு, பல்வேறு மனித உரிமை-ஜனநாயக அமைப்புகளும் அரசின் அண்டப்புளுகையும் அடக்குமுறைகளையும், போஸ்கோவும் அரசும் கூட்டுச் சேர்ந்து நடத்தியுள்ள சதிகளையும் அம்பலப்படுத்தியுள்ளன.



தொடரும் போலீசின் தாக்குதல்களை எதிர்த்து வெகுண்டெழுந்த இக்கிராமங்களின் பெண்கள், தின்கியா பஞ்சாயத்திலுள்ள கோவிந்தபூர் கிராமத்தில் குவிக்கப்பட்டுள்ள போலீசு மற்றும் துணைராணுவப் படைகளை வெளியேற்றக் கோரியும், வெடிகுண்டுகளை வீசி போராளிகளைக் கொன்றொழித்த போஸ்கோவின் அடியாட்களைக் கைது செய்து தண்டிக்கக் கோரியும் மார்ச் 7-ஆம் நாளன்று எழுச்சிமிகு ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். இப்போராட்டத்தைக் கொடூரமாக ஒடுக்கிய போலீசு, பெண்களின் ஆடைகளைக் கிழித்து அரை நிர்வாணப்படுத்தி அவமானப்படுத்தியது. ஆனாலும், தங்களது போராட்டத்தில் உறுதியாக நிற்கும் பெண்கள், போலீசும் அதன் அடியாட்களும் ஆடைகளைக் கிழித்து பெண்களை அவமானப்படுத்துவதால், இனி முழு நிர்வாணப் போராட்டம் நடத்துவதைத் தவிர வேறு வழியில்லை என்று அறிவித்தனர். போலீசோ, ஆபாசத் தடைச் சட்டத்தின் கீழ் அரை நிர்வாணப் போராட்டம் நடத்தியதாகப் பொய்க்குற்றம் சாட்டி போராடும் பெண்களைக் கைது செய்து சிறையிலடைத்துள்ளது. குண்டுத் தயாரிப்பில் ஈடுபட்டார் என்று பொய்க்குற்றம் சாட்டப்பட்டு போஸ்கோ எதிர்ப்புப் போராட்டக் குழுவின் தலைவரான அபய் சாகு, கடந்த மே 11 அன்று புவனேஸ்வர் விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். கிரிமினல் குற்றவாளியாகச் சித்தரிக்கப்படும் அவருக்கு ஒடிசா உயர் நீதிமன்றம் பிணை வழங்க மறுத்துள்ளது.



இந்திய அரசு மக்களுக்கான அரசோ, ஜனநாயக அரசோ அல்ல; அது பன்னாட்டு மூலதனத்தைக் காப்பதற்காக சொந்த நாட்டு மக்களையே பலியிடும் கார்ப்பரேட் நலன்களுக்கான அரசுதான் என்பதையே ஒடிசாவில் தொடரும் மக்கள் போராட்டம் மீண்டும் நிரூபித்துக் காட்டுகிறது. நடந்து கொண்டிருப்பது தனியார்மய-தாராளமயத் தாக்குதல் எனும் மறுகாலனியாதிக்கப் போர். இக்கொடிய போரில் எதிரியை வீழ்த்துவது ஒன்றுதான் நாட்டு மக்களின் முன்னுள்ள ஒரே வழி. தனியார்மய- தாராளமயத்தைத் தீவிரமாகச் செயல்படுத்திவரும் அரசுக்கு எதிரான போராட்ட ஒற்றுமையைக் கட்டியமைப்பதுதான் இன்றைய அவசர அவசியத் தேவை.

கதிர்



# நெற்களஞ்சியத்தைக் கவ்வவரும் பேரபாயம்! பேரழிவு!!

தஞ்சை மற்றும் திருவாரூர் மாவட்டங்களைச் சேர்ந்த கும்பகோணம், பாபநாசம், நீடாமங்கலம், மன்னார்குடி உள்ளிட்ட எட்டு வட்டங்களில் 667 சதுர கி.மீட்டர் பரப்பளவில் பூமிக்கடியில் புதைந்து கிடக்கும் மீத்தேன் வாயுவை எடுக்கும் திட்டத்தைச் செயல்படுத்த முனைந்துள்ளது, மைய அரசு. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, தி.மு.க. ஆட்சிக் காலத்திலேயே அதன் ஒப்புதலோடு இத்திட்டத்திற்கான ஒப்பந்தங்கள் முடிவாகி, மீத்தேனை எடுக்கும் உரிமம் கிரேட் ஈஸ்டர்ன் எனர்ஜி கார்ப்பரேஷன் என்ற கார்ப்பரேட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. விவசாயிகளுக்கும் மக்களுக்கும் தெரிவிக்காமல், அவர்களின் கருத்தையும் கேட்காமல், மிகவும் கமுக்கமாக வைக்கப்பட்டிருந்த இந்தத் திட்டம், தற்பொழுது மீத்தேனை எடுப்பதற்காக 50 இடங்களில் ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டு வருவதையடுத்து அம்பலத்திற்கு வந்துவிட்டது.

வளர்ச்சி என்ற பெயரில் கொண்டுவரப்படும் இத்திட்டத்தைத் தமிழக நெற்களஞ்சியத்தின் மீது வீசப்படும் அணுகுண்டு என்றே கூறலாம். ஏனென்றால், இத்திட்டத்தைச் செயல்படுத்த தஞ்சை, திருவாரூர் மாவட்டங்களில் ஏறத்தாழ 1,66,210 ஏக்கர் பூமி விவசாயிகளிடமிருந்தும் பொதுமக்களிடமிருந்தும் அபகரிக்கப்படும். மீத்தேனை எடுத்துச் செல்லும் குழாய்களும் விளைநிலங்களில்தான் பதிக்கப்படும். கண்ணுக்குத் துலக்கமாகத் தெரியும் இந்த நேரடிப் பாதிப்பைவிட, இத்திட்டத்தால் ஏற்படும் மற்ற பாதிப்புகள் காவிரிப் படுகை விவசாய பூமியை அழித்துவிடும் அபாயம் நிறைந்தவையாகும்.

பூமியில் புதையுண்டு கிடக்கும் மீத்தேன் வாயுவை எடுக்க வேண்டுமெனில், முதலில் அப்பூமிக்கடியில் உள்ள நிலத்தடி நீரை, ஒருசொட்டுக் கூட விடாமல் ஆழ்குழாய்கள் மூலம் உறிஞ்சி வெளியேற்ற வேண்டும். 500 முதல் 1,500 அடி வரை ஆழ்குழாய்களை இறக்கி நிலத்தடி நீர் உறிஞ்சப்படும்பொழுது, தஞ்சை, திருவாரூர் மாவட்டத்திலுள்ள நிலத்தடி நீர் தொகுப்புகள் அனைத்தும் வறண்டு போகும். காவிரி நீர்ச் சிக்கலால் நிலத்தடி நீரை நம்பி விவசாயம் செய்ய வேண்டிய நிலைக்கு டெல்டா பகுதி விவசாயிகள் தள்ளப்பட்டுவரும் நிலையில், நிலத்தடி நீரும் வறண்டு போகும் சூழ்நிலையும் உருவானால், அவர்கள் விவசாயத்தை அறவே கைவிட்டு வெளியேற வேண்டியதுதான்.

இதுவொருபுறமிருக்க, 1,500 அடி ஆழத்திலுள்ள நிலத்தடி நீர் உறிஞ்சப்படும்பொழுது, அங்கு ஏற்படும் வெற்றிடத்தில் கடல் நீர் உள்ளே புகும். இதனால் முப்போகம் விளையக்கூடிய வளம் நிறைந்த டெல்டா பகுதி விளைநிலங்கள், விவசாயத்திற்கு லாயக்கற்ற உவர் நிலமாக மாறும். மேலும், 1,500 அடி வரை தோண்டி உறிஞ்சப்படும் நிலத்தடி நீர் பலவிதமான இரசாயன உப்புகள் கலந்த மாசடைந்த நீராக இருக்கும். இந்த மாசடைந்த நீரை, காவிரி நீரைக் கொண்டு வரும் வாய்க்கால்கள் வழியாக வெளியேற்றும்பொழுது, அது வயல்வெளிகள், கிணறுகள் உள்ளிட்டு அனைத்தையும் மாசுபடுத்திவிடும்.

''இத்திட்டத்தால் டெல்டா பகுதி விவசாயம் மட்டுமல்ல, சென்னை, இராமநாதபுரம், திண்டுக்கல், திருப்பூர் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் பாதிக்கப்படும்; பல்லுயிர்ப் பெருக்கத்துக்கு ஆதாரமாக விளங்கும் காவிரி சமவெளிப் படுகை நாசமாகி உயிர்ச்சங்கிலி அறுந்துபோகும்'' என எச்சரிக்கிறார், காவிரி சமவெளி மக்கள் பாதுகாப்பு இயக்கத்தைச் சேர்ந்த சிவராமன்.

இந்த மீத்தேன் வாயு மிஞ்சிப்போனால் ஒரு ஐம்பது, அறுபது ஆண்டுகள் வரை கிடைக்கலாம். அதற்காக, ஈராயிரம் ஆண்டுகளாக நடந்துவரும், பல இலட்சம் பேருக்கு வாழ்வாதாரமாக இருந்துவரும் தமிழகத்தின் நெற்களஞ்சியத்தைக் காவு கொடுப்பதை அனுமதிக்க முடியுமா? என்பதுதான் நம் முன் எழுந்துள்ள கேள்வி. ''புற்றுநோயைத் தொடக்கத்திலேயே அழித்துவிடுவதுதான் எளிதானது, புத்திசாலித்தனமானது'' என்பது தமிழக மக்கள் அறியாத விசயமல்லவே!

